உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 27 சனிக்கிழமை (13.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 352

# வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை அரசமைப்பில் உறுதி செய்வதே தீர்வுக்கு வழி

## பேராசிரியர் சிற்றம்பலம் ஆணைக்குழு முன் ஆணித்தரமாகச் சாட்சியம்



யாழ்ப்பாணம், நவம்பர் 13

**வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகம் என்பதை அரசமைப்பில் உறுதிசெய்வதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்று வாழ்நாள் பேராசிரியரும், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.**

யாழ். செயலகத்தில் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழு முன் பேராசிரியர் நேற்று சாட்சியம் அளித்தார். காரசாரமான அவரது சாட்சியத்தில் தெரிவிக் கப்பட்டதாவது:-

மத்தியில் தேசிய இனத்துடன் அதிகாரப் பரவலாக்கி மாநிலத்தில் சுயாட்சிகொண்ட சமஷ்டி அரசமைப்பை உருவாக்குவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண முடியும்.

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கள் மூலம் எல்லா நன்மைகளையும்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் உதயனின் பணிக்குப் பாராட்டு



யாழ்ப்பாணம்,நவ.13

பல நெருக்கடிகள் தடைகள் மத்தியிலும் கருத்து சுதந்திரத்தைப் பேணுவதற்காக உதயன் பத்திரிகையை நீங்கள் தொடர்ந்து வெளியிட்டு வருவதற்காக நான் உங்களைப் பாராட்டுகின்றேன் - இவ்வாறு தெரிவித் தார் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர சீ.ஆர்.டி. சில்வா.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக் கிழமை மாலை இடம் பெற்ற போது உதயன் பிரதம ஆசிரியர் அளித்த சாட்சியத்திற்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் செய்தியை மக்களுக்கு வழங்குவதற்காக உங்கள் பத்திரிகை அளப்பரிய பணியை செய்திருக்கின்றது. இந்த நாட்டினுடைய ஜனநாயக செயற்பாட்டுக்காக நீங்கள் ஆற்றிவரும் பங்கை உண்மையாகவே மதிக்கின்றோம்.

மீள் இணக்கம் என்ற முக்கியமான பிரச்சினை தொடர்பாக அறிந்து கொள்வதற்கும், நீடித்த தீர்வை அடைவதற்கும் நாங்கள் வழங்கப்போகின்ற இறுதி அறிக்கைக்கு உங்கள் கருத்துக்கள் பெருமளவு உதவும் என நாம் நம்புகின்றோம் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி.சில்வா கருத்து வெளியிட்டார்.

உதயன் பத்திரிகையை ஆரம்பித்த காலத்திலிருந்து பல இடுக்கண்கள், அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள், பத்திரிகையாளர்களின் உயிரிழப்புக்கள், பணியாளர்களின் உயிரிழப்புக்கள், உடைமை இழப்புக்கள் மத்தியிலும் மக்களுக்கு தகவல் சொல்லும் ஜனநாயகப் பணியைச் செய்துவருவதாகவும் -

உதயனுக்கு மக்கள், வாசகர்கள் தரும் பலமே அதற்குப் பக்கதுணை என்றும் - ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கையில் உதயனின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தெரிவித்திருந்தார். (ஒ-14-15)

## சிங்களக் குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம் காணாமற்போனோர் குறித்து முறைப்பாடுகள்

### நல்லிணக்க ஆணைக்குழு முன் நேற்றுப் பலர் சாட்சியம்

யாழ்ப்பாணம், நவம்பர் 13

நல்லிணக்க ஆணைக்குழு நேற்று யாழ்ப்பாணம், அளவெட்டி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் விசாரணைகளை நடத்தியபோது நூற்றுக்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளித்தனர். சிங்களக் குடியேற்றம், வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் கைதாகி காணாமற் போனோர் குறித்தும், மற்றும் பல விடயங்கள் குறித்தும் பலரும் இந்த விசாரணைகளின்போது பிரஸ்தாபித்தனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மக்களுக்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு நேற்று அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் இடம் பெற்றது.

அப்போது நாவற்குழி சிங்களக் குடியேற்றம் தொடர்பாகவும், உயர் பாதுகாப்பு வலயம் குறித்தும் பலர் சாட்சியம் அளித்தனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் அபிலாசைகள் இன்னும் மாறவில்லை ஜனநாயக வழியில் அவர்களின் முயற்சி தொடரும்

### நல்லிணக்க ஆணைக்குழுமுன் சி.வி.கே.

யாழ்ப்பாணம், நவ. 13

யுத்தம் முடிவடைந்தபோதும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் இன்றும் மாறவில்லை. அவர்கள் தமது அபிலாஷைகளை ஜனநாயக வழியில் அடைய உலகத்திலுள்ள அனைத்து வழிகளிலும் முயற்சிப்பார்கள்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் தமிழரசுக் கட்சிப் பிரமுகருமான சி.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுமுன் நேற்று சாட்சியம் அளிக்கையில் அவர் மேலும் கூறியவை வருமாறு :-

இந்த நாட்டில் தாம் ஒதுக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்று தமிழ் மக்கள் உறுதியாக உணர்கிறார்கள். ஆட்சி அதிகாரத்தில் தமக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்று நினைக்கிறார்கள். உதாரணத்துக்கு கடந்த 60 வருட காலத்தில் அமைச்சரவையை உற்று நோக்கினால் இது விளங்கும். அந்த அமைச்சரவை எதிலும் தமிழர்களுக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்படவில்லை. தபால் அமைச்சு மற்றும் இந்து கலாசார அமைச்சுப் பதவிகளே வழங்கப்பட்டன. அதுவும் அவர்கள் ஆளும் கட்சிகளுக்கு வழங்கிய ஆதரவுக்காகத்தான். இன்றைய அமைச்சரவையில்



(24 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் புலித் தடை 2 ஆண்டுகளுக்கு நீடிப்பு

புதுடில்லி, நவ.13

இந்தியாவில் தொடர்ந்து அச்சுறுத்தல் இருந்து வருவதால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது செல்லுபடியாகும் - என்று டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான தீர்ப்பாயம் நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்ட தடை நீடிக்கப்பட்டதை ரத்துச் செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கு விசாரணை, டில்லி, சென்னை மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணை மீண்டும் டில்லியில் உயர் நீதிமன்ற நீதிபதி விக்ரம்ஜித்தில் நடைபெற்றது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி சிங்களக் குடியேற்றம்: சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வு

கொழும்பு, நவ. 13

யாழ். நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறிய சிங்களக் குடும்பங்கள் தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து தமிழ்த் தரப்புகள் ஆராய்ந்து வருகின்றன எனத் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களவர்கள் யாழ். ரயில் நிலையத்தில் சில மாதங்கள் தங்கி இருந்தார்கள். எனினும், திடீரென்று சில தினங்களுக்கு முன்னர் நாவற்குழியில் (24 ஆம் பக்கம் பார்க்க)

தனித்துவமான வண்ணங்கள் கொண்ட டையில்களால் உங்கள் மனையை அழகு படுத்துவதற்கு

நவீன் செரமிக்



Naveen Ceramic
212, Palaly Road, Jaffna. PVT LTD
Tel : 212220033 / 212220044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் காரணமாக

# படகு அகதிகள் தொடர்பான கொள்கையில் மாற்றம் வரும்

கொழும்பு, நவ.13

ஆஸ்திரேலியாவில் மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பில் வழங்கிய தீர்ப்பு காரணமாக ஆஸ்திரேலியாவின் படகு அகதிகள் தொடர்பான கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கருத்தை ஆஸ்திரேலியாவின் 'தி டெய்லி டெலிகிராவ்' வெளியிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்புக் காரணமாக ஆஸ்திரேலியாவில் அகதிகள் தொடர்பான நடைமுறைகள் முழுமையாக மாற்றப்பட வேண்டியுள்ளன.

அத்துடன் கிறிஸ்மஸ் தீவில் அகதிகள் அதிக காலம் தடுத்து வைக்கப்படுவதும் செயலிழந்த சட்டமாக மாறவுள்ளது.

இதுவரை காலமும் படகில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்லும் அகதிகளுக்கு அந்த நாட்டின் சட்டத்தின்படி அல்லாமல் மாற்று வகையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் ஆஸ்திரேலியா பிரதான நிலப்பகுதிகளில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்ற நிலைமை காணப்பட்டது.

எனினும், நேற்று முன்தினம் இலங்கைத் தமிழர்கள் இருவர் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் ஆஸ்திரேலியாவின் இந்தக் கொள்கைக்கு முடிவு ஏற்பட்டுள்ளது என 'தி டெய்லி டெலிகிராவ்' தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்ப்பின்படி கிறிஸ்மஸ் தீவிலும் வேறிடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பரப்பில் உள்ள நீதிமன்றங்களில் அகதி அந்தஸ்து கோரி மேன்முறையீடு செய்ய முடியும்.

ஆஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சரின் கருத்துப்படி, இந்தத் தீர்ப்பினால் படகுகளில் வரும் அகதிகள் ஏனையவர்களைப் போல நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய பிரதான நிலப்பரப்புக்கு அப்பால் உள்ள சட்ட முறைப்படி இதுவரை காலமும் படகுகளில் வரும் அகதிகள் வானூர்திகளில் வரும் அகதிகளைப்போல் அல்லாமல் மாறுபட்ட வகையில் நடத்தப்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# கொழும்பில் மரங்களை நடுவது எங்கே?

## திணறுகின்றனர் சமுர்த்தி முகவர்கள்

கொழும்பு, நவ.13

கொழும்பில் மரக்கன்றுகளை எங்கே நடுவது? அதை எங்கு கொள்வனவு செய்வது? என கொழும்பிலுள்ள சமுர்த்தி முகவர்கள் திணறிக்கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் பதவிப்பிரமாணம் செய்யும் வைபவத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பதினொரு லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளமை தெரிந்ததே. மரம் நடும் வைபவம் நாளை மறுநாள் 15ஆம் திகதி நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடைபெறும்.

மரம் நடும் திட்டம் சமுர்த்தி முகவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு சமுர்த்தி முகவர் நூறு மரக்கன்றுகளை பொதுமக்களின் உதவியுடன் அதை குறித்த நாளில் குறித்த நேரத்தில் நடுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள சமுர்த்தி முகவர்களுக்கு மரக் கன்றுகளை கொள்வனவு செய்வதோ அல்லது நடுவதற்கு ஏற்பாடு செய்வதோ பிரச்சினையாக இருக்காது. ஆனால் மரக் கன்றுகளை நடுவதற்கு இடவசதியற்ற கொழும்பு நகர சமுர்த்தி முகவர்கள் மரக்கன்றுகளை என்ன செய்வது எனத் தெரியாமல் தவிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மரக்கன்றுகளை வாங்கும் பொறுப்பு கொழும்பிலுள்ள 450 சமுர்த்தி முகவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் 4,500 மரக்கன்றுகளை எங்கே வாங்குவது எனத் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவர்களுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே அறிவிக்கப்பட்டதுடன் மரக்கன்றுகளைக் கொள்வனவு செய்யப் பணமும் வழங்கப்படவில்லையாம்.

### யுத்தத்தில் இறந்தோருக்கும் காணாமற்போனோருக்கும்

# இறப்புச் சான்றிதழ் வழங்கும் சட்ட மூலம் நிறைவேறியது

கொழும்பு, நவ.13

யுத்தம் காரணமாகக் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களுக்கு சம்பவம் நடைபெற்று ஒரு வருடத்தின் பின்னர் இறப்புச் சான்றிதழ் வழங்கும் சட்டமூலம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இறப்பைப் பதிவு செய்யும் (தற்காலிக ஒழுங்கு விதிகள்) என்ற இந்தச் சட்டமூலம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத மோதல்கள் மற்றும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்லது மக்கள் கிளர்ச்சி காரணமாக ஏற்பட்ட சிவில் கலவரங்களில் பலர் கொல்லப்பட்டும், காணாமல் போயுமுள்ளனர்.

அத்துடன், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு மேலும் பலர் உயிரிழந்துள்ளனர். இருந்தும், தற்போதுள்ள இறப்பு மற்றும் பிறப்பு பதிவு செய்யும் சட்டமூலத்தில் இதற்கான ஷரத்துகள் இல்லாத காரணத்தால் புதிதாக இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

இறப்பைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்போர் காணாமல் போனவர் அல்லது கொல்லப்பட்டவர் இறுதியாக வாழ்ந்த அல்லது அவரது நிரந்தர இருப்பிடம் உள்ள மாவட்டத்தின் இறப்பு மற்றும் பிறப்பு தொடர்பான மாவட்டப் பதிவாளரிடம் விண்ணப்பிக்க முடியும்.

## இலங்கை நீதிபதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

இலங்கை நீதிபதிகளுக்கு இந்தியா விசேட பயற்சிகளை வழங்க முன் வந்துள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இந்தியா மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையே ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கை நீதிபதிகளுக்கு மேலதிக பயற்சிகள் பெங்களூர் மற்றும் போப்பால் ஆகிய நகரங்களில் வழங்கப்படவுள்ளன.

நீதி அமைச்சர் அத்தாவுட செனவிரட்னவிற்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அஷோக்காந்தாவிற்கும் இடையே இடம்பெற்ற பேச்சு ஒன்றை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வெலிக்கடைச் சிறையில் பாதுகாப்புக் 'கமெரா'

கொழும்பு, நவ.13

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நோக்கில் சிறைச்சாலையில் பாதுகாப்பு 'கமெரா'க்களைப் பொருத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸாருக்கும் கைதிகளுக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வெலிக்கடையில் மோதல் ஏற்பட்டது. இதனால் சிறைச்சாலை யுத்தக்களமாக மாறி ஐம்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார் காயமடைந்தனர். இந்நிலையிலேயே அரசு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலையில் கமெராக்களைப் பொருத்துவது குறித்து விரைவில் பகிரங்க விலைமனுக்கோரல் விடப்படும் என்றும் கண்காணிப்பு கமெராக்களைப் பொருத்துவதன் மூலம் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க முடியும் என்றும் சிறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையிலுள்ள சகல சிறைச்சாலைகளுக்கும் விரைவில் கனடாவில் உள்ள சிறைச்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமெராக்களை ஒத்த கமெராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர அண்மையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் ரூ.4 கோடி 20 லட்சம் நிதி

கொழும்பு, நவ. 13

வடக்கு, கிழக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக ஜப்பானிய அரசு 4 கோடி 20 லட்சம் ரூபா நிதி உதவியை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த நிதி கிளிநொச்சி மாவட்டத்தில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக பயன்படுத்தப்பட உள்ளது எனத் தெரிய வருகிறது.

அடிப்படை மனித பாதுகாப்பு அமைப்பின ஊடாக இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படுவதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஐயாயிரம் பேர் நன்மை அடைவார்கள் என ஜப்பானியத் தூதுவர் குயினோ தக்காஷி தெரிவித்துள்ளார்.

அடிப்படை மனித பாதுகாப்பு அமைப்பு 1989 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொண்டுகளை மேற்கொண்டு வருகிறது எனவும், அது 208 திட்டங்களுக்காக 280 கோடி ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், வாழ்வாதாரத்தை உயர்த்துதல், கிராம மக்களின் பொருளாதார இயலுமையை மேம்படுத்தல் போன்றவற்றுக் காக குறித்த ஜப்பான் நிறுவனம் [illegible]

# குறிகாட்டுவான் நெடுந்தீவு சேவைக்கு கொழும்பில் புதிய படகு நிர்மாணம்

யாழ்ப்பாணம், நவ. 13

குறிகாட்டுவான் - நெடுந்தீவுச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வந்த புதிய படகு ஒன்று கொழும்புத் துறைமுக டொக்யாட்டில் 8 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

இதுதொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிப்பதாவது :-

குறிகாட்டுவான் நெடுந்தீவுப் பயணிகளின் போக்குவரத்தினைக் கருத்திற்கொண்டு பெரிய படகொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பொதுமக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு இப்படகுச் சேவை தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க -

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் இப்படகு கொழும்புத் துறைமுகத்தின் டொக்யாட் நிறுவனத்தினால் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் படகுச் சேவை வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-16)

# இலங்கை அகதிப் படகுகள் குறித்து ஆஸ்திரேலியத் தூதரகம் விளக்கம்

கொழும்பு.நவ, 13

'இலங்கை அகதிகளுடன் மேலும் 7 படகுகள் ஆஸி. சென்றன' என்ற தலைப்பிலான 10.11.2010 திகதிய செய்தி குறித்து கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் பின்வரும் விளக்கத்தை அளித்துள்ளது.

இலங்கை அகதிகளைச் சுமந்து கொண்டு 7 படகுகள் ஆஸ்திரேலியாவை வந்தடையவில்லை. உண்மையில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இத்தகைய படகுகள் எதுவும் ஆஸ்திரேலியாவுக்கு வரவில்லை.

இலங்கையர்களை ஏற்றி வந்த கப்பலொன்று அண்மையில் இடருக்குள்ளாகி இந்தோனேசியாவுக்குப் பக்கத்தில் காப்பாற்றப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். இக் கப்பலில் வந்த பலர் கடற் பிரயாணத்தின் போது இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதில் உயிர் தப்பியவர்கள் தங்களது பணத்தையும் இழந்து இப்போது இந்தோனேசிய குடிவரவுத் திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பரிதாப சம்பவமானது மனித உயிர்களுக்கு எவ்வித முக்கியத்துவத்தையும் கொடாமல் பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் ஆட்கடத்தல்காரர்களை நம்புவதால் விளையும் ஆபத்துக்களை மீண்டுமொரு முறை நினைவூட்டுகிறது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபாசப் படங்களில் நடித்த பெண்களில் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, நவ.13

ஆபாச இணையத்தளங்களில் தோன்றிய பெண்களில் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றில் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளின் மூலம் பார்வையிடக் கூடிய ஆபாச இணையத்தளங்களில் குறித்த பெண்கள் தோன்றியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது

# படையினரின் கண்மூடித்தனமான ஷெல் வீச்சில் பொதுமக்கள் வகைதொகையின்றி உயிரிழப்பு

## நீர்வேலியில் ஆணைக்குழு முன் சாட்சியம்

யாழ்ப்பாணம், நவ. 13

யுத்தத்தின் இறுதி நாள்களில் அனைத்தையும் இழந்த நிலையில் எஞ்சியிருந்த உயிரையேனும் தக்கவைத்துக் கொள்வதற்காக இடம் பெயர்ந்து ஓடும்போது, அரசால் பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் படையினர் கண்மூடித்தனமாக ஏவிய எறிகணைகளால் ஏராள பொதுமக்கள் உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது -

வகைதொகையின்றி இவ்வாறு வன்னி இறுதிச்சமரின் போது அப்பாவி மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து பொதுமகனான நாகேந்திரம் ரவீந்திரன் (வயது 49) கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதியின் ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளார்.

நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஆணைக் குழுவின் அமர்வின்போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

தமது சாட்சியத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

1996ஆம் ஆண்டு குடாநாட்டிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தபோது எனது குடும்பமும் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றது. அங்கு காலப்போக்கில் பொருளாதார நிலையில் மேம்பட்டவர்களாக - சகல வசதிகளோடும் - வாழ்ந்து வந்தோம். எனினும், படையினர் வன்னி மீது ஆரம்பித்த இறுதி யுத்தத்தின்போது நாங்கள் சேமித்துவைத்திருந்த அனைத்தையும் இழந்துவிட்டு - நிர்வாணமாக நிற்பதைப்போல - இடம்பெயர்ந்து ஓடவேண்டியிருந்தது.

யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்துகொண்டிருந்த நாள்களில் - அதாவது 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி - எனது மகன் பலவந்தமாக ஆயுதப்போராட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டார். அவர் கல்வியில் சிறப்பாக விளங்கியதோடு எந்தவித தீயபழக்கங்களிலும் ஈடுபாடு காட்டியதில்லை. எனவே அழிவைத் தரும் யுத்தத்தில் அவர் மனப்பூர்வமாக இணையவில்லை. எனினும் யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட மே 17ஆம் திகதியன்று எனது மகனை உயிருடன் கண்டதாக எனது குடும்ப நண்பர் என்னிடம் கூறினார். எனவே அதற்குப் பின்னர் சண்டையோ சமரோ நடக்காததால் எனது மகன் உயிரிழப்பதற்கான வாய்ப்புகளெதுவும் இல்லை. அவர் படையினரிடமே சரணடைந்திருக்க வேண்டும். அவரை மீட்டுத் தரவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

நாங்கள் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தபோது அரசாங்கம் பாதுகாப்பு வலயங்களை அறிவித்திருந்தது. உடையார்கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், முள்ளிவாய்க்கால் என்று பல இடங்கள் இவ்வாறு பாதுகாப்பு வலயங் களாக அரசால் அறிவிக்கப்பட்டது. எனினும் இங்கும் எங்களை சாவு துரத்தியது. பாதுகாப்பு வலயத்துக்குள் படையினர் நடத்திய சரமாரியான எறிகணைத் தாக்குதல்களால் எனது குடியிருப்புக்குப் பக்கத்திலிருந்த பலர் உடல்சிதறி இறந்ததை நேரில் கண்டிருக்கிறேன்.

ஒருமுறை 50 ரூபாவுக்கு விற்கப்பட்ட 2 வாய்ப்பனையும், பிளேன்ரியையும் பெறுவதற்கு நீண்ட வரிசையில் நின்றிருந்த அப்பாவிப் பொது மக்கள் மீது படையினர் திடீரென எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். நானும் அந்த வரிசையில் நின்றிருந்தேன். எனக்குப் பக்கத்தில் நின்றிருந்த 35 க்கு மேற்பட்டோர் கண்முன்னாலேயே பரிதாபமாகத் துடிதுடித்துப் பலியாகினர். இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும் பத்திரமாக இருந்த எனது மகனை கடைசிநேரத்தில் தவறவிட்டு விட்டேன்.

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் வன்னி மக்களுக்கு அரசாங்கம் செய்யவேண்டிய கடமைகள் இரண்டு உள்ளன. ஒன்று - அவர்களை பழையபடி பொருளாதார மேம்பாடு அடைவதற்கான வழிமுறைகளை உடனடியாக ஏற்படுத்துதல். இரண்டாவது - எமது சொத்துக்களை விடவும் உயர்ந்த - உயிரினும் மேலான எமது பிள்ளைகளையும் உறவுகளையும் தடுப்பு முகாம்களிலிருந்து உடனடியாக விடுவிக்க வேண்டும். அப்போது தான் எங்களைப் போன்ற அப்பாவிகளின் கண்ணீருக்கு முற்றுப்புள்ளி ஏற்படும்.- என்றார்.

## கோப்பாயில் நாளை சுகாதார கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.13

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரக் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், யாழ்.பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் சி.சிவராணி, பிராந்திய மலேரியா தடைபிரிவு வைத்திய அதிகாரி த.சிவபாதம், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி. சித்திரவடிவேல், கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி அதிபர் இ.இராசசேகரம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-16)

## மானிப்பாயில் இசை நிகழ்ச்சி

இலங்கை இராணுவத்தினரின் 513 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் சிமிக், மஞ்சி பிஸ்கட் நிறுவனங்களின் அனுசரணையுடன் இசை நிகழ்ச்சி இன்று மாலை 6.30 மணி முதல் 11.30 மணிவரை மானிப்பாயில் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடைபெறும். (ஒ-16)

# போராளியான கணவர் விஜிதரனை இராணுவத்தினர் கைது செய்ததற்கு எனது சகோதரரே கண்டகாட்சி

## அவரை மீட்டுத் தாருங்கள் என்று அழுது குளறி மன்றாடினார் மனைவி

யாழ்ப்பாணம், நவ.13

இறுதி யுத்தம் ஓய்ந்த பின்னர் எனது கணவன் விஜிதரனை வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினர் கைது செய்ததை எனது சகோதரன் கண்டுள்ளார். ஆனால் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

அவர் எங்கிருந்தாலும் விடுதலை செய்ய உதவுமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குமுன் அழுது குளறியவாறு மன்றாடினார் விஜிதரனின் மனைவி திருமதி அறிவொளி.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறையைச் சேர்ந்தவரான சி.ரவிச்சந்திரன் (விஜிதரன்) என்பவரின் மனைவியான அறிவொளி வட்டுக்கோட்டையில் நேற்று சாட்சிமளிக்கையில் மேற்கண்டவாறு உருக்கமாக வேண்டினார்.

சாட்சியத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போது காயமடைந்த நான் ஐ.சி.ஆர்.சி. நிறுவனத்தின் உதவியுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சென்றடைந்தேன்.

அதன்பின்னர் எனது கணவர் யுத்தம் நடந்த பகுதியில் இருந்து கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி வந்துள்ளார். அவ்வேளை இராணுவம் அவரை கைது செய்துள்ளது. இதனை எனது சகோதரன் நேரில் பார்த்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டனர் என்று பரவலாகக் கதையடிபடுகிறது. அதனால் எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு இரு பெண் பிள்ளைகள். இவர்களை வைத்துக்கொண்டு என்ன செய்யலாம் என்று தெரியாமல் மிகவும் தடுமாறிப் போய் உள்ளேன். கணவர் உயிருடன் உள்ளாரா, இல்லையா என்பது தெரியாமல் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கின்றேன். எனது கணவர் பற்றிய தகவல்களை நீங்கள்தான் அறிந்து சொல்ல வேண்டும் - என்றார். (ஒ-9)



விஜிதரனின் மனைவி கண்ணீர் மல்க சாட்சியம்

# நானும் கொழும்பில் பிறந்தவன் தான் எனக்கும் அரச காணி கிடைக்குமா?

## வட்டுக்கோட்டை வாசி நல்லிணக்க ஆணைக்குழு முன் எழுப்பிய கேள்வி

யாழ்ப்பாணம், நவ.13

நானும் கொழும்பில் தான் பிறந்தேன் அங்கு 8 வருடங்கள் வாழ்ந்துள்ளேன்.எனக்கும் அரசாங்கம் காணி ஒன்றை வழங்குமா?

இவ்வாறு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இ. தாமோதரராஜா நேற்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையில் கேள்வி எழுப்பினார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக மண்டபத்தில் ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று இடம்பெற்றன.இங்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளித்தனர்.

அங்கு தொடர்ந்தும் சாட்சியமளிக்கையில் தாமோதரராஜா மேலும் கூறியதாவது:-


எனது சொந்த இடம் வலி. வடக்கு. தற்போது வட்டுக்கோட்டையில் வசித்து வருகின்றேன். நாங்கள் எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்றும் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் அரசாங்கம் அவ்வாறு நடந்துகொள்ள வேயில்லை. சொந்தக்காணி உறுதியுள்ள வலி.வடக்கு மக்களைச் சொந்த இடத்தில் மீள் குடியேற்றம் செய்யாது அவசர அவசரமாக சிங்களக் குடியேற்றங்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வருகின்றது. திட்டமிட்ட இக்குடியேற்றத்தை அரசு உடன் நிறுத்த வேண்டும்.

நான் கூட கொழும்பில் பிறந்து 8 வருடங்களாக அங்கு தான் வாழ்ந்தேன். அதற்காக கொழும்பில் உள்ள அரச காணி ஒன்றை அரசாங்கம் எனக்கு வழங்குமா?

யாழ்ப்பாணத்தில் பல கொலைகள் நடந்திருக்கின்றன. அவை எவற்றுக்கும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவும் இல்லை -என்றார்.

இந்த விசாரணைகளின் போது காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளித்தனர்.

இதேவேளை தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான விசாரணைகள் நேற்றுக் காலை 9 மணியளவில் அளவெட்டி மாகஜன சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் 35 க்கு மேற்பட்டோர் சாட்சியம் அளித்தனர். (ஒ-9)



வட்டுக்கோட்டையில் தாமோதரராஜா சாட்சியம்

# எனது கணவரை துரத்திப்பிடித்து வெள்ளைவானில் ஏற்றிச் சென்றனர்

## அவர் திரும்பிவரவில்லை என்கிறார் முஸ்லிம் பெண்

யாழ்ப்பாணம், நவ.13

நீர்கொழும்பில் வைத்து எனது கணவனை ஓட ஓட துரத்திப் பிடித்து வெள்ளை வானில் கடத்திச் சென்றார்கள் என்று கண்ணீர் மல்க அவரது மனைவியான நைனா முகம்மது ரிஷானா நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வுகள் சீ. ஆர். டி. சில்வா தலைமையில் ஆரம்பமானது.

மாதர் அமைப்பைச் சேர்ந்த சிலரும் அங்கு சாட்சியம் அளித்தனர்.

அதன் உறுப்பினர்களில் ஒருவரான நைனா முகம்மது ரிஷானா சாட்சியம் அளிக்கையில் மேலும் கூறியதாவது:-

எனது கணவரின் சொந்த இடம் யாழ்ப்பாணம். ஆனால்

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மேலதிகப் பணிப்பாளர் திரு. வெ.சுந்தர லிங்கம் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி தம்பிராஜா சிவபாக்கியம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தொழில்நுட்பவியல் கல்லூரி,
கல்லூரி மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா இராசதுரை



புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை இராசம்மா அவர்கள் நேற்று (12.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், இராதுரையின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம், உதவிப் பிரதேச செயலர், வலி. கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்) அன்பு மனைவியும், திலீபன் (சுவிஸ்), குமணன் (கனடா), மேகலா மதிவண்ணன் (ஊடக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பா ணம்), மீரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரேமாவதி, தாரணி, மதிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லத்துரை, சிவநாதன், தங்கராசா, பாலகிருஷ்ணன், அரசரத்தினம், இராமகிருஷ்ணன், பிருந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2010) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
புத்தூர்.

(வி/572827)

தகவல்:
இராசதுரை (கணவன்)

### இளையவி அண்ணாமலை

*(ஓய்வுபெற்ற நிலஅளவையாளர்)*



கோயிற்புலம், தெல்லிப்பழை கிழக் கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி அண்ணாமலை (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்கள் நேற்று (12.11.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம் அவர்களின் அன்புக் கணவரும், உமா, ராதா (ஜேர்மனி), அருட்குமரன், அருள்மைந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினவடிவேல் (கட்டார்), மணிவரதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நடராசா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், தம்பிநாதன், பரஞ்சோதிநாதன், ஜெயபாலன், சோபியா ஆகியோரின் மைத்துனரும் நில்ஸ், கதிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயிற்புலம்,*
*தெல்லிப்பழை கிழக்கு.*

(105913)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தியாகராஜா தெய்வானை (பவளம்)



கல்வளை சதுக்கம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா தெய்வானை (பவளம்), நேற்று (12.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (பிரான்ஸ்), சண்முகேஸ்வரி (சுவிஸ்), கிருஷ்ணராஜா (உதவி மேற்றன், வேலணை மத்திய கல்லூரி), கிருஷ்ணேஸ்வரி (சுவிஸ்), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் தர்மலிங்கம் (இலங்கை) காலஞ்சென்ற காண்டீபன், இராஜகுலசேகரம் (சுவிஸ்), கதிர்காமநாதன் (பிரான்ஸ்), ஜெயகௌரி ஆகியோரின் மாமியும் நந்தகோபாலன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்), மோகனவதனி, சுரேஸ்குமார் (பிரான்ஸ்), நேசகுமார் (சுவிஸ்), வரதராஜா (சுவிஸ்), றம்மியா (சுவிஸ்), சுகந்தன், லக்ஷனா, மிருனா (சுவிஸ்), மிதுர்ஷன் (சுவிஸ்), கௌசிகா (பிரான்ஸ்), கதிர்ணா (பிரான்ஸ்), ஆர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் தரணிகன் (பிரான்ஸ்), கீர்த்திகன் (பிரான்ஸ்), விதுஷா (பிரான்ஸ்), தேனுஷன் லிவிஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கி. சுகந்தன் (பேரன்)

# தமது விடுதலைக்கு உதவுமாறு ஸ்ரீரங்காவுக்கு கைதிகள் கடிதம்

கொழும்பு,நவ.13

தங்கள் விடுதலைக்கு உதவுமாறு மகசின் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரீரங்காவுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

அதன் விவரம் வருமாறு :-

மகசின் சிறைச்சாலையில் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் தங்களிடம் கண்ணீருடன் இக்கோரிக்கையை முன்வைக்கிறோம்.

தமிழ் அரசியல் கைதிகள் பற்றி பல தடவைகள் மின்னல் நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாது பல இடங்களிலும் பேசி உங்களால் இயன்ற செயற்பாடுகளைச் செய்துள்ளீர்கள்.

வடக்கிலிருந்து தெற்குவரை நாட்டின் சகல பாகங்களுக்கும் சென்று பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கும் நீங்கள், பல வருடங்களாகத் தடுப்புக் காவலில் இருக்கும் எங்களின் நிலைமை குறித்தும், விடுதலை குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுங்கள். உங்கள் வார்த்தைக்குக் கட்டாயம் எமது ஜனாதிபதி செவிசாய்ப்பார்.

மலையக மக்களின் துயர் துடைக்கும் உங்கள் கரங்கள் எங்கள் துயரைத் துடைக்காதா?

எமது விடுதலை தொடர்பாக ஜனா திபதியிடம் நீங்கள் எடுத்துரையுங்கள். எங்களை பிணையிலாவது செல்ல வாய்ப்பேற்படுத்தித் தாருங்கள்.

எவ்வளவோ நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி ஏன் எங்கள் விடயத்தில் மட்டும் இன்னும் கரிசனை காட்டவில்லை. பல வருடங்களாக சிறைச்சாலை யில் இருக்கும் நாங்கள் வாழ் நாள் முழுவதையும் சிறையில்தான் கழிக்க வேண்டுமா?

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்திலாவது எங்கள் அனைவருக்கும் விடுதலை கிடைக்க வழியேற்படுத்தித் தாருங்கள். ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சிக் காலத்திலாவது எங்கள் குடும்பங்களுடனும், உறவுகளுடனும் சேர்ந்து வாழ ஆசைப்படுகிறோம். எங்கள் மீது கருணை காட்டுங்கள். பல வழிகளில் பல பேருடன் விடுதலை தொடர்பான கோரிக்கைகள் தோற்றுப்போயுள்ள நிலையில் இறுதியில் உங்கள் முன் இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறோம்.

- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## புனரமைப்புப் பணிகளுக்கு 4 கோடி டொலர் நிதியுதவி

கொழும்பு,நவ.13

போரால் பாதிப்படைந்த பிரதேசங்களின் புனரமைப்பு பணிகளுக்கு உலக உணவுத் திட்டம் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக,உலக உணவுத் திட்டம் 4 கோடி அமெரிக்க டொலர்கள்வரை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என இலங்கைக்கான ரோம் தூதரகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்படைந்த பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே இந்த நிதி செலவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 3 இலட்சத்து 71 ஆயிரம் பேர் நன்மையடைவர் எனக் கூறப்படுகிறது.

(சி)

## 2789 கைத்தொலைபேசிகளுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 13

துபாயிலிருந்து சட்டவிரோதமாகக் கையடக்கத் தொலைபேசிகளை இலங்கைக்கு கொண்டுவர முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்பது லட்சம் பெறுமதியான 279 கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாகக் கொண்டுவர முற்பட்ட போது சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மாத்தறையைச் சேர்ந்தவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

(சி)

**எனது ...**

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் புத்தளத்தில் வசித்து வந்தோம். எனது கணவர் 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி நீர்கொழும்பில் வைத்து இனந்தெரியாதவர்களினால் வெள்ளை வானில் கடத்தப்பட்டார்.

இன்று வரை அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று கூடத் தெரியாது. இது தொடர்பாக 2007 ஆம் ஆண்டு மே மாதம் அமைச்சர் இராதா கிருஷ்னன் மூலமாக ஜனாதிபதியையும் சந்தித்து கோரிக்கை வைத்தேன். ஆனால் இன்றும் அவர் வந்து சேரவில்லை.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் யாழ். மாவட்ட அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் **திரு. க. இராசதுரை** அவர்களின் அன்பு மனைவியார்



**திருமதி. இராசதுரை இராசம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும் உத்தியோகத்தர்களும்
UN - HABITAT
யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு

## கண்ணீர் அஞ்சலி



**கிறிஸ்ரி பீற்றர் சவுந்திரநாயகம்**

எமது திரைப்பட அரங்கில் ஒப்பிறேற்ரராக பணியாற்றிய கிறிஸ்ரி பீற்றர் சவுந்திர நாயகம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக் காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்

மனோகரா தியேட்டர்,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும்,
பணியாளரும்

## நன்றி நவில்லும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் திருமதி

**இராஜேஸ்வரி இராசரத்தினம்**

தோற்றம் : 18.07.1947 மறைவு: 15.10.2010

கடந்த 15.10.2010 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள எமது இல்லங்களிற்கு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோ ருக்கும் வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த வைத்தியர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.11.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அவ்வேளையில் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible], இணுவில் தெற்கு.
தொ. பே. 021 320 6797

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நல்லிணக்கத்துக்கு உரிய செயலல்ல

நாட்டில் போர் ஓய்ந்துவிட்ட நிலையில் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளில் அரசும் அதனைச் சார்ந்த அமைப்புகளும் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு, கிழக்குக்கு அமைச்சர்கள் வருகிறார்கள், அதிகாரிகள் வருகிறார்கள். வங்கித் தலைவர்கள் வருகிறார்கள். அதையும் இதையும் திறந்து வைக்கிறார்கள். வர்த்தக அமைப்புக்கள் எல்லாம் முண்டியடித்துக் கொண்டு தமது கிளைகளைத் திறந்து மக்களை நோக்கி தம் பொருள்களின் சிறப்பை விலை பேசுகின்றன.

இத்தோடு போகவில்லை, போரின்போது இடம் பெற்றுவிட்ட அழிவுகளையும், நாசங்களையும் ஆசைதீர பார்த்துக்கொண்டு போக தென்னிலங்கையில் இருந்து உல்லாசப் பயணிகளும் திரண்டு வருகிறார்கள். சும்மாசொல்லக் கூடாது நயினாதீவு போன்ற யாத்திரைத் தலங்களை தரிசித்துப் பக்தி பூர்வமாக வணங்கிக் கொண்டு செல்பவர்களும் இவர்களிலும் இல்லாமல் இல்லை. முன்னர் அழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்தை பார்க்க வருபவர்களும் உண்டு. அது மீண்டும் பழைய பொலிவுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றதா என்று பார்க்கவிரும்புவர்களும் உண்டு. பழைய நிகழ்வுகளை நினைவுறுத்தி, முறுகிக்கொண்டு போகிறவர்களும் உண்டு, அம்மாதிரி நிகழ்வு ஒன்று அண்மையில் யாழ். நூலகத்தில் இடம்பெற்றமை நினைவிருக்கலாம்.

ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான பண்பற்ற செயல்கள், அடாவடித்தனங்களைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளாதபோதும், அவர்களின் அநாகரிகமான செயல்களால் அரசுக்கு நெருக்கடிகளும் தலைகுனிவும் ஏற்படுவது தவிர்க்க முடியாதவை.

அதைத் தொடர்ந்தே ஆனையிறவுத் தடை முகாமில் வைத்து குடாநாட்டுக்கு வருகின்ற தென்னிலங்கை மக்களுக்கு ஒழுக்கநெறிகள் அடங்கிய ஆலோசனைக் குறிப்பேடு வழங்கப்படுகிறது எனக் கொள்ளலாம்.

இவ்வாறான நிலைமையிலும், குடாநாட்டில் இவ்வாறு நாளும் பொழுதும் இங்கு நடந்தேறும் சம்பவங்களில் ஒன்றாக, யாழ். ரயில் நிலையத்தில் வந்து தங்கி, தம்மை இங்கு குடியேற்றும்படியும், வேலைவாய்ப்புகளைத் தரும்படியும் விதண்டாவாதம் புரிந்த பெரும்பான்மை இன சமூகத்தவர்களின் நடவடிக்கைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வடக்கில் பல வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்களாம், தொழில் செய்தவர்களாம், வீடு வாசல் வைத்திருந்தவர்களாம் இவர்கள்.

உண்மையாகவே இவர்கள் இங்கு வாழ்ந்து வன்முறையால் வெளியேறியவர்கள் என்றால் - அதற்கான ஆதாரங்களை முன்வைத்து முறையாக தமது உரிமையை நிலைநாட்ட முயன்றிருக்க வேண்டும். அதற்கு இங்குள்ள மக்களும் ஆதரவு வழங்குவார்கள். ஆனால் அதிகாரிகளின் ஆதரவுடன் அடாவடித் தனங்களில் இறங்குவது நியாயத்துக்குப் புறம்பான செயல்.

ரயில் நிலையத்தில்தான் இருக்கிறார்கள் என்றால் திடுதிடுப்பென எந்தவித முன்னறிவித்தலுமின்றி சட்டவிரோதமாக அத்துமீறி நாவற்குழிப் பகுதியில் இவர்களில் ஒருபகுதியினர் குடியேறி இருக்கிறார்கள் - இல்லை குடியேற்றப்பட்டு இருக்கிறார்கள்.

இம்மாதிரி திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்த்து தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே போராடி வந்திருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஓர் அறிக்கையில் இலங்கையில் எங்கும் எவரும் வாழலாம் என்ற போர்வையில் யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்ட முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கண்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஈ.பி.டி.பி. கட்சியும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது உள்ள நிலையில் நாட்டில் சமுகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டிய கட்டாயம் இருக்கும்போது அதற்கு மாறான முறையில் யாழ்ப்பாண மக்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையிலான காரியங்கள் இடம்பெறுவது ஒவ்வாதவை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணைகளை முன்னெடுத்துவரும் நிலையில் எந்தவகையிலும் நல்லிணக்கத்துக்கு உதவ முடியாத இத்தகைய செயற்பாடுகள் எவரால் - எத்தரப்பால் - மேற்கொள்ளப்பட்டாலும் அவை ஆட்சேபத்துக் குரியனவே; கண்டிக்கப்பட வேண்டியவையே. இதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை.

### கன்னியா வெந்நீரூற்று விவகாரம்

# திருமலை அரச அதிபரின் அடாவடி; பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,நவ.13

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த வரலாற்று அறிவிப்புப் பலகையை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அகற்றியுள்ளதற்கு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீளவும் வரலாற்று அறிவித்தல் பலகையை அங்கு நடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாது போனால் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் பிரதேச சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

கடந்த 5ஆம் திகதி மாலை 5.35 மணியளவில் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதிக்குச் சென்ற திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அவருடன் சென்றவர்கள் கன்னியா வெந்நீரூற்று தொடர்பான வரலாற்று அறிவித்தல் பலகையை அகற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஊழியரிடமிருந்த கன்னியா வெந்நீரூற்று நுழைவுக்கட்டண பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் இரண்டும் அவர்களால் பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் பராமரிப்பிலும் நிர்வாகத்தின் கீழும் இருந்து வரும் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில், முன்னறிவித்தலின்றி அரசாங்க அதிபர் மேற்கொண்ட அடாவடித்தனத்தை அடுத்து - அங்கு சுகாதார மற்றும் காவல்பணி, நுழைவுக்கட்டண அறவீட்டுப் பணிகளில் அமர்த்தப்பட்ட ஊழியர்களை பிரதேச சபை திருப்பி அழைத்துள்ளது.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதிக்குரிய சபையின் அனைத்துச் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் இதுதொடர்பாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் சிறப்பு அவசரக் கூட்டம் சபையின் தலைவர் த. காந்தரூபன் தலைமையில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சபை உறுப்பினர்களால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக எமது பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படும் கன்னியா வெந்நீரூற்று பகுதிக்கு வருகை தரும் மக்களுக்குரிய அடிப்படை வசதிகள், சுகாதார சேவைகள் போன்றவற்றை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஊழியர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு அறவீடு செய்யப்படும் கட்டணங்களைக் கொண்டு இந்தப் பகுதியில் மேற்கொள்ளும் சேவைகளுக்கான செலவுகள் ஈடுசெய்யப்பட்டு வருகின்றன. (ஒ)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் 4 ஆவது வருட நினைவு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வரணி மாசேரி கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிமை பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

(ஐ-201)

## பனை மரங்கள் வெட்ட தீவகத்தில் தடை

யாழப்பாணம்,நவ.13

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் பனை மரங்களை வெட்டுவதற்கும் அதனை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் முன் அனுமதியை பனை அபிவிருத்திச் சபையிடம் பெற்றுக்கொள்வது அவசியம் என அண்மையில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் 50 ஆயிரம் பனம் விதைகள் நடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.(த-300)

## புனர்வாழ்வளிக்கப்பட்ட மாணவருக்கு கல்வியைத் தொடர புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம்,நவ.13

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு யாழ். பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியைத் தொடரும் 10 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற முன்னாள் போராளிகள் சமூகத்தில் வாழக் கூடிய சமூக சூழலை உருவாக்குவது தொடர்பாக விழிப்புணர்வுக் கூட்டத்தின் போதே இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது மாணவர்கள் இரண்டு வருடங்களுக்கான கல்வியைத் தொடர்வதற்கு மாதாந்தம் 1500 ரூபா வீதமான புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

இந்தப் புலமைப்பரிசிலுக்கான நிதியை வழங்க தாய்வான் நிறுவனமான தர்மதன் என்ற அமைப்பு முன் வந்துள்ளது. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் இந்த மாணவர்களுக்கான புலமைப் பரிசிலை வழங்கித் தொடக்கி வைத்தார். யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உள்ளிட்டோரும் மாணவர்களுக்கான புலமை பரிசிலை வழங்கினார்கள்

கடந்த ஜூலை மாதம் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இந்த மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றிருந்தனர். கலைப்பீடம், நுண்கலைப்பீடம், சித்தமருத்துவத்துறை, விஞ்ஞான பீடம் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களே இவர்கள். (த-14)

## சுதுமலை அ.த.க. மாணவி ஆங்கில தினப் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

சண்டிலிப்பாய்,நவ.13

பௌதிக வளம் உட்பட எதுவித வசதிகளுமில்லாது பின்தங்கிய நிலையில் உள்ள சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஒருவர் ஆங்கில தினப் போட்டியில் தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யோகநாதன் சிந்தியா என்னும் மாணவியே உறுப்பெழுத்துப் போட்டியில் தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவராவார்.

இதேவேளை, 11 வருடங்களுக்குப்பின்பு இதே பாடசாலையைச் சேர்ந்த பிரபாகரன் சசிவதனன் என்னும் மாணவன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-115)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 28 | 14.11.2010 | |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | அட்டமி பி.ப.01.13 வரை |
| நட்சத்திரம் | : | அவிட்டம் மு.இ.07.20 வரை |
| சுபநேரம் | : | 09.07-10.37 வரை |
| ராகுகாலம் | : | 04.37-06.07 வரை |

## 771 வழித்தட பஸ் சேவை நேரம் ஒழுங்கில்லாததால் மாணவர் அவதி

சண்டிலிப்பாய்,நவ.13

மானிப்பாயிலிருந்து சுதுமலை தாவடி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் 771 இலக்க பஸ் சேவை ஒழுங்காக குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறுவதில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால் பொதுமக்கள் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

காலை நேரம் பாடசாலைக்குச் செல்வதற்காக பஸ்ஸை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு பஸ் சேவை இடம் பெறாததினால் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள் என்று பெற்றோரால் தெரிவிக்கப்படுகின்றது.

பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 771 இலக்க பஸ் சேவை பொது நிறுவனங்களினதும் பொதுமக்களினதும் முயற்சியினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை சேவை உட்பட குறிப்பிட்ட நேரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இச் சேவையை இலங்கை போக்குவரத்துச் சபை வழங்கி வருகின்றது. பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது சுதுமலை, தாவடியில் வசிக்கும் பொதுமக்களுக்கு நோயாளர்களுக்கும் இந்தச் சேவை நன்மை பயக்கவல்லது.

எனினும் இந்த பஸ் சேவை சில நாள்களில் குறிப்பிட்ட நேரங்களில் ஒழுங்காக நடைபெறாததினால் மாணவர்களும் பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றார்கள். கடந்த இரு தினங்களுக்கு முன்பும் குறிப்பிட்ட நேரத்தில் பஸ் சேவை இடம் பெறாததினால் காத்திருந்த நோயாளர்களும் மாணவர்களும் ஏமாற்றமடைந்தனர். மாணவர்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

மக்களின் நன்மை கருதி 771 இலக்க பஸ் சேவையை குறிப்பிட்ட நேரங்களிலாவது ஒழுங்காக நடத்துமாறு பாதிக்கப்படும் மக்கள் கேட்கின்றனர்.

(உ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலரோகம்

சலரோகம் என்பது குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்துக் காணப்படுவதாகும். இந்நிலையானது எமது உடலில் சுரக்கப்படும் இன்சுலின் எனப்படும் சுரப்பு குறைவடைவதாலோ அல்லது அதன் தொழிற்பாட்டுத் திறன் குறைவடைவதாலோ ஏற்படுகின்றது. குருதியில் குளுக்கோசின் அளவினை கட்டுப்படுத்துவது இன்சுலின் ஆகும்.

குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்துக் காணப்படும் நிலையில் தோன்றும் அறிகுறிகள் அல்லது குணம் குறிகள் பின்வருமாறு காணப்படும்.

1. அதிக பசி
2. அதிக தாகம்
3. அடிக்கடி சலம் கழித்தல் - குறிப்பாக இரவு நேரத்தில் அதிக தடவைகள் சலம் கழிதல்.
4. காலில் உளைவு, வலி, விறைப்புத் தன்மை என்பன காணப்படும்.
5. குறுகிய கால இடைவெளியில் திடீர் உடல் மெலிவு ஏற்படும்.

ஊடக அனுசரணை உதயன்

6. நாரியில் நோ, உளைவு என்பன காணப்படும்.
7. கண் பார்வை படிப்படியாக மங்குதல்.
8. உடலில் களைப்பு, அலுப்பு, சோர்வு என்பன காணப்படும்.

மேற்கூறிய அறிகுறிகள் தென்படின் உடனடியாக வைத்தியரை அணுகி தகுந்த மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். மருத்துவம் செய்யத்தவறும் பட்சத்தில் எமது அவயவங்களின் படிப்படியான செயல் இழப்புக்களுக்கு நாமே பொறுப்பாளிகள் ஆகும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

சலரோகத்தினை முற்றாக குணப்படுத்த இயலாது என்பது கசப்பான உண்மை தான் என்றாலும், இச் சலரோகத்தினை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் எம்மால் முடியும் என்றொரு இனிப்பான உண்மையும் உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது. அத்துடன் இச் சலரோகம் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளவர்கள் சலரோகம் ஏற்படும் காலத்தினை பின்னோக்கி நகர்த்த முடியும் என்று விஞ்ஞான பூர்வ ஆய்வுகள் கூறுகின்றன.

சலரோகம் ஏற்படும் வாய்ப்புக்கள் அல்லது ஆபத்துக்கள் அதிகம் உள்ளவர்கள் பின்வருமாறு.

1. ஆசிய நாட்டில் வசிக்கும் மனிதர்கள்.
2. 40 வயதை அடைந்த மனிதர்கள்.
3. அதிக உடல் எடை கொண்ட மனிதர்கள்.
4. பரம்பரையில் சலரோக நோயுள்ள மனிதர்கள்.
5. உயர் குருதி அமுக்கம் உள்ள மனிதர்கள்.
6. கற்ப காலத்தில் சலரோக நோய் ஏற்பட்ட மனிதர்கள்.
7. குருதிக் குழாய்களில் நோய் ஏற்பட்ட மனிதர்கள்.
8. சில வகை மன நோயாளிகள்.

சலரோகம் ஏற்படும் காலத்தினை பின்னோக்கி நகர்த்தவும், சலரோகம் ஏற்பட்டவர்கள் சலரோகத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நடைமுறைகள்.

1. உணவுப் பழக்கவழக்கங்களில் நன்னிலை பேணல்.
2. உடல் பயிற்சியினை ஒழுங்காக மேற்கொள்ளல்.
3. உள நிலையினை நன்னிலையில் பேணல்.
4. மருத்துவ சிகிச்சை முறைகளை ஒழுங்காக மேற்கொள்ளல்.
5. உடல் உறுப்புக்களில் சிக்கல்கள் ஏற்படாதவாறு பாதுகாத்தல்.

சலரோக நோயாளிகள், சலரோக நோய் ஏற்படும் ஆபத்து அதிகம் உள்ளவர்கள் பின்பற்றும் நன்னிலை உணவுப் பழக்க வழக்கம்.

1. சில வகை உணவுகளை முற்றாக தவிர்த்தல்.
உ+ம் இனிப்புப்பண்டங்கள் (சீனி, ஐஸ்கிறீம், சொக்லேட்)
2. சில வகை உணவுகளை மிக குறைந்த அளவில் உட்கொள்ளல்.
உ+ம் மாவுப் பொருள்கள் (கோதுமை, அரிசி, கிழங்கு வகைகள்)
3. சில வகை உணவுகளை மிக மிக குறைந்தளவில் உட்கொள்ளல்.
உ+ம் கொழுப்புணவுகள் (எண்ணெய் வகை, சீஸ், பட்டர்)
4. சில வகை உணவுகளை போதியளவு உண்ணல்.
உ+ம் பயறு, கடலை, கௌப்பி போன்ற தானிய வகை உணவுகள்.
5. சில வகை உணவுகளை வயிறு நிறைய திருப்தியாக உட்கொள்ளல்.
நார்ப்பொருள் உள்ள உணவுகள்
உ+ம் மரக்கறி, இலை வகை.

**உடற் பயிற்சி**

நாம் உடற் பயிற்சி செய்யும் போது எமது உடலும் உள்ளமும் நன்னிலையில் பேணப்படும். அத்துடன் குருதியில் குளுக்கோசை கட்டுப்படுத்தும் இன்சுலின் சுரப்பு கூட்டவும் இதன் தொழிற்பாட்டு திறன் கூட்டவும் உடற் பயிற்சி மிகமிக இன்றியமையாததாகும். இவ் உடற் பயிற்சியினை நாம் தினமும் அரை மணி நேரமாவது செய்தல் மிகமிக அவசியம் ஆகும். இதனை நாம் நம் அன்றாட வாழ்வியலுடன் கலந்து மேற்கொள்ளல் மிகவும் இலகுவானது. உ+ம் எமது தேவைகளை நிறைவு செய்ய ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு நகரும் போது வேகமாக கால் நடையாகப் போகலாம்.

குறிப்பு:- இருதய நோயுள்ளவர்கள் இருதய நோய் சிகிச்சை நிபுணரின் ஆலோசனையின் பின் மேற்கொள்ளல் நலம்.

**க. சதானந்தன்**
நீரிழிவுக் கல்வி அறிவூட்டும்
தாதிய உத்தியோகத்தர்.

# உலக நீரிழிவு தினத்தை குறிக்கும் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

நாளை ஞாயிற்றுக்கிழமை 14ஆம் திகதி உலக நீரிழிவு தினமாகும். இந்நாளில் நீரிழிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப் பல்வேறு இடங்களில் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள், நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் உதயனின் ஊடக அனுசரணையுடன், நடத்தப்படவுள்ளன. இதில் ஆண்களும் பெண்களும் பங்கு பற்றலாம். ஆண்கள் பிரிவுக்கான போட்டிகள் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறை, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. இதற்கான பதிவுகளை இன்று (13.11.2010) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு முன்பாக பின்வரும் இடங்களில் மேற்கொள்ளலாம்.

1. நல்லூர் - கிராம சேவையாளர் அலுவலகங்கள், நல்லூர்
2. சண்டிலிப்பாய் - சந்திரன் பான்சி பலஸ், நவாலி றோட், ஆனைக்கோட்டை, அஸ்ரன் கல்வி நிலையம், நவாலி றோட், ஆனைக்கோட்டை, கரைப்பிரான் பிள்ளையார் கோவில், ஆனைக்கோட்டை.
3. கோப்பாய் - சூர்யா Pharmacy, புத்தூர், சூர்யா Pharmacy, அச்சுவேலி, கலைமதி சனசமூக நிலையம், புத்தூர், எல்லாளன் வாசிகசாலை, நவக்கிரி, மக்கள் வைத்தியசாலை, நீர்வேலி வடக்கு.
4. அளவெட்டி - மகாஜன சபை, அளவெட்டி, கஜமுகன் பல்பொருள் வாணிபம், அளவெட்டி, ஞான வைரவர் சனசமூக நிலையம், அளவெட்டி.
5. சாவகச்சேரி - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை.
6. பருத்தித்துறை - கற்கோவளம் வாசிகசாலை, கஜமுகன் டிஸ்பென்சரி, நெல்லியடி, கலைமணி வாசிகசாலை, றோயல் மெடிக்கல் கிளினிக், பருத்தித்துறை, T.T மல்ரி சென்ரர், குஞ்சர் கடை.
7. அல்லைப்பிட்டி - பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி.

பெண்கள் பிரிவுக்கான போட்டிகள் நல்லூர், பருத்தித்துறையில் நடைபெறவுள்ளன. அதற்கான பெயர் விவரங்களை கீழ்வரும் இடங்களில் பதியலாம்.

1. நல்லூர் - ஜனசக்தி சனசமூக நிலையம், அரசடி வீதி,வள்ளுவர் சனசமூக நிலையம், கொக்குவில் மேற்கு, கலைமகள் சனசமூக நிலையம், ஆத்திசூடி வீதி, காமாட்சி சனசமூக நிலையம், நாச்சிமார் கோவிலடி.
2. பருத்தித் துறை - ஆண்கள் பிரிவுக்கான பதிவு செய்யும் இடங்களில் மேற்கொள்ளலாம்.

நீங்கள் சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் போட்டி ஆரம்பிக்கும் கீழ்வரும் இடங்களில் ஞாயிறன்று காலை 7.00 மணிக்கு முன்பாக இணைந்து கொள்ளலாம்.

1. நல்லூர் - ஆண்கள் - கோண்டாவில் சந்தி, பெண்கள்- கொக்குவில் சந்தி.
2. சண்டிலிப்பாய் - மூத்தநயினார் கோவில், ஆனைக்கோட்டை.
3. கோப்பாய் - ஆவரங்கால் சிவன் கோவில்.
4. அளவெட்டி - அளவெட்டி மகாஜன சபை.
5. சாவகச்சேரி - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை.
6. பருத்தித்துறை - வியாபாரிமூலைச் சந்தி.
7. அல்லைப்பிட்டி - பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி.

உங்கள் பங்களிப்பினையும், ஆதரவையும் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தினர் வேண்டி நிற்கின்றனர்.

# வித்தகன் தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்

## நீத்தார் நயப்புரை

நீர்வேலிக் கிராமம் பண்டிதர்களாலும் பாவலர்களாலும் பெருமை பெற்றதெனலாம். அந்த வரிசையில் வித்தகன், தெய்வக்கவிமாமணி தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்களும் ஒருவராவர்.

இவர், நீர்வேலி வடக்கில் வாழ்ந்த வ.தெட்சணாமூர்த்தி அவர்களுக்கும் அவர் மனை நல்லாள் தெய்வானைப்பிள்ளை என்பவருக்கும் ஏக புத்திரனாக 1933ஆம் ஆண்டில் பிறந்தவர். தமிழ் இலக்கணம் கற்பதற்காக தெல்லிப்பழை, வருத்தலவிளான் பண்டிதர், இலக்கண வித்தகர் சி. நமசிவாய தேசிகரிடம் தமிழ் இலக்கணம் கற்றுக்கொண்டதோடு, வித்துவ சிரோன்மணி கணேசையரிடமும் சமய, தத்துவ, இலக்கணங்களையும் முறையாகக்கற்றுக் கொண்டதோடு, அவரது அருளாசியும் பெற்றுக் கொண்டார். வருத்தலவிளான், விசுவகலாமணிப் பண்டிதர் இ.சி.கந்தையா அவர்களிடமும் தமிழ் இலக்கணம் கற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் வழிவந்த தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்கள் அரசாங்க எழுதுவினைஞராக நாட்டின் பல பாகங்களிலும் சேவைபுரிந்தவர். மிகுந்த தமிழ்ப்புலமை மிக்க இவர் வருத்தலவிளான் மருதடி விநாயகர் மீது அளவிலாப் பக்தியும், பற்றும் கொண்டவர். அதனால் வருத்தலைப் பிள்ளையார்,முறிகண்டிப்பிள்ளையார், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார், காரைநகர் கரைப்பிட்டியந்தனைப் பிள்ளையார், கரவெட்டி தில்லையம்பலப் பிள்ளையார், வவுனியா குருமன்காடு பிள்ளையார், முதலிய பிள்ளையார் கோவில்களுக்கும், நீர்வேலி காமாட்சியம்பாள், நீர்வேலி ஸ்ரீ இராசராசேஸ்வரியம்பாள், நீர்வேலி காளியம்பாள், அச்செழு அம்பாள் முதலிய அம்பாள் கோவில்கள் மீதும் திருவூஞ்சல் பதிகங்களும், பக்திப்பாமாலைகளும் பாடிய பெருமைக்குரியவர். காரைநகர் களபூமி அம்பாள் மீது பாடல்கள் பாடியதோடு, கதிர்காமத் திருப்புகழ், நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோவில் தோத்திரப் பாடல்கள் இன்னும், பக்திரசப் பிரார்த்தனைப் பாமாலை போன்ற பல பாடல்களைப் பாடிய புகழ்பெற்ற கவிஞர் ஆவார்.

இவரது பாடல்களைப் புகழ்ந்து 1965ஆம் ஆண்டு நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய மண்டபத்தில் அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களால் ''வித்தகன்'' என்னும் கௌரவப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது .

1968இல் நீர்வேலி ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பொன்னாலைப் பண்டிதர் பௌராணிகர் சித்தாந்தமணி தில்லையம்பலவாணர் அவர்களால் "தெய்வக் கவிமாமணி '' என்னும் கௌரவப்பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டது.

தனது காணியை விற்று அதனால் கிடைத்த பணத்தைக் கொண்டு தமது உரிமைக் கோவிலான நீர்வேலி ஸ்ரீஇராசராசேஸ்வரி அம்பாள் ஆலய சுற்றுப்பிரகாரத்தில் பிள்ளையாருக்குத் தனி ஆலயம் அமைத்து, விக்கிரகமும் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் செய்வித்து மனநிறைவு கண்டவர். ஓய்வு பெற்ற பின் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

இறுதியில் வடக்கம்பரை, சுழிபுரத்திலுள்ள ''சிவபூமி'' என்னும் தொண்டு நிறுவனத்தாரின் பராமரிப்பில் இருந்தபோதும், சிவபூமிக்கு வாழ்த்துப்பாடல் ஒன்றை அண்மையில் உதயன் பத்திரிகை மூலம் பிரசுரித்து மனநிறைவு கொண்டவர். சிவபூமியிலேயே கடந்த 01.10.2010இல் இவ்வுலக வாழ்வைத் துறந்து பொன்னம்பலவன் பொற்பதமடைந்துவிட்டார்.

**த.பரராசசிங்கம்**
செயலாளர், காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை, நீர்வேலி.

# புத்தகசாலை





## வாழ்வின் வசந்தம்

பண்ணாகம் அண்ணா கலை மன்றம், மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் வெளியிடான ''ஆசிரியர் திலகம்'' விஸ்வ மகாதேவன் எழுதிய ''வாழ்வின் வசந்தம்'' நூல்வெளிவந்துள்ளது.

இந்நூலில் கவிதையியல் எனும் பகுதி ஊடாக ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் எமது வாழ்வின் வசந்தத்திற்கான பல்வேறு அம்சங்களை எடுத்தியம்பியுள்ளார் நூலாசிரியர்.

## அருள் அமுதம்




கோப்பாய் சைவசமய அருள்நெறி மன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவு மலர் ''அருள் அமுதம்'' நூல் வெளிவந்துள்ளது.

சைவசமய அருள்நெறி மன்றத்தால் கடந்த ஒரு வருடமாக மேற்கொள்ளப்பட்ட சமய, சமூகப்பணிகள் அத்துடன் அந்த மன்றத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சமய நிகழ்வுகள் எனப்பல்வேறு அம்சங்களைத் தாங்கி ''அருள் அமுதம்'' வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனவரி மதிப்பீடு அடுத்த ஆண்டில்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் ஆதன வரி மதிப்பீட்டு வேலைத் திட்டம் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த வேலைத் திட்டத்திற்காக இவ்வாண்டில் ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் பிரதான விலைமதிப்பாளர் பி.டபிள்யூ. சேனாரட்ணா அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் 17 சபைகள் உள்ளன. இந்தச் சபைகளின் ஆதனவரி மதிப்பீட்டு நடவடிக்கைகள் 2011இல் ஆரம்பிக்கப்பட்டு 2012 இல் அமுல்படுத்தப்படக்கூடிய வகையில் நிறைவு செய்யப்பட வேண்டும். எனவே 2011இல் ஆதன வரி மதிபீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்து இருப்பின் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் அது பற்றி அறிவிக்கப்பட வேண்டும். அறிவிக்கப்படாத உள்ளூராட்சி சபைகளின் ஆதனவரி மதிப்பீடு 2011இல் இடம் பெறமாட்டாது - என்றார். (த-302)

## வீதி விளக்குகள் பொருத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.13

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேசத்தில் 25 வீதி விளக்குகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என ஊர்காவற்றுறைப் பிரதேசசபை தெரிவித்தது.

இங்கு வீதி விளக்குகளைப் பொருத்தமான இடங்களில் அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்களிடமிருந்து தமக்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இச்சபை மேலும் தெரிவித்தது.

(த-300)

## மணிக்கட்டுடன் கைகளை இழந்த யுவதிக்கு 'லப்ரொப்' அன்பளிப்பு

தென்மராட்சி, நவ.13

இரு கைவிரல்களை மணிக்கட்டுடன் இழந்த பளை, முல்லையடியைச் சேர்ந்த யுவதிக்கு லப்ரொப் கணினி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

புலோப்பளை றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்ற உயர் மட்ட அதிகாரிகள் கூட்டத்தில்கலந்துகொண்ட இந்தயுவதி விடுத்த வேண்டுகோளையடுத்து கூட்டத்தில் கலந்து கொண்ட லண்டனிலிருந்து வந்த பத்மநாதன் என்னும் பிரதேச வாசி 75 ஆயிரம் ரூபா பெறுமதியான லப்ரொப் கணினியினை அன்பளிப்பாக வழங்கினார்.

மணிக்கட்டுடன் உள்ள கைகளால் கணினியை இயக்கி அங்கிருந்தோரை அசத்தினார் முல்லையடியைச் சேர்ந்த முத்துக்குமாரு தர்சிகா என்னும் அந்த யுவதி. (த-207)

## இராமாவில் இடைத்தங்கல் முகாமை ஆளுநர் நேற்றுப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,நவ.13

மிருசுவில், இராமாவில் முகாமுக்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்த வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அங்குள்ள பாடசாலை மாணவர்களுக்குக் காலணிகளை வழங்கியுள்ளார்.

இராமாவில் முகாமுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தார். சில பிரச்சினைகளைத் தான் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது தெரிவித்தார்.

இராமாவிலில் கல்வி கற்கின்ற 100 மாணவர்களுக்கு ஆளுநர் காலணிகளை வழங்கினார். முகாமிலிருந்து வெளிப் பாடசாலைகளுக்குக் கல்வி கற்பதற்காகச் செல்லும் மாணவர்களுக்கு சைக்கிள்களை விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இராமாவில் முகாமில் உள்ள பாடசாலையையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார். இதன்போது பாடசாலை அதிபர் இவ்வருட இறுதிவரை தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களை சேவை நீடிப்பு செய்து தருமாறு கோரிக்கை முன் வைத்தார். அதற்குப் பதிலளித்த ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களை 4 மாத நீடிப்பு செய்து தருவதாகவும் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பின் நிவர்த்தி செய்து தருவதாகவும் பதிலளித்தார்.

(த-15)

## சாவகச்சேரி வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்கள் மீட்பு

தென்மராட்சி,நவ.13

சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்கள் மீது நேற்று முன்தினம் திடீர் பரிசோதனை நடத்தி காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய விசேட சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினரும் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் இணைந்து மேற்படி திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருள்களைக் கைப்பற்றியதுடன் நான்கு வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை சாவகச்சேரி பொதுச் சந்தையில் மரக்கறி, வெங்காயம் ஆகிய விற்பனைப் பிரிவுகளில் பரிசோதனை நடத்திய இக்குழுவினர் கழிவுப் பொருள்களை உரிய தொட்டிகளில் போடுமாறும் தவறுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(201-207)

## நீர் வாரத்தையொட்டி சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.13

தேசிய பாதுகாப்பான நீர் வாரத்தைக் குறித்து கொழும்பு சுகாதார அமைச்சின் சுகாதாரக் கல்விப் பணியகம் இலங்கை முழுவதும் திறந்த சுவரொட்டி விளம்பரப் போட்டியொன்றை நடத்த உள்ளது.

'ஓர் ஆரோக்கியமான இலங்கைக்குப் பாதுகாப்பான குடிதண்ணீர்' எனும் பொருளில் இச்சுவரொட்டிப் போட்டியில் பங்குகொள்ளும் போட்டியாளர்களுக்கு வயதுக் கட்டுப்பாடில்லை. ஒரு போட்டி யாளர் ஒரு சுவரொட்டி விளம்பரத்தை அனுப்ப வேண்டும். சுவரொட்டி விளம்பரத்தின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தைத் தெளிவாக எழுதி இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், சுகாதாரக் கல்விப் பணியகம், இல.2, கின்ஸி வீதி, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் போட்டியில் வெற்றிபெறும் முதல் மூன்று இடங்கள் உட்பட 20 பேருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-51)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை
### நோயாளர்கள் பெரும் சிரமம்

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள், ஆண் பரிசாரகர் பற்றாக்குறையினால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் விடுதிகளும், சிகிச்சைப் பிரிவுகளும் இயங்குகின்ற போதிலும் எட்டு தாதிய உத்தியோகத்தர்களும் மூன்று ஆண் பரிசாரகர்களுமே பணிபுரிகின்றனர்.

இவர்கள் சுழற்சி முறையில் பணியாற்றுவதால் விடுதிகளிலும் வெளிநோயாளர் பிரிவிலும் ஒரே நேரத்தில் கடமையாற்ற வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். இதனால் நோயாளர்கள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (204-207)

## கௌரவிப்பு...



சங்கானையிலுள்ள சிற்றி ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: நவாலிச் செய்தியாளர்)

### வலி.மேற்கு, தென்மேற்கில் குடியமர்ந்த
## 685 குடும்பங்களுக்கு வீடுகள் இராணுவம் அமைத்து வழங்கியது

யாழ்ப்பாணம், நவ.13

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வலி.மேற்கு, வலி. தென்மேற்குப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள 685 குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டம் ஒரு மாதத்தில் செய்து முடிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்த வறிய குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை 513 ஆவது படையணியின் தளபதி லெப். கேணல் எஸ்.அமரசிங்க தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு, வலி. மேற்குப் பிரதேசங்களின் அரச அதிகாரிகள் கொண்ட குழுவுக்கான அபிவிருத்திக் கூட்டம் அண்மையில் 513 ஆவது படையணியின் தலைமை அலுவலகத் தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய லெப்.கேணல் அமரசிங்க மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது பிரிகேட் படையணியின் கீழ் 97 கிராம அதிகாரிகள் பிரிவுகள் உண்டு. அதில் இரண்டு லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

இந்த மக்களின் வறிய நிலையில் உள்ள மக்களுக்கும் உதவி தேவைப்படுபவர்களுக்கும் உதவுவதே எமது நோக்கமாகும்.

டெங்கில் இருந்து மக்களைக் காப்பாற்ற நாம் பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். இதற்கு பல்வேறுபட்ட தரப்பினரும் எமக்கு ஒத்தாசை வழங்குகின்றனர். நாம் சுன்னாகம், மானிப்பாய், மாவடி ஆகிய பிரதான இராணுவ முகாம்களை இணைத்து சேவையாற்ற அபிவிருத்திக் குழுவை விரைவில் அமைப்போம்.

யுத்தம் முடிவடைந்துள்ளது. யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியே மெய்யான அபிவிருத்தி. கிராமிய மட்டத்தில் அதிகாரிகளைத் தெரிவு செய்ததன் நோக்கம் அவர்களூடாக மெய்யான அபிவிருத்தி மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே.

வறிய முன்பள்ளி மாணவர்களுக்கு உதவவுள்ளோம். அவர்களின் விவரங்களை நீங்களே தரவேண்டும். வசதிபடைத்தவர்களுக்கு உதவி தேவையில்லை. போஷாக்கு இன்றி, உணவின்றி, கல்வியின்றி, வீடின்றி, மலசல கூட வசதியின்றி உள்ள மக்களுக்கு நாம் உதவிகளை வழங்குவோம் - என்றார். (த-302)

## 8வருடங்களாக வீணே கிடக்கும் அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானம்
### காணிக்குச் செல்ல பாதை இல்லாததால் சிரமம்

அச்சுவேலி,நவ.13

அச்சுவேலி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு என கொள்வனவு செய்யப்பட்ட காணியை 8 வருடங்களாகப் பயன்படுத்த முடியாத நிலை தொடர்கிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண கல்லூரி மாணவர்கள் தற்போது முயற்சி மேற்கொண்டுள்ளனர். அண்மையில் பாடசாலை நலன் விரும்பிகள், பெற்றோர் இடையே நடந்த கலந்தரையாடலில் மாணவர்களின் முயற்சிக்கு ஆதரவும் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டுக்கு கனடா பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் 8 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டது. எனினும் சம்பந்தப்பட்ட காணிக்கும் கல்லூரி வளவுக்கும் இடையில் 50 யார் தூரத்துக்கான பாதை இல்லை. இதனால் மைதானக் காணியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 8 வருடங்களாக இந்த நிலை தொடர்கிறது.

பாடசாலைக்கும் மைதானத்துக்கும் இடைப்பட்ட 50 யார் தூர காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. அவர் வெளிநாட்டில் உள்ளார். அவரும் உள்ளூரில் வசிக்கும் காணியின் தத்துவ உரித்தாளியும் அந்தத் துண்டுக் காணியை விற்பதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை தொடர்கிறது. இந்த நிலை தொடர்பில் கல்லூரி மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பெற்றோர், நலன் விரும்பிகளுடன் கலந்துரையாடல் நடத்தினர். அதில் மாணவர்கள் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டதோடு மேலும் காலத்தை நீடிக்காமல் காணியைப் பயன்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

(உ-11)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மருதங்கேணியில் வைத்திய சேவை

குருநகர், நவ.13

மருதங்கேணிப் பகுதியில் மீளவும் குடியேறியுள்ள மக்களுக்கு நடமாடும் மருத்துவசேவை நடைபெற்று வருகிறது எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ் வுரன் தெரிவித்தார்.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மேர்ஸி மலேசி யாக் குழுவினாலும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினாலும் ஞாயிற்றுக்கிழமை அம்பன் வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரியாலும் இந் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகின்றது அவர் மேலும் தெரிவித்தார்.

(த-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 நீண்ட தூர ஆட்லறிகள், 800 மோட்டர்கள் 14,232 ரி-56 துப்பாக்கிகள் புலிகளிடம் மீட்பு

## ஆயுத விவரங்களை வெளியிட்டது படைத்தரப்பு

கொழும்பு, நவ.13

விடுதலைப் புலிகளிடம் இருந்து இதுவரையில் 21 நீண்டதூர ஆட்லறிப் பீரங்கிகளும், சுமார் 800 பல்வேறு வகையான மோட்டார்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கைப் படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக படை வட்டாரங்களில் இருந்து பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 'ஐலன்ட்' நாளிதழ் தகவல் வெளியிடுகையில், புலிகளிடம் கைப்பற்றப்பட்ட ஆட்லறிப் பீரங்கிகளில் ஆறு 152 மி.மீ ரகத்தைச் சேர்ந்தவையாகும்.

ஒன்பது 130 மி.மீ ஆட்லறிகளும், ஆறு 122 மி.மீ ஆட்லறிகளும், இரண்டு 85மி.மீ ஆட்லறிகளும் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.

இவையனைத்தும் சீனாவில் தயாரிக்கப்பட்டவை.

புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார்களில் 120 மி.மீ மோட்டார்கள் - 57, 82 மி.மீ மோட்டார்கள் - 38, 81மி.மீ மோட்டார்கள் - 147, 60மி.மீ மோட்டார்கள் - 487, கொமாண்டோ மோட்டார்கள் - 65 ஆகியனவும் அடங்கியுள்ளன.

அத்துடன், ஆறு குழல்களைக் கொண்ட பல்குழல் பீரங்கிகள் மூன்றும், 14 பின்னுதைப்பற்ற பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் பெருந்தொகையான ஆயுதங்களைப் புலிகள் பல்வேறு இடங்களில் இருந்து கடத்தி வந்துள்ளனர்.

இவற்றில் பெரும்பாலானவை சீனத் தயாரிப்பான ஆட்லறிகளும் மோட்டார்களும் என்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போர் முடிவுக்கு வந்து 16 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் சிறியளவிலான ஆயுதங்கள் இன்னமும் மீட்கப்பட்டு வருகின்றன. புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பெரும்பாலான கனரக ஆயுதங்கள் போரின் இறுதி ஐந்து மாதங்களில் ஏ-9 வீதிக்கு கிழக்குப் பக்கத்திலேயே மீட்கப்பட்டன.

இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, மீட்கப்பட்ட ஆயுதங்களில்; விமான எதிர்ப்பு ஏவுகணைகள் -2 1, தெர்மோபெரிக் ஆயுதங்கள் - 55, 40 மி.மீ கிரனேட் செலுத்திகள் - 253, ஏவுகணை செலுத்திகள் -14, 23மி.மீ பீரங்கிகள் - 07, 12.7மி.மீ கனரகத் துப்பாக்கிகள் -96, பல நோக்கு இயந்திரத் துப்பாக்கிகள் - 273, ரி - 56 துப்பாக்கிகள் - 14,232, ஏ.கே - 47 துப்பாக்கிகள் - 103, எம் - 16 துப்பாக்கிகள் - 63, குறிபார்த்துச் சுடும் சினப்பர் துப்பாக்கிகள் - 34, 9மி.மீ கைத்துப்பாக்கிகள் - 441, மைக்ரோ கைத்துப்பாக்கிகள் - 167, 14.5மி.மீ இடம் நகர்த்தக்கூடிய விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் - 25, விமான எதிர்ப்பு ஏவுகணைகள் - 08, ரி-55 பிரதான சமர் டாங்கிகள் - 02, 152மி.மீ, 130மி.மீ, 122மி.மீ, 120 மி.மீ பீரங்கிக் குண்டுகள் - 3964, விமானக்குண்டுகள் - 1143, கிளைமோர் குண்டுகள்- 7069, கைக்குண்டுகள் - 35,315, வெடிக்க வைக்கும் கருவிகள் - 61,788, புலிகளின் தயாரிப்பு வெடிபொருள்கள் - 4517 ஆகியனவும் அடங்கியுள்ளன.

இதைவிட புலிகளின் இரகசிய மற்றும் புலனாய்வுப் பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கான மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் 167 மைக்ரோ கைத்துப்பாக்கிகளுடன் கூடிய 377 தற்கொலைத் தாக்குதல் அங்கிகள், 6265 கிலோ எடையுள்ள சி - 4 வெடிமருந்து, 42,188 கிலோ எடையுள்ள ரி.என்.ரி வெடி மருந்து, 3186 கிலோ ஜெலிக்நைற் , 40 தற்கொலை இடுப்புப் பட்டிகள் உள்ளிட்ட பல பொருள்களும் அடங்கியுள்ளன. இவை இராணுவ, பொருளாதார, அரசியல் இலக்குகள் மீதான தாக்குதல்களை நடத்தும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் 1368 கிலோ ரி.என்.ரி வெடி மருந்து சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது.

இரண்டு கைத்துப்பாக்கிகள் உள்ளிட்ட 21 துப்பாக்கிகளில் சைலன்சர் பொருத்தப்பட்டிருந்தன. 20 தற்கொலைக் தாக்குதல் படகுகள், 13 சேதமடைந்த கடற்புலிகளின் படகுகள், 228 வெளியிணைப்பு இயந்திரங்கள், 11 இஸ்ரேலிய மினியுசி துப்பாக்கிகள் உள்ளிட்ட 279 வகையான பொருள்களை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

அதேவேளை, புலிகள் பல்வேறு இந்திய வழங்குநர்கள் ஊடாகவே வெடிபொருள்களை வாங்கியுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

# இலங்கையிலுள்ள உதவி அமைப்புக்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம்

## அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

கொழும்பு, நவ.13

இலங்கையில் செயற்படும் உதவி நிறுவனங்கள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சிடம் கண்டிப்பாக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தகவல் வெளியிடுகையில்,

பல்வேறு உதவி நிறுவனங்கள் மூலம் இலங்கை வரும் தொண்டுப் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சில் சிறப்பாக உருவாக்கப்படவுள்ள பிரிவில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

போருக்குப் பின்னர் இலங்கை அரசு நல்ல வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்ற நிலையில் சில குழுக்கள் நாட்டின் பெயரைக் கெடுப்பதற்கு முனைகின்றன.

நல்லெண்ணத்துடன் உதவிப் பணியாளர்கள் செயற்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே அவர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் சில உதவி அமைப்புகள் நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளன.

நாம் ஒரு இறைமையுள்ள அரசைக் கொண்டுள்ளோம்.

அவர்கள் எப்படி எமது மண்ணில் செயற்படுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு எமக்கு உரிமை உள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க எந்த நிபந்தனையும் இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, இலங்கையில் சுமார் 250 அனைத்துலக உதவி அமைப்புகளும், 1000 உள்ளூர் உதவி அமைப்புகளும் இயங்குவதாக இலங்கை தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கு உதவ ஈரானியக் குழு

கொழும்பு, நவ.13

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துவதற்கு உதவிகளை வழங்குவது குறித்து ஆராய ஈரானில் இருந்து உயர்மட்டக் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

ஈரானிய உயர்மட்டக் குழுவினர் இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்து அவர்களின் தற்போதைய நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இவர்களுக்கு உதவுவது தொடர்பாகவும் ஆலோசனை நடத்துவர்.

இந்த உயர்மட்டக் குழுவுக்கு இமாம் கொமேனி நிவாரண அமைப்பின் தலைவர் ஹுசேன் அன்வாரி தலைமை தாங்குகிறார்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த உதவி வழங்குமாறு அமைச்சர் பசில் ராஜபக்ச கடந்த ஜூலை 8ஆம் திகதி முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களை அழைத்து வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கு ஈரான் மட்டுமே செவி சாய்த்துள்ளது.

ஐந்து பேரைக் கொண்ட இந்த ஈரானிய உயர் மட்டக்குழு யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, புத்தளம் ஆகிய பகுதிகளுக்கும் செல்லவுள்ளது.

அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, றிசாத் பதியுதீன் ஆகியோரையும் பிரதமர் டி.எம்.ஜயரட்ணவையும் இந்தக் குழு சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. (த)

# ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் சீன அரசின் சார்பில் சிறப்புப் பிரதிநிதி

கொழும்பு, நவ.13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வுக்கு சீன ஜனாதிபதி சிறப்புத் தூதுவர் ஒருவரை அனுப்பி வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ம் திகதி இரண்டாவது தடவை பதவியேற்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவராக சங்குவெய் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹொங்லீ தெரிவித்தார். தேசிய மக்கள் சபையின் நிலையியல் குழுவின் உதவித் தலைவரான சங்குவெய் எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை இலங்கை ஜனாதிபதியின் சிறப்பு விருந்தினராக தங்கியிருப்பார்.

அதேவேளை எதிர்வரும் 18ஆம் திகதி சீன நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் திறப்பு விழாவிலும் சீன அதிபரின் சிறப்புத் தூதுவர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# இடம்பெயர்ந்தோர் பிரச்சினைக்குத் தீர்வு அதன் பின்னரே அரசியல் தீர்வுத் திட்டம்

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, நவ. 13

போரால் இடம்பெயர்ந்த மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னரே, அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் ஒருதனிப்பட்ட குழுவோ அல்லது அரசியல் கட்சியோ மேற்கொள்ளக் கூடாது எனவும், அரசு இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தல்களை இலக்கு வைத்து அரசியல் நோக்கத்துடன் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படக் கூடாது என்றும், இடம்பெயர் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அரசு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அல் ஜஸீராவுக்கு இலங்கை கண்டனம்

கொழும்பு, நவ. 13

இலங்கையின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த அல் ஜஸீரா தொலைக்காட்சி முயற்சிக்கின்றது என்று அரசு குற்றம் சாட்டியுள்ளது.

யுத்தத்தின் இறுதி நாள்களில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனிதப் படுகொலைகளுக்கான ஆதாரங்களாக இருக்கலாம் என்று தெரிவித்து இத்தொலைக்காட்சி புகைப்படங்கள் சிலவற்றை கடந்த புதன் கிழமை வெளியிட்டிருந்தது.

இதையடுத்தே இலங்கைக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்தில் அல் ஜஸீரா ஈடுபட்டுள்ளது என பாதுகாப்பமைச்சு நேற்றுமுன்தினம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை வீணடிக்க முயற்சிக்கிறது எனவும் அல் ஜஸீரா செய்திச் சேவை மீது இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் இவ்வாறான சித்திரிக்கப்பட்ட செய்திகளுக்கு கடுமையான கண்டனத்தையும், மறுப்பையும் தெரிவிப்பதோடு, ஒருசில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் இவ்வாறான முனைப்புகளை முன்னெடுத்து இலங்கையின் பெயருக்குக் களங்கம் விளைவிக்க முயல்கின்றன என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

# வடமராட்சி வலய பல்கலாசார விழா

பருத்தித்துறை, நவ.13

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் பல்கலாசார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்வார்.

திருக்குறள் மனனப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி, வணிகப்போட்டி ஆகியவற்றில் வலயமட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கு இவ் விழாவில் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கின்றனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

(உ-190)

## வரவேற்பு...



கொக்குவில் ஸ்ரீ வராஹி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழா நிகழ்வு அண்மையில் சனசமூகநிலைய முன்றிலில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: சோபா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போலி வியாபார முகவர்களின் ஏமாற்றுக்களால் கிளிநொச்சி மக்கள் பாதிக்கப்படுவதாக முறைப்பாடு

கிளிநொச்சி,நவ.13

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் போலி வியாபார முகவர்களின் நடமாட்டத்தினால் தாம் ஏமாற்றப்பட்டு வருகின்றனர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

மீள்குடியேற்றம் இடம்பெற்ற பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வியாபார முகவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படு கின்றது. நகரை அண்டிய பகுதிகளில் மட்டுமன்றி கிராமப் புறங்களிலும் இவர்கள் நடமாடித்திரிகின்றனர்.

சில நேர்மையான வியாபார முகவர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் பலர் போலி முகவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் இலத்திரனியல் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்களைத் தவணைக் கட்டண முறையில் வழங்குவதாக முதலில் கூறுகின்றனர்.

இதனை மக்களும் நம்புவதால் தரம் குறைந்த பொருள்களை அதிக விலையில் விற்று விட்டுச் சென்று விடுகின்றனர். பின்னர் தான் மக்கள் ஏமாந்து போனதை உணர்கின்றனர். இதைப் போலவே விரைவாகக் காய்க்கக் கூடிய இனங்கள் எனக் கூறி மரக்கன்றுகளையும் விற்று விடுகின்றனர். ஆனால் இது உண்மையல்லவென்பது தற்போது தெரிய வந்துள்ளது.

இத்தகைய போலி நபர்கள் அரைகுறைத் தமிழில் பேசி மக்களுக்குப் பல இடையூறுகளை விளைவித்து வருகின்றனர். அண்மையில் கிளிநொச்சியில் ஆரம்பித்துள்ள தொலைபேசி நிறுவனமொன்று அதன் விற்பனையை மேம்படுத்தும் நோக்கோடு பல விற்பனை முகவர்களை ஊருக்குள் இறக்கி விட்டுள்ளது. அவர்கள் அதிக பெறுமதியான தொலைபேசிகளை குறைந்த விலையில் தாம் விற்பனை செய்வதாகவும், அதில் பல வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும், வாங்கும் விலையிலேயே தொலைபேசிகளைத் தாம் மீள் நிரப்பித் தருவதாகவும் பல பொய்யான தகவல்களைக் கூறி மக்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப்பெற்று அட்டையொன்றினையும் வழங்கிவிட்டுச் சென்றுவிடுகின்றனர். இந்த அட்டைகளைப் பெற்றபலர் குறித்த நிறுவனத்திற்குச் சென்று விசாரித்தபோது முகவர்கள் கூறுவதற்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்று கூறுகின்றனர். இதனை நியாயப்படுத்துவதற்காக ''வாய் மொழியான உடன்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படாது'' என்ற வாசகத்தைக் காட்டுகின்றனர். இதனை முழுமையாக வாசித்து அறியாத மக்கள் ஏமாந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொடிய யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து மீள்குடியேறியுள்ள இந்த மக்களைச் சுரண்டும் இந்தப் போலி முகவர்களை இனம் கண்டு தடுப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அந்த மக்கள் கோருகின்றனர். (க-405)

## புதிய நிர்வாகம்

பூநகரி,நவ.13

பூநகரி, செல்லையாவீதி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திற்குரிய புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் முன்னாள் பூசகரின் மகனான க.சிறிதரன் தலைவராகவும், செயலாளராக செ.கருணாகரனும், பொருளாளராக பி.சண்முகலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 14 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த ஆலயம் தோன்றி 100 ஆண்டுகள் கடந்துவிட்டமை விசேட அம்சமாகும். அத்துடன் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொல்லகுறிச்சி கிராம சேவையாளர் பிரிவில் இந்த ஆலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-406)




## பூநகரி மக்கள் வங்கிகளை நாடி 25 கி.மீ. செல்ல வேண்டிய நிலை

பூநகரி,நவ.13

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் வங்கிச் சேவை நிரந்தரமாக இல்லாததால் மக்கள் வேறு இடங்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வங்கிச் சேவை நாடி பூநகரி பிரதேச மக்கள் கிளிநொச்சி, பரந்தன் போன்ற பிரதேசங்களுக்கு 25 கிலோ மீற்றருக்கு மேல் பயணம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது. ஒரு நாளினை வங்கி சேவையிலேயே கழிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் வயோதிபர்கள், உடல் ஊனமுற்றோர், நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார் ஆகியோர் இதனால் பெரும் சிரமங்களை நாளாந்தம் சந்தித்து வருகின்றனர்.

எனவே தமக்கு சீரான வங்கிச் சேவையை உருவாக்கித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (க-ஜ-406)

### தொழில் விருத்தி......



கண் வீச்சு: கிளிநொச்சியில் அமையவுள்ள ஆடைத் தொழிற்சாலைக் கான இடத்தை ஸ்ரீ.சு.கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.அங்கஜன், தொழிலதிபர் எஸ்.இராமநாதன், தொழிற்சாலையின் தலைவர் குமார் தேவபுர ஆகியோர் பார்வையிட்டனர்.

## மீள்குடியேறியோருக்கு முட்கம்பி விநியோகம்

முல்லைத்தீவு,நவ.13

மீள்குடியேற்றப்பட்ட முத்து ஐயன்கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 53 குடும்பங்களின் விவசாயக் காணிகளுக்கு சுற்று வேலிகளை அடைக்கவென முட்கம்பிகள் ஒவர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

முட்கம்பி இல்லாத விவசாய வேலிகளை அடைப்பதற்கு இது மிகவும் உதவியாக உள்ளது என மக்கள் தெரிவித்தார்கள். இது தங்களின் பயிர்களைக் காப்பாற்றுமெனவும் இதேபோன்று சகல கிராமங்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

(க-500)

## கணேசபுரம் கிராமத்தின் அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கான முன்மொழிவுகள்

கிளிநொச்சி,நவ.13

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கணேசபுரம் கிராமத்தின் அவசியமான மூன்று வேலைத்திட்டங்கள் ஒரு மில்லியன் ரூபா செலவில் முன்மொழியப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 40 பயனாளிகளுக்கு வீட்டினை அமைத்து கொடுக்கும் செயற்திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. அந்தப் பயனாளிகளுடனான சந்திப்பு ஒன்று கடந்த 9 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு கணேசபுரம் முன்பள்ளிக் கட்டடத்தில் நடைபெற்றது. பி.ப.3.00 மணிவரை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கிராமத்தில் அவசியமான பல வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு மூன்று திட்டங்கள் முன்மொழியப்பட்டன. அதில் முன்பள்ளி திருத்தம், பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான தளபாட உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றை ஒரு மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், கணேசபுரம் கிராம அலுவலர் க.காண்டீபன், கணேசபுரம் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள், கணேசபுரம் பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-405)

## பசளை விநியோக தாமதத்தால் நெல் விளைச்சலில் பாதிப்பு

கிளிநொச்சி,நவ.13

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படும் இரசாயனப் பசளை விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்படுமென விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

மீள்குடியேறிய கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் இரசாயனப் பசளைகள் வழங்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் விவசாயிகளும் மிக்க ஆர்வத்துடன் நெல் விவசாயத்தில் ஈடுபட்டனர். ஆனால் நெல் விதைக்கப்பட்டு இரு மாதங்கள் கடந்த போதிலும் இன்னமும் பசளைகள் வழங்கப்படவில்லை. உரிய காலத்தில் பசளைகள் இடப்படாவிட்டால் பயிர்களின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுவதோடு விளைச்சலும் குறைவடையும் ஏது நிலையும் உண்டு. இதனால் விவசாயிகள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது.

ஆகவே மானிய அடிப்படையில் வழங்கப்படும் இரசாயனப் பசளைகளை உரிய நேரத்தில் வழங்கித் தமக்கு உதவுமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-405)

## தீபாவளிப் பண்டிகை வன்னியில் எளிமையாகக் கொண்டாடப்பட்டது

முல்லைத்தீவு,நவ.13

மீள்குடியேறியுள்ள வன்னி மக்கள் இம்முறை தீபாவளிப் பண்டிகையை மிக எளிமையாகக் கொண்டாடியுள்ளனர்.

வன்னிப் பிரதேசத்திலே போரின் அழிவுகளுக்கு முகம் கொடுத்து மீள்குடியேறிய மக்கள் தீபாவளிப் பண்டிகையை மிகவும் எளிமையாகக் கொண்டாடியதை அவதானிக்க முடிந்தது. பல குடும்பங்களில் தமது பிள்ளைகள், கணவன் அல்லது மனைவி, உறவினர்கள் ஆகியோரைப் பறிகொடுத்தவர்கள் கண்ணீரோடும், கவலையோடும் இருப்பதைக் காணமுடிந்தது.

ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் தீபாவளிப் பண்டிகை என்ற நினைப்பே இல்லாமல் மிகுந்த கவலையுடன் இருப்பதைக் காணமுடிந்தது. இவர்கள் தமது சொத்துச் சுகங்களை இழந்து, உறவுகளை இழந்து, ஊனமுற்று, பசியோடும் பட்டினியோடும் அலைந்து இங்கே வந்திருக்கிறார்கள். ஆனால் வசிக்க வீடு இல்லை. பொருள் பண்டம் எதுவும் இல்லை, வீட்டு வளவு வெறிச்சோடிப் போய்க் காணப்படுகின்றது.

இந்த நிலையிலே தீபாவளிப் பண்டிகையையே இந்த மக்கள் மறந்து விட்டவர்கள் போலக் காணப்படுகின்றார்கள். (க-500)

## சாமிப்புலத்திலிருந்து முட்கொம்பனுக்கு பஸ் சேவை இல்லை

பூநகரி,நவ.13

பூநகரி, சாமிப்புலம் கிராமத்திலிருந்து முட்கொம்பன் கிராமத்திற்கு பஸ் சேவை இன்மையால் இந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, சாமிப்புலம் கிராமத்தில் இருந்து முட்கொம்பன் கிராமம் வரையான சுமார் எட்டுக் கிலோ மீற்றர் தூரத்திற்கு பஸ்சேவைகள் இடம்பெறுவதில்லை. இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

சாமிப்புலம், நல்லூர், ஆலங்கேணி, செல்விபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முட்கொம்பன் கிராமத்தில் வசித்து வருகின்றனர். ஆனால் இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அத்துடன் நல்லூர் மகாவித்தியாலயம், சாமிப்புலம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு முட்கொம்பனில் இருந்து வரும் மாணவர்கள் சைக்கிள்களிலும், கால் நடையாகவும் வந்து செல்கின்றனர். இதனால் இந்த மாணவர்களின் நேரம் வீணாவதோடு இவர்கள் உடல் அசதிகளுக்கும் ஆளாகின்றனர். இது இவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவைத் தோற்றுவித்துள்ளது.

அத்துடன் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சி சென்றே தமது பயணத்தைத் தொடர்கின்றனர். ஆகவே இவர்களுக்கென சீரான தொரு பஸ் சேவையை ஆரம்பிப்பது அவசியமானதாகும். (க-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
பல நாள்களாக எதிர்பார்த்தும் கிடைக்காத வாய்ப்பு ஒன்று இப்போது கிடைக்கலாம். உறவுப் பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். சில வேலைகளை முடிக்க நீண்ட நேரம் காத்திருக்கலாம். கணவன் மனைவி இடையே அன்நியோன்யம் அதிகரிக்கும். புதிய அனுபவங்களைப் பெறலாம்.

**இடபம்:**
சிறிய செலவு ஒன்றைச் செய்ய யோசித்த நீங்கள், மற்றொரு விடயத்திற்காகப் பெரிய அளவில் செலவிடலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மற்றவர்களுடன் சேர்ந்து சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினரைப் பார்க்க வெளியூர் செல்லலாம்.

**மிதுனம்:**
வேண்டியவர் என நினைத்த ஒருவரே எதிர்ப்பாக செயற்படலாம். குறும்புத் தனமான பேச்சுக்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். நொடிப் பொழுதில் முடியும் என நினைத்த வேலை ஒன்று பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன அமைதி பாதிக்கும்.

**கடகம்:**
ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். மனைவி வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கலாம். வெளியூர் பயணம் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:**
வாகன் யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும். விருந்து, விசேஷங்களால் உற்சாகம் அடைவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருள்களை வாங்குவீர்கள். விருப்பமானதைச் சாப்பிடுவீர்கள்.

**கன்னி:**
வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி நாடி வரலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். சில விடயங்களில் தகுதிக்கு மீறி நடந்து கொள்வீர்கள்

**துலாம்:**
கடன் மிகுதிகளைச் செலுத்தலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடிவரலாம். பெற்றோர் வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். இழப்புகளைத் தவிர்க்க எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்யவும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:**
நண்பர்களிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத ஒருவரை சந்தித்து பழங்கதைகள் பேசுவீர்கள். பாதியில் நிறுத்தி வைத்த வேலை ஒன்றை முடிப்பீர்கள். உடன் பிறப்புக்கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். பெண்கள் வகையில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.

**தனுசு:**
சிலரிடம் வீண் வம்பு பேசி எரிச்சல் உண்டாக்குவீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நொடியில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்றில் தாமதம் ஏற்படலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வரவுகளை எதிர்பார்த்துச் செலவு செய்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**மகரம்:**
உறவினர்கள் சிலர் மீது கோபம் கொள்ளலாம். எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். போட்டிகள், எதிர்ப்புகள் விலகும். மற்றவர்களின் தவறு ஒன்றைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம்.

**கும்பம்:**
திடீர் செலவுகளால், பிறரிடம் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பிள்ளைகள் விடயங்களில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து அதிக கவலைப்படுவீர்கள். பதற்றமாகச் செயல்படலாம்.

**மீனம்:** வெறுப்பு, விரக்தி விலகி மனதில் உற்சாகம் குடிகொள்ளும் நாள். சிக்கலில் இருக்கும் நண்பர் ஒருவருக்கு உதவி செய்வீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போனாலும், திட்டமிடாத காரியம் ஒன்று நடக்கும். தொழிலில் அனுகூலமான மாற்றங்களைச் சந்திக்கலாம்.

# பாரபட்சம் காட்டாமல் சகல தரப்பு மக்களுக்கும் உதவி வழங்கியது தென்னிந்தியத் திருச்சபை

## பருத்தித்துறை பிரதேச செயலர் உரை

பருத்தித்துறை,நவ.13

இலங்கை மெதடிஸ்த திருச்சபை கடந்த காலங்களில் அருட்திரு அருள்நாதனின் வழிகாட்டலில் பல்வேறு அனர்த்தங்களின் போது மக்களுக்கு சமூகப் பணியை ஆற்றி வந்துள்ளது. மெதடிஸ்த திருச்சபை தாமாக முன்வந்தும், நாம் வேண்டுகோள் விடுக்கின்ற போதும் எந்தவித பாரபட்சமுமின்றி சகல மக்களுக்கும் உதவியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புதிய பேராயராக திருநிலைப்படுத்தப்பட்டுள்ள அருட்கலாநிதி ஏ.டபிள்யூ.ஜெபநேசனுக்கு வரவேற்பு விழா பருத்தித்துறை- கட்டைவேலி சேகரத்தின் ஏற்பாட்டில் மேற்படி பிரதேசத்தின் மெதடிஸ்த தேவாலயத்தில் அருட்திரு. ந.அருள்நாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றிய போது தெரிவித்தவை வருமாறு:

புதிய பேராயர் அருட் கலாநிதி ஜெபநேசனும் அந்தப் பணி வடமராட்சியில் தொடர்வதற்கு சம்மதத்தை வழங்கியிருப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எனவே தென்னிந்தியத் திருச்சபையின் கடந்த காலப் பணிக்காக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது மக்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் அனைத்து மதங்களும் அன்பு, சாந்தி, சமாதானம், இரக்கம் ஆகியவற்றையே வலியுறுத்துகின்றன என்றார் அவர்.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் இவ்விழாவில் உரையாற்றும் போது:

கடந்த காலங்களில் ஏற்பட்ட சுனாமி, நிஷாப் புயல், போர் அனர்த்தங்களின் போது இலங்கை மெதடிஸ்த திருச்சபை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அதிகமான சமூகப் பணிகளை முன்னெடுத்து நிறைவேற்றியுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தும், சொந்தக் காணி அற்றவர்களுக்குக் காணியைக் கொள்வனவு செய்து வீடுகளை அமைத்தும் மெதடிஸ்த திருச்சபை கொடுத்துள்ளது. அதேபோன்று நிஷாப் புயலினால் மக்கள் பாதிக்கப்பட்ட போது அவர்களுக்குச் சமைத்த உணவையும் வழங்கியுள்ளது.

வன்னியிலிருந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் படகுகளில் கடல் வழியாக வடமராட்சிக்கு வந்த போது அம்மக்களுக்கு உணவு, உடை மற்றும் பொருள்களையும் வழங்கி உதவியுள்ளது. இத்தகைய உதவிகளைப் புரிந்தமைக்காக அத்திருச்சபைக்கு எமது நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார். (201-190)

## நினைவாக....



ஊக்குவிப்பு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியா சாலைக்கு மேற்படி பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் ஆ.வே. துரைரத்தினம் குடும்பத்தால் பொம்மலாட்ட உப கரணங்கள் ஆசிரியர்களிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (த)

# புத்தர் சொன்ன தத்துவம்



புத்தர் ஒரு சமயம் ஒரு கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அந்த ஊர் மக்கள் அவரை வாய்க்கு வந்தவாறு வெந்து பேசி அவமதித்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை யெல்லாம் புத்தர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதன் பிறகு அவர்களைப் பார்த்துக் கூறினார் ''நீங்கள் இன்னும் ஏதாவது சொல்ல விரும்பினால் கூறுங்கள். ஏனெனில் குறித்த நேரத்தில் அடுத்த கிராமத்திற்குப் போக வேண்டியுள்ளது. அப்படி ஏதாவது இருக்குமானால் மறுபடியும் இதே வழியாக வந்து போகிறேன் அந்தச் சமயம் எல்லாவற்றையும் சொல்லுங்கள்'' என்றார்.

புத்தர் இவ்வாறு கூறியதை கேட்டதும் அந்த ஊர் மக்களுக்கு ஆச்சரியம். ''நாம் இவரை எவ்வளவு திட்டி இருக்கிறோம். ஆனால் அவர் இப்படிச் சொல்கிறாரே'' என்று அவரிடமே கேட்டார்கள்.

அதற்குப் புத்தர் ''திட்டுவது உங்கள் சுதந்திரம் அதை ஏற்றுக் கொள்வது எனது சுதந்திரம்'' என்றார். அவர் மறுபடியும் கிராம மக்களைப் பார்த்து ''இதோ பாருங்கள் உங்கள் கிராமத்துக்கு வரும் முன் நான் இன்னொரு கிராமம் வழியாக வந்தேன். அந்த மக்கள் எனக்கு இனிப்பெல்லாம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதற்கு நான் நன்றி கூறி எனக்கு வேண்டாம் நான் சாப்பிடுவதில்லை. உங்கள் அன்புக்கு நன்றி'' என்று கூறினேன்.

''அந்த இனிப்புகளை என்ன செய்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்'' எனப் புத்தர் கூட்டத்திலுள்ளவர்களைக் கேட்டார்.

கூட்டத்தில் ஒருவர் ''அதை அவரவர் வீட்டுக்கு எடுத்துப் போயிருப்பார்கள்'' என்றார்.

''அதையே தான் நீங்களும் இப்போது செய்யப் போகிறீர்கள். எனக்கு ஏற்படுத்திய அவமானத்தை உங்கள் வீடுகளுக்கு நீங்களே எடுத்துப் போகப் போகிறீர்கள். ஏனெனில் அவற்றை நான் ஏற்றுக் கொள்ள வில்லை'' என்றார் புத்தர்.

பிறகுதான் அந்தக் கிராமத்து மக்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள்.

கோ.சுவாமிநாதன்.

# கடவுளா? கட்சித் தலைவரா?



ஓர் அரசமரத்தடியில் பிள்ளையார் கோயில். சித்தி, புத்தியுடன் விநாயகர் வீற்றிருந்தார். பயபக்தியோடு ஓர் ஏழை விவசாயி பிள்ளையாரிடம் வேண்டுதலைக் கூறி வழிபட்டான்.

''பகவானே உழுது பயிர் செய்து இருக்கிறேன். நான்கு நாள்களாக மழை இல்லை. இன்றைக்கு மழை பெய்தால் உனக்கு தேங்காய் உடைக்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டு புறப்பட்டான்.

அடுத்த வினாடியில் வந்த ஒருவன் ''சாமி செங்கல் சூளை போட்டு இருக்கிறேன். மழை பெய்தால் வியாபாரம் கெட்டுவிடும். ஒருவாரம் மழை பெய்யக் கூடாது. அப்படிப் பெய்யவில்லை என்றால் உனக்குத் தேங்காய் உடைப்பேன்'' என்று வேண்டிக் கொண்டு புறப்பட்டான்.

பிள்ளையார் என்ன செய்யப் போகிறார். பிரச்சினை தொடங்கியது. சித்தி ''மழை வேண்டும்'' என்றும் புத்தி ''மழை வேண்டாம்'' என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

பிள்ளையார் குறும்பாக மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் பிள்ளையாருக்குத் தேங்காய் கிடைக்கும் என்றபடி கண் சிமிட் டினார். மேலும் அவர் கூறுகையில் '' மூடர்கள்... விவசாயி சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக மழை காலம் கொடுத்தேன். செங்கல் சூளைக் காரன் வாழ வெயில் காலம் கொடுத்தேன். ஆனால் அந்தக் காலத்தை சரியாகப் பயன்படுத்தாமல் காலமற்ற காலங்களில் செய்து விட்டு கடவுள் துணை நிற்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எல்லோருக்கும் நல்லது நினைக்கின்ற பொதுவான நீதிபதி தான் கடவுளே ஒழிய தன்னைச் சுற்றும் கூட்டத்துக்கு நல்லது செய்கின்ற கட்சித்தலைவனாக என்னை நினைக்கிறார்களே. தர்மத்தின் வழியில் மழை தீர்மானம் ஆகிறது. அதில் ஏன் நான் தலையிட வேண்டும். நான் நீதிமான்'' என்று கூறி முடித்தார்.

கடவுள் நீதிபதியே ஒழியகட்சித் தலைவர் அல்ல. புரிந்தால் நல்லது.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்கெட்டுகிறது; வாய்க்கெட்டவில்லையே!

யாழ்ப்பாணம் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு குடாநாடாகும். அதுமட்டுமன்றி சுற்றிவர கடனீரேரியையும் அது கொண்டுள்ளது. மண்டலாயில் இருந்து வல்வெட்டித்துறைக்கு மேற்கே கடலில் கலக்கும் தொண்டமானாறு, கப்புதூ வெளியில் இருந்து நாவற்குழி வரை நீளும் உப்பாறு, ஆனையிறவு என கடனீரேரியின் பரப்பும் பெரியது. இவற்றால் மீன் வளம் செறிவாக இருப்பதற்குரிய பல காரணிகள் கொண்டதாக யாழ்.குடா நாடு இருக்கிறது.



அத்துடன் கடலடித்தள மேடையும் இப்பிரதேசத்தில் உள்ளது ஆழமற்ற கடலில் சூரிய ஒளி அதிகம் படுவ்தால் கடல் - பிளாந்தன்கள் - எனப்படும் தாவரங்கள் அதிகளவில் வளர்கின்றன. இவை மீன்களின் உணவாகப் பயன்படுவதுடன் மீன்களின் இனப்பெருக்கத்துக்கும் சிறிய மீன்களின் வாழ்வுக்கும் உதவியளிப்பனவாக உள்ளன அத்துடன் ஆழமற்ற கடலாதலால் சூரிய வெப்பம் பட்டு மீன்கள் பெருகி வாழ்வதற்குரிய மிதமான வெப்பநிலையும் காணப்படுகின்றது.

இதனால் யாழ். மாவட்டம் மீன்பிடித் தொழிலில் நீண்ட காலமாக முதன்மையான இடத்தையே வகித்தது. இலங்கையின் சிறந்த மீன்பிடித் துறைமுகங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தின் வடக்கே காங்கேசன்துறைக்கு அடுத்த ஊரான மயிலிட்டி விளங்கியது. தென்னிலங்கையிலிருந்து வரும் நூற்றுக்கணக்கான லொறிகளில் இங்கிருந்து கடற்செல்வம் தென்னிலங்கைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. யாழ்ப்பாண மீனவர்களின் வாழ்வில் வசந்தம் வீசிய காலமாக அது இருந்தது. இங்குள்ள லொறி உரிமையாளர்கள், தரகர்கள், ஐஸ்கட்டித் தயாரிப்பு நிலையங்கள், வலை உற்பத்தியாளர், விற்பனையாளர் என எண்ணற்றோரின் தொழில்வாய்ப்புக்கும் அக்காலம் இடமளித்தது. குடாநாட்டு மக்களின் மீன்தேவையை நிறைவாக்கும் வகையில் கடற்தொழில் சிறப்புற்றிருந்தது.

அதன் பின் 1990 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற யுத்தம் படிப்படியாக வலிகாமம் வடக்கின் பல கடற்கரைக் கிராமங்களிலிருந்த மக்களை இடம் பெயர்த்தது. பின்னர் அது முழுமையாகவே யாழ். குடாநாட்டுக் கரையோரங்களிலிருந்தும் மக்களை இடம்பெயர்த்தியது; அல்லது கடலில் இறங்க முடியாத நிலையை யுத்தம் ஏற்படுத்தியது. கடல் வலயத் தடைச் சட்டத்தின் மூலம் மீனவர்கள் எவரும் கடலில் இறங்க முடியாமல் போய்விட்டது. இதையும் மீறித் தமது ஜீவனோபாயத்ததை மேற்கொள்ள விளைந்தவர்கள் சுடப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர்.

இத்தகைய பல அனர்த்தங்களுக்கும் நடுவே கூட ஓரளவுக்கு குடாநாட்டு மக்களால் மீன்களைப் பெற முடிந்துள்ளது. ஆனால் இப்போது படிப்படியாக கடல் வலயங்கள் அகற்றப்பட்டு மீன் பிடிக்கும் பிரதேசங்கள் அகலிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இன்னமும் அகற்றப்படாதுள்ள - உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. தொண்டமானாற்றி லிருந்து பலாலி, மயிலிட்டி, காங்கேசன் துறை, கீரிமலை, சேந்தாங்குளம் ஈறாக மாதகல்வரை இவ்வாறு மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள நீண்ட கடற்கரைப் பிரதேசம் இன்னமும் உள்ளது. இது தவிரவும் மேலும் சிறுசிறு பகுதிகளும் உள்ளன.

வலி.வடக்கிலுள்ள மேற்குறிப்பட்ட பகுதிகளே அதிகளவில் மீன் பிடிக்கப்படும் பிரதேசங்களாகும். யாழ். குடாநாட்டின் சந்தைகளுக்கு மட்டுமல்ல தென்னிலங்கைச் சந்தைகளுக்கும் இங்கிருந்தே அதிகளவு மீன்கள் கொண்டு வரப்பட்டன.

ஆனால் யாழ்.குடாநாட்டில் தற்போது மீன்களுக்குத் தட்டுப்பாடான நிலையும், விரும்பியவாறு மீன்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையும் காணப்படுகிறது. அத்துடன் கடந்த காலங்களுடன் ஒப்பிடுமிடத்து மீன்களின் விலையும் மிக உயர்வாக உள்ளதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். "மீன்கள் அதிகம் சந்தைக்கு வராத, அதிகம் தட்டுப்பாடு நிலவிய காலங்களை விடவும் தற்போது விலை அதிகமாக உள்ளது'' என்கிறார் பாவனையாளர் ஒருவர்.

வடமராட்சியில் மீனைக் கொள்வனவு செய்யும் உள்ளூர் விவசாயி ஒருவர் தம்மால் இத்தகைய விலையில் மீன்களைக் கொள்வனவு செய்ய முடியாதிருப்பதைச் சுட்டிக் காட்டினார். அதிகாலையிலே எழுந்து வடமராட்சிக் கடற்கரைக்குச் சென்ற போதும் தமக்கு நல்ல மீன்கள் கிடைப்பதில்லை என்கிறார் அவர். மீன்பிடிப்படகுகள் வந்ததும் முதலில் தென்னிலங்கைக்குக் கொண்டு செல்வதற்காக கூலர் வாகனங்களில்வரும் பெரிய வியாபாரிகளுக்கே அவை விநியோகிக்கப்படுகின்றன.

அவர்கள் மிகப் பெரிய மீன் வகைகளையும், அதிக கிராக்கியுள்ள மீன்களையும் எடுத்துச் செல்கிறார்கள். சாதாரணமாக 30 ரூபா விலை போகும் சூடை மீனைக்கூட அவர்கள் நூறு ரூபாவுக்கு வாங்கிச் செல்கிறார்கள். சவளைப் பயன்படுத்தி வள்ளங்களிலிருந்து மீன்கள் லொறிக்குள் ஏற்றப்படுகின்றன. அவர்கள் கொள்வனவு செய்து எஞ் சியவற்றையே உள்ளூர் மீன் வியாபாரிகளால் கொள்வனவு செய்ய முடிகின்றது. ஆக,குடாநாட்டில் பிடிக்கப்படும் கடற்செல்வம் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கதையாக தென்னிலங்கைக் குச் சென்று விட, உள்ளூர்வாசிகள் நல்ல மீனைக் கொள்வனவு செய்ய முடியாமல் அங்கலாய்க்கும் நிலையே உள்ளது. உயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் கடற்பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டு அங்கு மீன்பிடித் தொழில் ஆரம்பிக்கப்படும் போது இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படலாம். அல்லாவிடில் எவ்வாறு மலையகத் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உயர்தரத் தேயிலையை நுகர முடியாதுள்ளதோ, அது போலவே குடாநாட்டில் பிடிக்கப்படும் நல்ல மீன்களையும் இங்குள்ளவர்களால் நுகரமுடியாது போகும் நிலையும் தொடரவே செய்யும். ✱

**இமான்**

# முழு நாட்டையும் நோக்கி சம்பந்தன் விடுத்துள்ள செய்தி

## ● முன்னெடுத்துச் செயற்படுவது அரசின் பொறுப்பு

**டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகையில் என் சத்தியமூர்த்தி எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி இது.**

இனப்பிரச்சினைக்கான தீர்வானது ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தான் ஏற்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ராஜவரோதயம் சம்பந்தன் பத்திரிகையாளர் கூட்ட மொன்றில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை இதைவிடச் சிறப்பாக அவர் சொல்லியிருக்க முடியாது.

கடிகார முள்ளை விடுதலைப் புலிகளின் காலத்துக்கு முந்திய நிலைக்கு அவர் தள்ளி வைத்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும். அந்தக் காலத்தில் மிதவாத அரசியலாளர்களும் கூட கருத்து வெளியிடவும் ஒரு பாதையைத் தெரிவுசெய்துகொள்ளவும் வசதி இருந்தது.

இனி, இந்த வாய்ப்பினை முன்னோக்கி நகர்த்துவதும் அரசியல் உரையாடலுக்கான நேர சூசியைத் தயாரிப்பதும் சிங்களஆட்சியாளர்களையும் அரசையும் பொறுத்த விடயம். அதன் மூலம் சகல மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் ஏற்புடையதான ஒரு நிரந்தரத் தீர்வினை உருவாக்கலாம். அவசியமானால் கடும் போக்காளர்களை ஒதுக்கிவிடவும் செய்யலாம்.

சில சமயம் சம்பந்தன் தெரிவித்துள்ள பின் வரும் கருத்து,'' மக்கள் தாம் எங்கு வாழ்கிறார்களோ அங்கு தமது தலைவிதியை ஐக்கியப்பட்ட- பிளவுபடாத இலங்கைக்குள் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை இருக்க வேண்டும்'' என்பது புரிந்து கொள்ளச் சிக்கலாகத் தோற்றலாம். சில சமயம் முரண்பாடாகவும் தெரியலாம். ஆனால் முன்னதாக அவர் கூறியுள்ள '' நாட்டின் ஐக்கியமும், ஆட்புல ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும் ''என்ற சொற் பிரயோகத்துடன் அதனைச் சேர்த்துப் பார்க்க வேண்டும்.


'' சிங்களம்'' மட்டும் அல்லது '' 83 ஆம் ஆண்டின் இனப்படுகொலைகள்'' தொடர்பான உணர்வோடு வாழ்கின்றவர்களும் இலங்கை நாட்டின் குழம்பிய அரசியல் குட்டையில் தேர்தல் கால மீன்பிடிக்கத் தவித்துக் கொண்டிருப்பவர்களுமான சிங்களவர் மத்தியில் வாழும் சந்தேகப் பேர் வழிகளுக்கு அவர் தெரிவித்திருப்பது சரியான பதிலடியாகும். இந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழர்களின் ஒரே ஒரு அங்கீகரிக்கப்பட்ட பெரிய அரசியல் குழுவாகும்.1987ஆம் ஆண்டு சட்டத்தில் உருவாக்கப்பட்ட மாகாணங்கள், மாகாண சபைகள் திட்டத்தை அது ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. இதைத்தான் சம்பந்தன் கூறியுள்ள கருத்து வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஒரு ஜனநாயக அமைப்பில் மக்கள் தமது தலைவிதியைத் தெரிவு செய்து கொள்ளவும் வழி நடத்திக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

'' அவர்களின் விதியைத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை'' என்பது அர்த்தமுள்ள வகையில் அதிகாரப்பகிர்வையே சுட்டுவதாகும். போருக்குப் பிந்திய இலங்கையில் இது ஒரு தவிர்க்க முடியாத செயற்படாகும். இது தாமதமாகலாம். ஆனால் காலமெல்லாம் மறுத்து விட முடியாத ஒன்று.

சம்பந்தன் ஒரு சிரேஷ்ட நேர்மையுள்ள அரசியல் வாதி என்ற முறையில் சங்கை ஊதியிருக்கிறார். இது தமிழர்களுக்காக மட்டுமல்ல இந்த முழு



நாட்டுக்காகவும் எனக் கொள்ளவேண்டும்.

மங்கள முனசிங்க கமிட்டி அறிக்கை, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க வழங்க முன்வந்த அரசியல் பொதிகள் மற்றும் தற்போதைய ஜனாதிபதி ஆரம்பித்த சர்வகட்சி மாநாடு ஆகியவை பற்றியெல்லாம் அவர் குறிப்பிட்டிருப்பதாவது, தமிழர்கள் ஓர் அரசியல் அமைப்புக்குள் இருந்து செயற்படுவதற்கு விரும்புகிறார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

விடுதலைப் புலிகள் மட்டுமல்ல அப்போது பணயமாக வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட சர்வகட்சி மாநாட்டை மட்டுமன்றி 13-A திட்டத்தையும் ஏற்க மறுத்திருந்தன. இவை பற்றி சிங்கள கடும்போக்களர்கள் பலரும்கூட எதிர்க்கருத்துக் கொண்டிருந்தனர்.

இவையாவும் இப்போது மாறிவருகின்றன. 13இன் வழியில் ஒரு தீர்வைப் பற்றி நாட்டில் வெகு காலமாக அலசப்பட்டு வந்துள்ளது. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை மீண்டும் பேச்சுக்கழைப்பதும் அதனை மீள் குடியேற்றம் மீள்கட்டுமானப் பணிகள் மற்றும் தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றில் இணைத்துக் கொள்வதும் அரசின் பொறுப்பில் இருக்கின்றது.

அடிமட்ட நிலையில் மீள்வாழ்வளித்தல் மற்றும் மக்களை மையப்படுத்திய மீள்கட்டுமானங்கள், நல்லிணக்க முயற்சிகள் போன்றவற்றுக்குத் திட்டமிடும் போது தமிழ் மக்களின் அரசியல் மட்டப் பிரதிநிதித் துவத்தன்மையை அரசின் தரப்புக்கு விட்டுக் கொடுத்து விடலாகாது.

நிரந்தரமான அமைதியைக் கொண்டு வரும் முயற்சியில் ஆட்சிபுரியும் சமூகத்தின் ஒரு பிரிவினரது அரசியல் முக்கியத்துவத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் அதிகாரிகளின் செயற்பாடுகள் தேசத்தை எங்கும் கொண்டு சென்று விடமாட்டாது. அபிவிருத்திக்குக் குறிப்பாக வெளியாரின் நேரடி முதலீடுகள் தவிர்க்க முடியாதவையாய் இருக்கின்றன.

அந்த வகையில் சம்பந்தனின் செய்தியானது இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பானது மட்டுமன்று புலம் பெயர்ந்த தமிழர்கள் சார்பிலுமானதாகும். அவர் இலங்கை சிங்கள அரசியலாளர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் போலவே வெளியில் வாழும் புலம் பெயர் தமிழர்களுக்கும் சேர்த்தே இந்தச் செய்தியை விடுத்துள்ளார். ✱

**தமிழில்: ரம்யன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிய மயில் - 2010

ஈயு லங்கா போரம் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''நாட்டிய மயில் 2010'' நடனப் போட்டியின் காலிறுதிப் போட்டி கடந்த 6ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் தலமையில் ஆரம்பமானது.

நிகழ்வை ஈயு லங்கா போரம் நிறுவனத் தலைவர் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் சம்பிராதாய பூர்வமாக மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். நல்லூர் கல்விக் கோட்ட ஓய்வுபெற்ற அதிகாரி திருமதி சத்தியலக்ஷ்மி காங்கேயன் மற்றும் சிறப்பு விருந்தினர்களான விவாகப் பதிவாளர் திருமதி வரதலக்ஷ்மி சோமசூரிய சிங்கம்,கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் சரா புவனேஸ்வரன் ஆகியோர் நிகழ்வில் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

இந்த நடனப் போட்டியில் செல்வி நிஷாதரணி இராஜேஸ்வரன், பாதுஜா தர்மதேவன், தனபாலசிங்கம் சசிகரன், பவித்திரா தயாபரன், கேதீஸ்வரி இராஜசேகரம், கணபதிப்பிள்ளை கருணானந்தன், சண்முகதாசன் நிஷாந்தி ஆகிய போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வு மறுநாள் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய போட்டியில் ஸ்ரீனிவாசன் ஆரணி, சண்முகநாதன் மதுரா, குலசிங்கம் சுகாஜினி,தர்சனா பாலசுப்பிரமணியம் ஆகியோர் போட்டியாளர்களாக் கலந்து கொண்டனர்.

போட்டியில் பங்கு பற்றிய போட்டியாளர்கள் தனபாலசிங்கம் சசிகரன், பவித்திரா தயாபரன், சண்முகதாசன் நிஷாந்தி, தர்சனா பாலசுப்பிரமணியம், கேதீஸ்வரி இராஜசேகரம், சண்முகநாதன் மதுரா ஆகிய போட்டியாளர்கள் அரையிறுதிப் போட்டிக்கு நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டியின் முடிவுகள் அன்றைய தினம் பிற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது ஈயு லங்கா போரம் நிறுவனத் தலைவர் எம்.ரி.எஸ்.இராமச்சந்திரனால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

போட்டியின் விசேட ஆலோசகராக திருமதி அபிராமி காண்டீபன் பங்களிப்பு வழங்கியுள்ளார். நடுவர்களாக யாழ். இராமநாதன் கல்லூரி பிரதி அதிபர் பரத சூடாமணி திருமதி நந்தினி சிவராஜன், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை ''நாட்டியக் கலைமணி'' திருமதி பவானிகுகப்பிரியா மற்றும் சென்னை கலாஷேத்ரத பட்டதாரி செல்வி லக்ஷமி சுப்பிரமணியசர்மா ஆகியோரும் கடமையாற்றினர்.



கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற நாட்டிய மயில் போட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வருடம் இந்த நடனப் போட்டியின் இறுதி நிகழ்வுக்கு ஜனாதிபதியின் தலைமையில் பல அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என எதிர் பார்க்கப்படுகின்றது.


லக்ஸ்மன்

# நமது பெருமை மிகு

## பருத்தித்துறை ஓடைக்கரை வி

## ஒரு பண்பாட்டுத் தெரு பற்றிய

ஒரு பிராந்தியத்தில் அது காலங்காலமாக உருவாக்கி எடுத்த மரபுரிமைச் சொத்துக்கள் போலவே, மரபுரிமை இடங்களும் காணப்படும். உலகம் பூராவிலும் இவ்விதமான இடங்கள் எந்தவிதமான நகர, மாநகர உருவாக்கங்களின் மத்தியிலும் அழிக்கப்படாமல், மாற்றப்படாமல் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றை 'அவற்றின் இயல்புகளோடு பேணிப்பாதுகாத்தல்' மட்டுமின்றி அவற்றைத் தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடியும் மகிழ்கிறார்கள். அவற்றைத் 'தாம் உரிமையாகக் கொண்டிருக்கிறோம்'



என்பதனாலேயே கர்வம் அடைகிறார்கள். எமது தெரு அகலிப்புக்காரர்போல பண்பாட்டு அழிப்புச் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பதில்லை. மாற்று முறைகள் மாற்றுச் செயற்பாடுகள் இருப்பினும், அவற்றை எல்லாம் கவனத்தில் எடுக்காது நூற்றாண்டு கடந்த மரபுரிமைச் சின்னங்களையும் இடங்களையும் அழிப்பது பற்றி எந்தக் கவலையும் இல்லாதவர்களாக இன்றைய உலகத்தவர் இல்லை.

நமது நகரத்தில், நமது கிராமத்தில் இவ்விதமான பல மரபுரிமை இடங்கள் இருந்தன; இருக்கின்றன. ஆனால் பண்பாட்டு - வரலாற்று முதன்மை அடிப்படையில் அவற்றை நாம் காக்க முற்படுவதில்லை. இன்றும் எம்மிடம் வாழும் பல மரபுரிமை இடங்கள் பெரும்பாலும், நமது பண்பாட்டு மரபுரிமையின் சர்வதேச முக்கியத்துவம் பற்றிய விழிப்பாலன்றி, தற்செயலாக தப்பிப்பிழைத்தனவாகவேயுள்ளன. இவ்விதமான சமூக - பண்பாட்டு- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களை இனங்கண்டு பாதுகாக்க உள்ளூர் சமூகமோ தனியார் அமைப்புக்களோ, பிரதேச செயலகங்களோ இதுவரை எதுவும் செய்ததில்லை. பிரதேச செயலகங்களில் கலாசார உத்தியோகத்தர், கலாசார முகாமை உத்தியோகத்தர் பதவிகளில் பலர் உள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு ஆரோக்கியமான எந்த வேலைத்திட்டமும் வழங்கப்படுவதில்லை - அவர்கள் திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் விழாக்களை அலங்




# 'வாடா மாப்பிள்ளை!'

நாளும், பொழுதும் நகர்ந்து கொண்டே செல்ல நவீனத்துவத்தின் பெயரில் புதிய நாகரிகங்களும் நமக்குள்ளே முளைக்கத் தொடங்கிவிட்டன. அவை ஆரோக்கியமான தன்மைக்குப் பதிலாக சிற்றின்பங்களுக்குத் தீனி போடும் வகையில் மட்டுமே அமைந்திருப்பதுதான் வேதனையான விடயம்.

ஒரு பானை சோற்றுக்கு இதோ ஒரு பதமான சோறு -

அது ஒரு கடற்கரையோரக் கந்தசுவாமி கோயில். கந்தசஷ்டியின் இறுதிநாள். சூரன் போரைப் பார்ப்பதற்காகக் கடலெனத் திரண்டிருந்தனர் பக்தர்கள். இரவு 8 மணியளவில் முருகனும் சூரனும் வெளிவீதியில் பக்தர்களின் துணையோடு மோதிக் கொள்ள ஆரம்பித்தார்கள். சூரன் யானைத் தலை, சிங்கத் தலை என்பவற்றை மாறி மாறி அணிந்தபடி ஆவேசமாக முருகனை நோக்கி ஓடிவருவதும் பின்வாங்குவதுமாக இருந்தான். சூரனின் உருவத்தை தாங்கியபடி இளைஞர்கள் உற்சாகத்தோடு சூரன் போர் ஆற்றுகையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு இன்னும் ஊக்கத்தை கொடுப்பது போலவும், அவர்களின் ஆட்டவேகத்துக்கு ஏற்பவும் தவில், நாதஸ்வர வித்துவான்கள் இசையைப் பரவவிட்டுக் கொண்டிருந்தார்கள். துள்ளல் மெட்டுகளில் அமைந்த முருகன் புகழ்பாடும் பக்திப்பாடல்கள் நாதஸ்வரங்களில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தன. திடீரென சூரனைத் தாங்கிக் கொண்டிருந்த இளைஞர்கள் தீவர்த்தி பிடித்துக் கொண்டிருந்த சிறுவனின் காதில் ஏதோ குசுகுசுத்தனர்.



அடுத்த நொடியே சிட்டாகப் பறந்த சிறுவன் நாதஸ்வரக்காரருக்கு தகவலைச் சொன்னான். செய்தி கிடைத்ததும் பக்திப் பாடல்கள் ஓய்ந்து, வக்கிரத்தன்மையான ஆட்ட ஜதிகளைக் கொண்ட சினிமாப்பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின. ஆரம்பமே அட்டகாசம்தான்.

அதிலும் '' வாடா மாப்பிளை.... வாழைப்பழத் தோப்பிலே....''

பாடலுக்கு இளைஞர்களின் உற்சாகம் கரைபுரளத் தொடங்கியது. ஆவேசமாக அது வரையும் போரிட்டுக் கொண்டிருந்த சூரன் இளைஞர்களின் புண்ணியத்தில் 'விஜயா'க மாறி குத்தாட்டம் போட்ட படி முருகனை வலம் வரத் தொடங்கினான். சூரனைத் தாங்கிக் கொண்டிருந்த இளைஞர்கள் தம் தோளில் இருந்த பாரத்தையும் மறந்து கைதட்டிய படி, சினிமாப்படங்களில் வருகிற அசைவுகளோடு ஆடவும் தொடங்கினர். இந்தக் 'கண் கொள்ளாக்காட்சியை' சில இளம் பெண்கள் தமது செல் போனில் படம் பிடிப்பதைக் கண்ட இளைஞர்கள் இன்னமும் தமது ஆட்ட வேகத்தை அதிகப்படுத்தினர். அதற்கிடையில் வேறு பாடல்களும் ( அவையும் குத்தாட்டப் பாடல்கள் தான்) இசைக்கப்பட்டாலும் 'வாடா மாப்பிள்ளையின்' ஆட்டம் வரவில்லை. எனவே வடக்கு வீதியில் மீண்டும் தீவர்த்திப் பெடியன் நாதஸ்வரக்காரரிடம் ஓடினான். மீண்டும் அவர்களில் நாயனத்திலிருந்து''வாடா மாப்பிள்ளை'' புறப்பட்டது. புழுதி பறக்க இளைஞர்களின் ஆட்டம் அசுரவேகத்துக்குச் சென்றது. பக்தர்கள் எல்லோரும் சூரனையே பார்த்த படி நின்றார்கள். பாவம் முருகனைத் தான் எவரும் கவனிக்கவில்லை. சூரன் தான் ஹீரோவாக ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தான். கடைசி வரையும் இதே நிலைமைதான்.

## கோணல் கோலங்கள்

விழாமுடிந்து வீடு செல்கையில் சூரனைக் காவிய இளைஞர்கள் இப்படி தமக்கிடையே பேசிக்கொண்டார்கள் -

''அடுத்த முறை பெரிய 'பொக்ஸ் செற்' போட்டு, சீடியில பாட்டைப் போட்டால் இன்னும் வடிவா ஆட லாம். ஒருக்கா நிர்வாகத்திட்ட இதைப்பற்றி கதைக்கவேணும்''

யார் கண்டது? இளைஞர்களின் இந்தக் கனவு(?) பலித்தால் அடுத்த வருடம் பல வர்ண ஆடைகளோடு, கூலிங்கிளாஸ் அணிந்தபடி சூரபத்மன் உச்சஸ்தாயியில் சீடியில் பாடலைக் கேட்டபடி ஆட்டகாசமாகக் குத்தாட்டம் போடும் நிலை வரலாம். விழாக்களுக்கு வெளிநாட்டுக் காசு!

ஔண்யன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத்தின் மு

(சென்றவாரத் தொடர்ச்சி)

சரி இனி எமது விடயத்திற்கு வருவோம். உலகம் தனது முடிவினை எதிர்நோக்குகின்றது எனக்குறிப்படும் வல்லுநர்கள் தமது முதலாவது ஆதாரமாக முன்வைத்திருப்பது 'மாயன்' நாள்காட்டியைத்தான்.


**மாயன் நாள்காட்டி**

இன்று நாம் பயன்படுத்தும் பல நாள்காட்டிகள் புழக்கத்தில் இருக்கின்றன. நாம் பொதுவாகப்பயன்படுத்தும் ஆங்கில நாள்காட்டியை விட இஸ்லாமியர்களின் நாள்காட்டி, இந்துக்களின் நாள்காட்டி, கிரேக்க நாள்காட்டி என்பன உள்ளன. இவற்றை எல்லாம் விட்டு விட்டு என்ன மாயன் நாள்காட்டி என்று புதுக்கதை அவிழ்க்கிறீர்கள்? என சிலர் கேட்கலாம். மாயன் நாள்காட்டிக்கு விஞ்ஞானிகள் முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணம் இல்லாமலில்லை. மாயன்நாள்காட்டியானது பிரபஞ்சத்தை ஆய்ந்தறிந்து அவற்றில் இருந்து பெற்ற

# மிகுந்த மரபுரிமைகள்

## ரை வீதி:

## ற்றிய குறிப்புகள்



கரித்துக் கொண்டாடி மகிழவைப்பதற்கான ஏற்பட்டாளர்கள் மட்டுமே. ஒவ்வொரு வருடமும் கலாசார விழாக்கள் நடக்கின்றன. மார்தட்டி புத்தகங்கள் போடப்படுகின்றன. ஆனால் அருகில் அழிந்து கொண்டிருக்கும் எமது பண்டைப் பெருமைச் சின்னங்களைக் காப்பார் எவருமில்லை. எல்லோரும் ஏதோவொரு வகையில் அழிப்பார் கைப்பிள்ளைகளாகவே உள்ளோம். பதவிகள் - பட்டங்கள் - பத்திரிகை தோறும் படமிட்டு தம்மைத் தாமே கொண்டாடும் நமது 'புலமையாளர்கள்' - 'அதிகாரிகள்' குறைத்த பட்சம் இந்த ஏழ்மைச் சமூகத்துக்கு உதவலாமே?

இவ்விதமான மரபுரிமை இடங்களுள் ஒன்று பருத்தித்துறை ஓடைக்கரை வீதியாகும். இவ்வீதி இன்றும் பல்வேறு சமூக நிலை மாற்றங்களுக்கு மத்தியிலும் அதனமைவிலும் - செயற்பாட்டிலும் முத்தைய மரபுகள் சிலவற்றை பேணிப் பாதுகாக்கிறது. இது ஒருவகையில் வடமராட்சி மண்ணினதும், ஈழத்தமிழர்களினதும் தனித்துவமான அடையாளம் சம்பந்தப்பட்டது.

ஒடுக்கமான மேற்படி வீதி பருத்தித்துறை நகரத்திலிருந்து மேற்குப் புறமாக நீண்டு செல்கிறது. இவ்வீதியில் ஆங்காங்கு காணப்படும் 'அப்பத்தட்டிகள்' என ஊரவர்களால் அழைக்கப்படும் மாலைநேர உணவகங்களே இவ்வீதியினை ஒரு பண்பாட்டுத் தெருவாக்கும் மிக முக்கியமான காரணியாகும். இன்றைய மொழியில் 'Take Away Shops' எனவழைக்கப்படும் கடைகளை ஒத்தவை இவை. தமது கடை அமைப்பிலும் உணவு வரிசையிலும் தமக்கான தனித்துவத்தை உடையவை இவை.



இந்த 'அப்பத்தட்டிகள்' முன்னைய காலங்களில் வேலிகளில் ஒரு 'பொட்டு' போன்ற அமைப்பைச் செய்து அதற்குத் தட்டி கட்டி அதனைக் கடையாக பாவித்தலாக இருந்துள்ளது. வீட்டோடு அமைத்து இந்தக் கடைகளின் வாயில் / தட்டி சிறிய சுமார் '2×2' அடி பரப்பளவுடைய கதவினை தட்டியினை உடையது. இதனுள் அமர்ந்திருந்து உணவு தயாரிக்கும் பெண் முழுதாக வெளியில் பார்வைக்குத் தெரியாத அளவு சிறிய வாயிலாக இது இருக்கும். இன்று மதில்களின் கீழ்ப்புறமாக மரத்தால் கதவுகளிட்டு இக்கடைகள் இயங்குகின்றன.

இம் மாலைநேரக் கடைகள் குறிப்பாக மாலை 3 மணியிலிருந்து நள்ளிரவு வரை இயங்கியுள்ளன. இப்போது அதன் நேரளவு குறைந்துள்ளது. வெள்ளை அப்பமே இக்கடைகளின் பிரதானமான உணவு. தேங்காய்ப் பால் அல்லது முட்டை விட்டு இந்த அப்பங்கள் செய்யப்படுகின்றன. இதனைவிட தோசையும் இந்த உணவகங்களின் முக்கிய உணவாகும். முன்பு வெள்ளை, பச்சை, சிவப்பு நிறச் சம்பல்களுடன் இத்தோசைகள் பரிமாறப்பட்டன. இன்று இக்கடைகளில் இதற்கு வெளியால் - புட்டு, இடியப்பம் விற்கத் தொடங்கியிருப்பினும் இவை அப்பத்திற்காகவே புகழ் பெற்றிருந்தவை.

சிறு சிறுகத் தேயும் இம்மரபினைத் தொடர்ந்து அழியாது காக்க இப்பிராந்தியமும், அதனை பிரதானப்படுத்தும் அமைப்புக்களும் கவனம் எடுக்கவேண்டும். வடமராட்சிப் பிரதேச சபை ஒருநாள் இவ்வீதியில் ஒரு வருடாந்த 'அப்பத்திரு விழாவை' நடத்தலாம். இதன் மூலம் அதனிருப்பும் முதன்மையும் நிலைநிறுத்தப்படும். பலவேறு விதமான உணவகங்கள் வந்த பின்பும், கிராமியத்தளத்தோடு கூடிய இக்கடைகளின் அமைப்பும் செயற்பாடும் ஒரு மரபுரிமை சம்பந்தப்பட்டது.

ம.திருக்குமரன்

ஒரு காலத்தில் சம்பாங்காரர் என அழைக்கப்பட்ட கப்பலோட்டிகள் அதிகம் வாழ்ந்த, நடமாடிய இவ்வீதி பல களஞ்சியத்தேவையோடு கூடிய பல முற்ற வீடுகள் நெடித்துயர்த்த மதிற் சுவரென தனக்கான வேறும் பல முதன்மைகளை உடையது.

அழித்தல், இடித்தல் என்பதிலேயே கவனம் கொண்டுள்ள எமது சமூகமே! பாதுகாத்தல், பேணுதல் என உச்சரிக்க முன்வருவாயா?


# முடிவு நெருங்குகின்றதா?

தகவல்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. மாயன் நாள்காட்டியூடாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடியதாக இருப்பதாலும் கடந்த நிகழ்வுகளை மாயன் நாள்காட்டியுடன் ஒப்பிடக்கூடியதாக இருப்பதாலும் இதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர்.

சரி மாயன் நாள்காட்டி என்ன தான் சொல்கின்றது? மாயன் நாள்காட்டியில் எதிர்வரும் 2012 மார்கழி 21 ஆம் திகதி உலக முடிவுக்கான நாள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

### சூரியப்புயல்கள்

உலக முடிவு நெருங்குகின்றது எனக்குறிப்பிடும் ஆய்வாளர்கள், அடுத்த அதாரமாகக்குறிப்பிடுவது சூரியப்புயல்களைத்தான். பூமியில் அழுத்த வேறுபாடு காரணமாக ஏற்படும் புயல்களைப்போல சூரியனிலும் நெருப்பு கந்தகத்திலான புயல்கள் ஏற்படுவது வழக்கம். எனினும் அண்மைக்காலமாகப் பெருமளவான கதிர்ப்பு சக்தி இதன் போது



தகவன்

வெளிவிடப்படுவதாக கண்டுபிடித்துள்ளார்கள். இதனால் செயற்கைக் கோள்கள், செய்மதிகள் அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதன் மோசமான பாதிப்பு 2012 அளவில் வெளிப்படக்கூடும் என அவர்கள் எதிர்வு கூறுகின்றனர். (வளரும்)

# நானும் விரதம் இருக்கிறன்

மதங்களோடு மனிதர்கள் பின்னிப் பிணைந்து இரண்டாகக் கலந்து காணப்படுகின்றனர். எந்த மனிதனை எடுத்துக் கொண்டாலும் ஒரு மதத்தைச் சார்ந்தவனாகவே இருப்பான். 'நீயேன் இந்த மதத்தில் இருக்கிறாய்?' என யாராவது கேள்வி கேட்டால் யாருக்கும் உடன் விடை சொல்ல முடியாது. அது தெரியாத விடயமும் கூட.

குறிப்பிட்ட அந்த மனிதன், எப்படி அந்த மதத்தைத் தழுவியவன் என்பது யாருக்கும் தெரியாது. மதம் என்பது மனிதர்களை கட்டுப்பாடாக வைத்திருக்க உதவுகின்றது. தீமையை விலக்கி நன்மையைச் செய்யத் தூண்டுகின்றது. மதத்தில் சொல்லப்படுகின்ற கட்டுப்பாடுகள் தத்துவங்களின் படி அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் தமது வாழ்க்கையைச் சீராகக் கொண்டு செல்கின்றார்கள்.

மதம் சார்ந்த கொண்டாட்டங்கள் திருவிழாக் காலங்களில் விரதம் என்று சொல்லப்படுகின்ற உணவு உண்ணாது இருத்தல் என்பது இறை வழிபாட்டில் ஒரு முக்கிய பகுதியாகக் காணப்படுகின்றது. அநேகமாக எல்லா மதங்களிலும் விரதம் இருத்தல் முக்கியமாக கருதப்படுகின்றது. திருவிழாக் காலங்களில் பக்தர்கள் உணவருந்தாது இருந்து இறை வழிபாட்டில் ஈடுபடுவார்கள்.

தமக்கு ஏற்றவாறு பொருத்தமானதைத் தெரிவு செய்து விரதம் இருத்தலைக் கடைப்பிடித்து வருகிறார்கள். எமது விரதங்களில் பெண்களே பெரும்பாலும் கைக்கொள்ளும் ''பாத்திரங்களாக'' உள்ளனர். இவர்களுக்கு நவராத்திரி பூசை தொடங்கி, கேதார கௌரி விரதம், கந்த சஷ்டி விரதம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை என எல்லா சமய விழாக்களும் தயாராக உள்ளன.

இப்புண்ணிய காலங்களில் பெண்கள் விரதம் இருந்து கொண்டு குடும்பத்தைக் கவனித்து கொள்வதை நாம் இப்போதும் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

நாம் வாழ்ந்து வந்த பருவத்தில் விரதங்களை அனுட்டிப்பது வயது வந்தவர்களின் பங்காகவே இருந்து வந்துள்ளது. எமது பெற்றோர்கள் இதனை ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்தனர். அதிக பணவரவு இல்லாத கால கட்டங்களில் அவர்கள் ''சமயம் சொன்னது போலே'' நடையாய் நடந்தே தமது வழிபாட்டை நிறை வேற்றி வந்தனர்.

தமது பிள்ளைகளின் எதிர் கால நலனுக்காகவே தாங்கள் விரதம் இருப்பதாக அவர்கள் கூறிக்கொள்வார்கள். அதில் உண்மையும் இருந்தது. இந்த நவீன யுகத்தில் விரதங்கள் புதிய வடிவங்கள் பெற்று விட்டன. வயது வித்தியாசமின்றி எல்லோரும் கட்டாயம் விரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள்.

பணவரவு, நாகரிகம் என்பன மிக வளர்ச்சி அடை ந்து கொண்டிருக்கும் போது மனிதர்களும் மாறிக் கொண்டு வருகிறார்கள். விரதம் அனுஷ்டிப்பதை பள்ளிக்குப் போகும் சின்னஞ் சிறுசுகளும் கைக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். மிகவும் சோர்வான நிலையில் இருந்த மாணவியைப் பார்த்த வகுப்பாசிரியர் அதனை அவதானித்து அதற்குரிய காரணத்தைக் கேட்டபோது அம்மாணவி நான் கேதாரகௌரி விரதம் இருப்பதாகப் பதில் சொன்னார். அவரது வயதோ பதின்னொன்று தான்.

இது இவ்வாறு இருக்க தரம் ஆறு படிக்கும் மாணவனைக் கேட்டபோது '' நானும் கௌரி விரதம் இருப்பதாகக்'' கூறினான். இளவயதில் இப் பிள்ளைகள் விரதம் இருப்பது கட்டாயம் தேவையான விடயமா? நன்கு உணவு உட்கொண்டு விளையாடி உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வளர்த்து நோய் நொடியின்றி எதிர்காலத்தை எதிர் கொள்வது தான் இவர்களின் இப்போதைய தேவை.

உணவு இல்லாமல், போசாக்கு இல்லாமல் மூளை வளர்ச்சி எவ்வாறு நடைபெறும்.

பாவம்! பிள்ளைகள் தாங்களும் ''பெரியாக்கள்'' போல சாதனை படைப்பதாக எண்ணுகிறார்கள். விரதம் இருப்பதன் மூலம் பிள்ளைகளுக்கு பாடங்களில் அதிக புள்ளிகளோ மேலதிக ஆற்றல்களோ கிடைக்கப்போவது இல்லை. அவர்களுக்கு இன்னும் காலம் உள்ளது. உங்கள் கருத்தை அவர்களுக்கு திணிக்க வேண்டியதில்லை. நாம் விரதங்களை கைக்கொள்வது சாதனைக்காக அல்ல. நன்மை கிடைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

விரதம் என்பது உருவானது உடல் உள ஆரோக்கியத்திற்கே விரதத்தைக் கைக் கொள்வதன் மூலம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் உடல் உறுப்புக்களுக்கு ஓய்வு கொடுக்கின்றோம்.

இதனால் நன்மை அடைவது நாங்களே. உதாரணமாக மதுப்பழக்கம் உள்ள மனிதர் விரதம் இருக்கும் நாளில் குடிக்காமல் இருப்பதால் இந் நாள்களில் ஈரலின் ஆயுள் மேலும் நீடிக்கப்படுகின்றது. எனவே எதனையும் அறிவு பூர்வமாக சிந்தித்தலே சாலச் சிறந்தது. இல்லாது விட்டால் என்ன நடக்கும்? கீழே படியுங்கள்!

''தம்பி தந்த மருந்துகள் எல்லாம் ஒழுங்கா போட்டனீங்கள் தானே?''

''...........'' மௌனம்

''என்ன பேசாமல் இருக்கிறீர்?''

''ஐயா! இப்ப கந்த சஷ்டி விரதம், குளிசை போடமாட்டன்'' அட நீர் விரதம் இரும், நான் தடுக்கேல்ல. நோய்க்கு குளிசையைப் போடுமன், வருத்தம் திரும்ப வந்திருமெல்லே'' ''இல்லை ஐயா! விரத நாள்களில் குளிசை போடமாட்டன்' விரதம் முடியப் போடுறன்'' விடாப்பிடியான இந்த நோயாளியின் இந்த நிலை உங்களைவ் சார்ந்தவர்களுக்கும் வரவேண்டுமா? தெளிவான முடிவை எடுங்கள்.

தொல்புரம்: சி.கதிர்காமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN UK




## இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதி வழங்கலும்

லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் IELTS இன்றி ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும். January மற்றும் February Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

| காலம் | 14th November 2010 (Sunday) - 10.30 a.m |
|---|---|
| இடம் | GREEN GRASS HOTEL, NO:33 ASIRVATHAM LANE, HOSPITAL ROAD, JAFFNA |

**SEP/OCT மாதங்களில் விசா கிடைத்து பயணமானவர்கள்**



பதிவுகளுக்கு **COLOMBO - 0117 555511, JAFFNA - 021 7538395**
**HOTLINE - 0117 555514**

விசா நடைமுறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது*

**எமது சேவை முற்றிலும் இலவசமானது**

*Condition Apply

EXPONET Overseas Consultants

Head office - 379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka.

Jaffna Branch - 102 2/2, Navalar Road, Jaffna.

London Branch - No:56,The Gradens Harrow Middlessex Ha1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அகதிகள் விடயத்தில்

# ஆஸ்திரேலியாவின் அணுமுறையை சாடுகிறது அந்நாட்டு உயர்நீதிமன்றம்

கொழும்பு, நவ. 13

இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசு கடைப்பிடிக்கும் அணுகுமுறைகள் முற்றிலும் தவறானவையாகவே காணப்படுகின்றன என அந்நாட்டு உயர் நீதிமன்றம் சாடியுள்ளது.

இதேவேளை, ஆஸ்திரேலிய அரசின் இத்தகைய அணுகுமுறைகள் காரணமாக அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நூற்றுக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் மேன்முறையீடு செய்வதற்கும் சிபாரிசு செய்துள்ளது.

அவர்களில் சிலர் கடந்த ஒக்ரோபர் மாதமளவில் கிறிஸ்மஸ்தீவை வந்தடைந்தவர்கள் என்றும், அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டு - நாடு கடத்தப்படும் நிலையில் இருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப அகதிகள் மேன்முறையீடு செய்யும் பட்சத்தில் அவர்களின் அகதி அந்தஸ்து ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக நம்பப்படுகின்றது.

அத்துடன், அகதி அந்தஸ்துக் கோரி வருவோரை கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்து வைத்து விசாரிக்கும் ஆஸ்திரேலிய அரசின் நடைமுறையையும் அந்நாட்டு நீதிமன்றம் கடுமையாகச் சாடியுள்ளது. (சி)

சாதனை...



யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தால் விசேட தேவை யுள்ளோருக்கு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களில் ஒருவனுக்கு மேற்படி பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர் அண்ணாவியார் கி.கிறிஸ்தோப்பர் பதக்கம் அணிவிப்பதை படத்தில் காணலாம்.(படம்: வண்ணைச் செய்தியாளர்)

ஜனாதிபதியின் பதவியேற்பை ஒட்டி

# 2,000 கோடி ரூபாவைத் திரட்ட 15 ஆம் திகதி முதல் சேமிப்பு வாரம்

கொழும்பு, நவ. 13

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதிக் குள் 2,000 கோடி ரூபாவை சேமிப்புக்காகத் திரட்டுமாறு அனைத்து அரச வங்கிகளின் நிர்வாகிகளுக்கும் நிதியமைச்சு பணித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு 'ஆசியாவில் எழுச்சி பெற்று வரும் ஆச்சரியத்துக்கு வலுச்சேர்க்கும் சேமிப்பு வாரம்' என மேற்படி வாரத்துக்குப் பெயர் சூட்டி சேமிப்புக்களை மேற்கொள்ளும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு திறைசேரியின் செயலாளரான கலாநிதி பீ.பி.ஜயசுந்தர அரச வங்கிகளுக்கு அறிவித்துள்ளார்.

அதற்கமைய, மேற்படி வாரத்தில் அரச வங்கிகள் அனைத்தும் முற்போக்கான, கவர்ச்சிகரமான பிரசாரத் திட்டங்கள் மூலம் பொதுமக்களிடமிருந்து குறைந்தபட்சமாக 2,000 கோடி ரூபாக்களையாவது சேகரித்துக் கொள்ள வேண்டியுள்ளது எனவும் அரச வங்கிகளின் தலைவர்களுடனான கலந்துரையாடலின்போது திறைச்சேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார். இவ்வாறு சேகரித்துக் கொள்ளப்படும் சேமிப்பு நிதியின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு கடன்களை வழங்கும் முயற்சிகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் வங்கிகளின் தலைவர்களுக்கு விளக்கியுள்ளார்.

அத்தோடு எதிர்வரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு கொள்கைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அரச வங்கிகள் இயன்ற அளவுக்கு சேமிப்புக்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்எனவும் திறைசேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார். (த-22)

# தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை

அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மட்டுமே தொண்டு நிறுவனப் பணியாளர்கள் இலங்கையில் கடமையாற்ற முடியும் - என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பணியாற்றி வரும் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் நன்மையை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இயங்கி வரும் சகல தொண்டு நிறுவனப் பணியாளர்களும் நல்ல எண்ணத்துடன் கடமையாற்றி வருகின்றனரா என்பதனை உறுதி செய்வதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தொண்டு நிறுவனங்களில் கடமையாற்றும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்யும் பணியாளர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சில தொண்டு நிறுவனங்கள் நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட்டன. தொண்டு நிறுவனம் என்ற போர்வையில் சில நிறுவனங்கள் நாட்டின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படும் வகையில் செயற்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இறைமையாண்மையுடைய நாடு என்ற வகையில் நாட்டில் இயங்கி வரும் தொண்டு நிறுவனங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான சகல உரிமையும் அரசிற்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ இராச்சியம் மற்றும் அமைச்சரவை ஆகியவற்றை புலிகள் உருவாக்கியுள்ளனர் எனவும் ஜனநாயக ரீதியில் ஆட்சி பீடமேறிய அரசு ஒன்றுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்படும் நிலைமை கவலையளிக்கிறது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள உருத்ரகுமாரன் அமெரிக்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை நடத் தியுள்ளார் என்றும், உரிய தருணத்தில் அமெரிக்காவுடன் இந்த விடயம் குறித்து பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் பங்கேற்பதற்கு பி.பி.சிக்குத் தடை

கொழும்பு, நவ. 13

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளில் செய்தி சேகரிப்பதற்கு இலங்கை அரசு பிபிசி. செய்தி ஊடகத்துக்கு மீண்டும் தடைவிதித்துள்ளது.

ஜனாதிபதி அதிபர் மகிந்த ராஜபக்ச நியமித்துள்ள படிப்பனைகளில் இருந்து பாடம் கற்பதற்கான நல்லிணக்க ஆணைக்குழு நேற்று முன்தினம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் நான்கு நாள்கள் அமர்வுகளை நடத்துகிறது.

இந்த ஆணைக்குழுவின் அமர்வுகள் குறித்து செய்தி சேகரிப்பதற்கு பிபிசி ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரியிருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய செய்திகளை சேகரிப்பதற்காக வடபகுதி செல்வதற்கு பிபிசி ஊடகவியலாளர் களுக்கு இலங்கை அரசு தடைவிதித்திருப்பது இது இரண் டாவது தடவையாகும்.

ஏற்கனவே கிளிநொச்சியில் நடைபெற்ற அமர்வுகளின் போது செய்தி சேகரிப்பதற்கும் பிபிசி ஊடகவியலாளர்களுக்கு இலங்கை அரசு தடை விதித்திருந்தது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையிலும் இராணுவக் கட்டுப்பாட் டுக்குள் தான் மக்கள் வாழ்ந்து வருவதாகவும், வெளிநாட்ட வர்கள் அங்கு செல்வதானால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளதாகவும் பிபிசி தெரிவித்துள்ளது. (த)

# இன்னும் இரு ஆண்டுகளில் மஹிந்த அரசு தோற்கடிக்கப்படும் என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ. 13

இன்னும் இரண்டு ஆண்டுகளில் தற்போதைய அரசு ஜனநாயக ரீதியில் தோற்கடிக்கப்படும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

மாத்தளை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமைய்யில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டமொன்றில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்தவர்கள் இன்று அதிருப்தியுடன் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்துமாறும், பொருட்கள் சேவைகளுக்கான விலையை குறைக்குமாறும் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளன எனவும் சர்வாதிகார ஆட்சியொன்றை நடத்த அரச முனைப்புக் காட்டி வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பிற்காகக் கூடுதலான செலவுகளைச் செய்ததால் பொருட்கள் சேவைகளுக்கான விலையைக் குறைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.(சி)

# வாகனப் புகைப் பரிசோதனை; அரசுக்கு 9 கோடி ரூபா வருமானம்

போக்குவரத்து அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

வாகனப் புகைப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இதுவரை அரசு ஒன்பது கோடி ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வாகனங்கள் வெளியேற்றும் புகையைப் பரிசோதனை செய்ய நாடெங்கும் 99 நிலையங்களும் 110 நடமாடும் வாகனங்களும் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புகை பரிசோதனை செய்யும் நிலையங்களின் நிலைமைகளை அவ்வப்போது ஆராய்வதற்காக தனிப்பட்ட விஜயத்தை தான் மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் அங்கத்தவர் சுனில் வதந்துன்நெத்தி எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (த)

# குற்றவாளிக்கு இயற்கையே தண்டனையை வழங்கும்

பொன்சேகா கூறுகிறார்

''குற்றவாளிகளுக்கு இயற்கையே தண்டனையை வழங்கும்'' - என்று முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி வழக்கு விசாரணைகளில் கலந்து கொள்ள வந்திருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவ நிகழ்வின்போதும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், குற்றவாளிகளுக்கு இயற்கையே தண்டனையை வழங்கும் எனவும் கூறியுள்ளார். (இ)

# இதுவரை 5400 முன்னாள் போராளிகள் விடுதலை என்கின்றார் டி.யூ.குணசேகர

கொழும்பு, நவ. 13

முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் இதுவரை 5400 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

வழக்குத் தொடரப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களைத் தவிர ஏனைய அனைவரும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டு. மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர், இலங்கைக் கம்யூனியூஸ்ட் கட்சியின் மட்டு. மாவட்ட தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேசும் போதேமேற்கண்டவாறுதெரிவித்தார்.

இறுதியாக 58 முன்னாள் போராளிகள் வெலிகந்தை புனர்வாழ்வு நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் விடுதலை செய் யப்பட்டனர் எனவும் அவர் கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரும்புக் கதவில் அகப்பட்டு பெண் பரிதாப உயிரிழப்பு

## கொட்டகலையில் சம்பவம்

கொழும்பு, நவ. 13

இரும்பு உருள் கதவில் அகப்பட்டு பரிதாபகரமாகப் பெண்ணொருவர் உயிரிழந்த துயரச் சம்பவம் கொட்டகலை ரொஸிட்டா நகரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் 52 வயதுடைய கந்தசாமிப்பிள்ளை பரமேஸ்வரி என்பவராவார்.

கொட்டகலை ரொஸிட்டா பஜாரிலுள்ள வீடொன்றின் முன்பக்கக் கதவு இரும்பால் செய்யப்பட்டதாகும். இந்த வீட்டிற்கு கொழும்பிலிருந்து வந்த உறவினர்கள் மீண்டும் செல்வதற்காக வீட்டின் கதவைத் திறந்து விட்டு உறவினர்கள் சென்ற பின்னர் கதவை கீழே இழுத்து விட்டு குனிந்து செல்ல முற்பட்டபோது வேகமாகக் கீழிறங்கிய இரும்புக் கதவு இந்தப் பெண்ணின் கழுத்துப் பகுதியில் தாக்கியுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்திலேயே இந்தப் பெண் உயிரிழந்துள்ளார். தற்போது இறந்தவரின் சடலம் நுவரெலியா மாவட்ட நீதிவானின் வருகைக்காக அதே இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (சி)

# 11 நிமிடங்களில் 11 இலட்சம் மரக்கன்றுகள்

## இலங்கை அரசு புதிய உலக சாதனை முயற்சி

கொழும்பு, நவ. 13

11 நிமிடங்களில் 11 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு புதியதொரு உலக சாதனையை நிகழ்த்த அரசு முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டு அனைத்துலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் புதிய உலக சாதனை முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒருகட்டமாக எதிர்வரும் 17 ஆம் திகதி 65 ஆயிரம் பேர் உண்ணக் கூடிய மிகப்பெரிய பாற்சோறும் தயாரிக்கப்படவுள்ளது.

அதேவேளை மற்றொரு உலக சாதனை முயற்சியாக 11 நிமிடங்களில் 11 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

நாளை மறுதினம் திங்கட்கிழமை இந்த உலக சாதனை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. அன்று காலை 10.07 மணி தொடக்கம் 10.18 மணி வரையான நேரத்துக்குள் 25 மாவட்டங்களிலும் இந்த மரக்கன்றுகள் நடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடெங்கும் உள்ள சமுர்த்தி அதிகாரிகள் அனைவரும் தலா 100 மரக்கன்றுகளை நடவேண்டும் என்று அரசு உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்றும், ஆனால் கொழும்பு மாவட்ட சமுர்த்தி அதிகாரிகள் இதற்கெனத் தமக்கு நிதி வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் தெரியவருகிறது. (சி)

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, நவ.13

வடமராட்சி வலய பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகளின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் இவ்விழா நடைபெறும்.

பிரதம விருந்தினராக மாகாணக் கல்வித்திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் கலந்துகொள்கிறார். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கீதா சத்தியபாலன் வழங்குகின்றார். (உ-190)

# 4 ஆடைத் தொழிற்சாலைகள் வடக்கில் நிறுவப்படும்

கொழும்பு, நவ. 13

வட பகுதியில் நான்கு ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன. வட மாகாணத்தில் உள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலே இந்த ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஓமந்தை, நெலுக்குளம், செட்டிக்குளம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது. (சி)

# நாள் பாடசாலையும் கற்கைநெறியும்

யாழ்ப்பாணம்,நவ.13

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமாவுக்கான நாள் பாடசாலை இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன், ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கான நாள் பாடசாலை இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை இன்று ஆரம்பமாக விருந்த தொழிலுரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் புதிய கற்கை நெறி நாளை காலை 9 மணிக்கு நடைபெறும் என்றும் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த-10)


### காணி விற்பனை

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர்ப் பிரதேச செயலகத்திற்கு அருகில்.
தொடர்புகளுக்கு: 0777111400. (105888)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் லைரகா, புறொயிலர் கோழிக்குஞ்சுகள் 19.11.2010ஆம் திகதியும், பிரவுன் பேட்டுக் குஞ்சுகள் 21.11.2010ஆம் திகதியும் விநியோகம் செய்யப்படும்.
எஸ்.கிருஷ்ணகுமார்
மானிப்பாய். தொ.பே.:0772338084. (105886)

### மணமகன் தேவை

பிரான்ஸில் பிறந்து அங்கு நல்ல வேலையில் இருக்கும் 27 வயதுடைய பெண்ணுக்கு பிரான்ஸில் வதிவு உரிமை (PR) உள்ள மணமகன் தேவை.
தொடர்பு: 0033139826450
0033626092194( கைபேசி)
0771600507



வசீகரத் தோற்றத்திற்கு!
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கதம்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.
சந்தனாலேப
யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (சி/555203)

### ஆக்க இலக்கிய படைப்பாளிகளின் நூல் காட்சியும், விற்பனையும்

இடம்: நாவலர் கலாசார மண்டபம் இன்றும், நாளையும்.
காலை 9.00 மணி - மாலை 5.00 மணி
மாலை நேர நிகழ்வுகள்:
சனி பி.ப. 3.00 மணி- மனுபாரதி சஞ்சிகை வெளியீடு
ஞாயிறு பி.ப. 3.00 மணி - மலையக எழுத்தாளர் திரு.பாலமுருகனுடனான கலந்துரையாடல்



BOOK LAB புத்தகக்கூடம்
021- 2227290, 0771285749


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 25.08.1958
விண்ணில்: 25.10.2009

**அமரர் பரசுராமர் ராஜபுவனேந்திரன்**
(சாரதி, ICRC யாழ்ப்பாணம்)

அன்புத் தெய்வமே-எங்கள் அப்பா
ஆண்டு ஒன்று கழிந்தாலும் ஆறவில்லை
எம்மனது ஏக்கத்துடன் கலங்கவிட்டு
ஏனப்பா சென்றீர்கள்?
பாசமுடன் வளர்த்துவிட்டு
பாரைவிட்டு சென்றீர்கள்
பாவிகள் நாம் தவிக்கின்றோம்
குறையேதும் இல்லாத நிறைகுடமே
நீங்களப்பா- இறைவன்
குறைவைக்க எண்ணியதால்
ஆயுளைத்தான் குறைத்தானோ
காலம் தானிருக்க- எம்மைக்
கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
விண்ணோடு சென்றீர்கள்
வேதனையில் தினம்வாடுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி,
பிள்ளைகள்.
நெடுமபுலம்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(105714)

## மரண அறிவித்தல்

### திருமதி விக்ரர் சுகுணவதனி



யாழ்ப்பாணம், சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Clichy Sous Bois ஸைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரர் சுகுணவதனி (04.11.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பீற்றர் விக்ரரின் அன்பு மனைவியும் மிஷலின் பாசமிகு தாயும் கிறிஸ்ரலின் அன்பு மாமியும் றொமியானோவின் பேர்த்தியும் சின்னத்துரை- அன்ரனிப்பிள்ளை (அன்னம்) தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பீற்றர்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (10.11.2010) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரான்ஸ் தொடர்புகளுக்கு:
விக்ரர் - 0033143880377
0033624859509
மிஷல் - 0033645329163
அலன் - 0033664442966.

தகவல்:
நா.சின்னத்துரை
அன்ரனிப்பிள்ளை (அன்னம்).
இல.16/1, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.
(சி/572799)


### நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய நல்ல இன அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777506601, 0774349489 (105885)

### வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையில் 5 அறைகள், பெரிய கோல், சமையலறை, Visiters கோல், வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்ட வீட்டின் மேல்மாடி வாடகைக்கு விடப்படும். அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்றது.
தொடர்பு: 0213219743. (105884)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (105858)

### காணி, கட்டடம் விற்பனைக்கு

கொழும்புத்துறை மேற்கு ஐயா கடைச்சந்தியில் (இந்து மகா வித்தியாலயம் முன்பாக) 6 பரப்புக் காணியும் கடைக்கட்டடமும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: [illegible]
[illegible] மணி வரை
மாலை 6.00- இரவு 9.00 மணி வரை. (சி/572739)


சிவமயம்

## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



மகிமை பெறும் மருத்துவம்
**அமரர் டாக்டர் திருவாட்டி சாவித்திரிதேவி சிவஞானசுந்தரம்பிள்ளை**
(பணி ஓய்வு டாக்டர், ஆதார வைத்தியசாலை, மன்னார், மந்திகை)

தோற்றம் 24.12.1939 மறைவு 12.10.2010

திதி: பஞ்சமி

நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்

பாரத தேசத்தில் 12.10.2010 இல் சிவபதமடைந்த அன்புச் சகோதரியின் முப்பத்தோராம் நாள் கிரியைகள் இன்று (13.11.2010) சனிக்கிழமை 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

ச.நவரத்தினராசா
முதலாம் கட்டை ஒழுங்கை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
குடும்பத்தினர்.
(105889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணையப் போவதில்லை மக்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் கூறுகிறார்

திருகோணமலை, நவ.13

''வடக்கு - கிழக்கு இணையப் போவதில்லை. மக்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்'' இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நிகழ்ந்த வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

இந்துக்கல்லூரி அதிபர் ம. இராசரத்தினம் இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்தார். முதலமைச்சர் சந்திரகாந்தன் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

திருகோணமலை பிரதேச மக்கள் எமக்கு ஒத்துழைப்புத் தருவது மிகவும் குறைவு. இன் னும் இவர்கள் யாழ்ப்பாணத்துடன் இணைந்து போகும் கனவில்தான் உள்ளனர். இனி ஒரு நாளும் இந்த வடக்கு - கிழக்கு இணையப் போவதில்லை. மக்கள் நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல், வட்டார அடிப்படையில் நடைபெறவுள்ளது. மக்கள் இன்னும் பிடிவாதத்துடன் முடிவுகளை மேற்கொள்ளாது சிந்தித்து முடிவெடுத்தல் வேண்டும். உங்களின் ஆரோக்கியமான முடிவுகளே இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு உதவும்.

தலைவர் பிரபாகரனின் மரணச் செய்தியை தொலைக்காட்சியில் பார்த்த நான் மிகவும் வேதனையடைந்தேன். அன்று முழு நாளும் உணவருந்த மனமில்லாது பட்டினியாக இருந்தேன்.



அவரின் பிடிவாதமும் தவறான முடிவுகளும் எதனைப் பெற்றுத் தந்தன? வளரும் சந்ததிகளையும் நாம் யுத்தத்துக்குள் தள்ளி விடுவதா? இன்று பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் நான் இவ்விடத் தில் நிற்க முடியாது. அவர் எப்போதோ என்னைக் கொன்றிருப்பார்.

எனவே, இனியும் நாம் சுயநலவாதிகளின் பின்னால் சென்று, இருப்பதையும் தொலைத்து விடும் நிலைமையை தழுவாது சிந்தித்து முடிவெடுப்போம். மாற்றமுறாதது எதுவுமில்லை.

சில மாற்றங்களை மனசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதுதான் உண்மை; அதுதான் யதார்த்தம். எமது சந்ததிக்காக நாம் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்தாக வேண்டும். எமக்கு சில தார்மீக பொறுப்புகள் உள்ளன. அதனை நாங்கள் நிறைவேற்ற வேண்டும்.

- இப்படி அவர் கூறினார். (ளி)

# கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் அதே வழியில் திரும்ப வேண்டும்

## கிண்ணியா பகுதி மக்கள் கோரிக்கை

திருகோணமலை, நவ.13

திருகோணமலை வீதியில் சீனக்குடா, கிண்ணியா ஊடாகக் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களுக்கான சேவையில் ஈடுபடும் பஸ்கள் இதே வீதியில் திரும்பி வருவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

கிண்ணியா பாலம் திறந்து வைக்கப்பட்டதையடுத்து திருகோணமலை வீதியில் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களுக்கான சேவையில் ஈடுபடும் பஸ்கள் சீனக்குடா, கிண்ணியா, வெள்ளைமணல் ஆகியவற்றுக்கு ஊடாகச் செல்கின்றன.

எனினும் இவை திரும்பி வரும்போது வேறு வழியாகவே வருகின்றன. இதனால் கிண்ணியா, வெள்ளைமணல், சீனக்குடா ஆகிய இடங்களில் இறங்க வேண்டிய பயணிகள் 4ஆம் கட்டை யில் இறங்குகிறார்கள்.

பின்னர் வேறு வாகனங்களில் தத்தம் இடங்களுக்குத் திரும்புகிறார்கள். இதனால் கால விரயமும், பணவிரயமும் ஏற்பட்டு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஆகவே, இவ்வழியாகச் செல்லும் பஸ்கள் மீண்டும் இதேவழியாகத் திரும்புவதற்கு உரிய அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள். (ளி)

# போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசம் நீடிப்பு

மட்டக்களப்பு,நவ.13

மட்டு.போரதீவுப்பற்று பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் நீடித்து வருகிறது. இதனால் யுத்த அனர்த்தங்களின் போது இடம்பெயர்ந்ததைப் போல இடம் பெயரவேண்டிய நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்பட்டுள்ளது என எல்லைப்புறக் கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள்.

காட்டு யானைகளால் பலரின் பயிச் செய்கை, குடிமனைகள், வாழ்வாதாரங்கள் ஆகியவை அழிக்கப்பட்டுள்ளன. பல அப்பாவி மக்களும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

யானைகளின் அட்டகாசம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இதுவரை எதுவித நிரந்தரத் தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் இவர்கள்கவலை தெரிவிக்கிறார்கள். (ளி)




# கஞவாஞ்சிக்குடி பொலிஸில் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு

மட்டக்களப்பு, நவ.13

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை புதிதாக சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவொன்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஆர்.மானவடுவவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கென உப பரிசோதகர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

இப்பிரிவுமூலம் சூழல் மாசடைவதைத் தடுத்தல், பிரதேசத்தில் டெங்கு நோய் ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இப்பிரிவினர் தினமும் காலையில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள அனைத்து இடங்களுக்கும் சென்று சூழல் பாதுகாப்பு சம்பந்தமாகத் தகவல்களைத் திரட்டி நடவடிக்கை எடுப்பாரென்றும் அவர் கூறினார்.

அத்துடன் பிரதேச செயலகம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுடன் இணைந்து இப்பிரிவு செயற்படுமென்றும் அவர் தெரிவித்தார். (ளி)

# இராதாகிருஷ்ணன் விலகியதால் இ.தொ.காவுக்குப் பாதிப்பில்லை

## முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து கொண்டதால் எமது கட்சிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இராதாஷ்ணன் உத்தியோக பூர்வமாக மலையக மக்கள் முன்னணியில் இணைந்து கொண்டமை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே பிரதியமைச்சர் இதனைத் தெரி வித்தார்.

இராதாகிருஷ்ணன் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் போட்டி யிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# பெருந்தோட்டப் பகுதி வீட்டுத் திட்டங்கள் தொழிலாளருக்கே கிட்ட வேண்டும்

## மாகாண உறுப்பினர் முரளி ரகுநாதன் அமைச்சர் விமலிடம் மனு

கொழும்பு, நவ.13

பெருந்தோட்டப் பிரதேசங்களில் அமைக்கப்படும் வீட்டுத்திட்டங்கள் உரிய முறையில் - இலவசமாக - வீடற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கே வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ள மத்திய மாகாண சபை உறுப்பினரும், ஜ.தொ.கா. நிதிச் செயலாளருமான முரளி ரகுநாதன், இது தொடர்பாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கடந்த செவ்வாய்க்கிழமை மனு ஒன்றையும் கையளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:- மனிதனுக்குரிய அடிப்படைத் தேவைகளில் முக்கியமானது வீடு. ஒவ்வொரு மனிதனுக்கும் தனது இருப்பிடம் சொந்தமானதாக இருக்க வேண்டும் என்பது கனவு. இந்தக் கனவில் மிதப்போரில் அதிகமானவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களே.

அரசுவருவாய்க்கு முதுகெலும்பாக உள்ள தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பகாலம் தொட்டு லயன் குடியிருப்புகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமக்கென ஒரு சிறு குடிசையாவது சொந்தமாகாதா என்று நூற்றாண்டு காலமாக ஏங்குகின்றனர்.

இவர்களின் வாழ்க்கைத் தரம் நாளுக்கு நாள் மாறுபட்டாலும் லயன் குடியிருப்பு முறை ஒழிக்கப்படவேண்டும்.

தற்போது மலையகத்தில் மாடிவீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மாடிவீட்டுத் திட்டங்களும் ஒரு லயன் முறையே.

இதில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். அத்துடன் இந்த வீட்டுத் திட்டங்கள் குறிப்பிட்ட ஒரு சாராருக்கே வழங் கப்பட்டு வருகின்றன. இதில் அரசியல் தலையீடு உள்ளது என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே, இதில் அரசு தலையிட்டு உண்மையிலேயே வீடுகள் இல்லாத தொழிலாளர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதேவேளை, தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து வீட்டுக்கான கடன்களை அறவிடுவதை விடுத்து அவை இலவசமாக வழங்கப்படவேண்டும் - இவ்வாறு முரளி ரகுநாதன் தெரிவித்தார். (ளி)




# மது ஒழிப்பு நடவடிக்கைகள் நுவரெலியாவில் படுதோல்வி

## நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்கா விசனம்

நுவரெலியா, நவ.13

அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் ''மதுவை ஒழிப்போம்'' திட்டம் நுவரெலியா மாவட்டத்தில் முற்றாகத் தோல்வியடைந்துள்ளது என மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியாவில் அரச அனுமதிபெற்ற இருநூறுக்கும் மேற்பட்ட மதுபானசாலைகள் இருக்கின்றன. அத்துடன் சட்டவிரோத மதுக கள், மதுபானம் போன்றவற்றை விற்பனை செய்யும் ஏராளமான நிலையங்களும் உள்ளன.

இதன் காரணமாக இம்மாவட்ட மக்களில் பெரும்பாலானோர் முற்றுமுழுதாக மதுவுக்கு அடிமையாகியுள்ளனர். இவர்கள் மதுவுக்காக தமது வருமானத்தில் பெரும்பகுதியைச் செலவிடுகின்றனர்.

எனவே, இந்த மக்களை மதுப் பழக்கத்திலிருந்து விடுவிப்பதற்கான துரிதமான - ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது - இவ்வாறு ஸ்ரீரங்கா தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலைமையில் அண்மை யில் நுவரெலியா புனித திருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்பதிகாரிகள் குழுக்கூட்டத் தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஸ்ரீரங்கா எம்.பி.மேற்கண்டவாறு தெரிவித்தார். (ளி)

# தமிழ்நாட்டுப் பேராசிரியர் பாலு சாஹித்திய விழாவில் உரை

கண்டி, நவ.13

ஹற்றனில் நடைபெறும் மத்திய மாகாண தமிழ் சாஹித்திய விழாவில் சிறப்புரையாற்றுவதற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞரும், பேராசிரியரும், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான வீ.பாலு அழைக்கப்பட்டுள்ளார். இவரது சிறப்புரைகள் இன்றும் நாளையும் இடம்பெறும். (ளி)

# புலமைப் பரீட்சையில் சிறப்புப்பெற்ற பெருந்தோட்ட மாணவர்கள் கௌரவிப்பு

நுவரெலியா, நவ.13

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பெருந்தோட்ட மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதற்கு கண்டி மனித அபிருத்தித் தாபனம் ஏற்பாடு செய்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பதுளை வாசிக சாலை மண்டபத்திலும்-

20 ஆம் திகதி நுவரெலியா சினிசிட்டா மண்டபத்திலும்-

21 ஆம்திகதி ஹற்றன் டி. கே.டபிள்யூ. கலாசார மண்டபத்திலும்-

22 ஆம் திகதி மஸ்கெலியா பி.எம்.டி. கலாசார மண்டபத்திலும் கௌரவிப்பு நிகழ்வுகள் நடைபெறும் என தாபனத்தின் சாமிமலை - மஸ்கெலியா பொறுப்பாளர் மோகன் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## வன்னியசிங்கம் விஜயகுமார்



தோற்றம்
25.02.1974

மறைவு
07.11.2008

பண்புதனை எமக்கூட்டி
பாசத்தை வாரிவழங்கி
அப்பா என்னும் சொல்லிற்கு
இலக்கணமாய் வாழ்ந்துகாட்டிய
எம் குடும்பத்தின் தெய்வமே
என்றும் உங்கள் பிரிவால் தவிக்கின்றோம்

தேவரையாளி,
நெல்லியடி வடக்கு,
கரவெட்டி. (சி/572812)

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்.


# கலந்துரையாடல்

பருத்தித்துறை, நவ.13

வடமராட்சியில் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பாடசாலைகளில் விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்களை இக்கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-190)

# நட்புதவியாளர் பயிற்சி வடமராட்சியில் 5 நாள்கள்

பருத்தித்துறை, நவ.13

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் (ஜி.ரி.இசட்) நிறுவனத்தினால் பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனைக்கும் பொறுப்பாக இருக்கும் ஆசிரியர்களுக்கான நட்புதவியாளர் பயிற்சி நெறி 5 நாள்கள் தொடர்ச்சியாக வடமராட்சியில் நடத்தப்படவுள்ளது.

பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நாளைமறுதினம் 15அம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை இப்பயிற்சி நெறி நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு பாடசாலைகளில் நட்புதவியாளர் பயிற்சிபெறாத வழிகாட்டலும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியர் அல்லது 10 வருடத்திற்குள் முதல் நியமனம் பெற்ற, மாணவர்களின் உள நலனில் அக்கறையுள்ள ஆசிரியரை அனுப்புமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-190)

# கணித பாடப் போட்டிப் பரீட்சை

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி ஐ.டி.எம். கணினிப் பயிற்சி நிலையம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கணித பாடபோட்டிப் பரீட்சையினை இன்று நடத்தவுள்ளன.

மேற்படி வலயத்தைச் சேர்ந்த 31 பாடசாலை மாணவர்களுக்கு 13 நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், நாவற்குழி ம.வி., வரணி ம.வி., மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., உசன் இராமநாதன் ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி., கொடிகாமம் திருநாவுகரசு ம.வி., கச்சாய் அ.த.க.பாடசாலை, இராமாவில் நலன்புரி நிலையம் ஆகிய நிலையங்களில் பரீட்சை நடைபெறுமென நிறுவனப் பணிப்பாளர் ஆதவன் அறிவித்துள்ளார். (201-207)

# விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

நாவற்குழி, நவ.13

சர்வதேச விஞ்ஞான தினத்தை முன்னிட்டு தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சும் தேசிய விஞ்ஞான மன்றமும் இணைந்து நடத்தும் விஞ்ஞானவினாடிவினாப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலைகளின் மாணவர்கள் உரிய நேரத்திற்குக் கீழ்க் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு சமுகமளிக்குமாறு போட்டியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போட்டி நடைபெறும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:

நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.வலய மாணவர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர கல்லூரியிலும், 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வலிகாமம் வலய மாணவர்களுக்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்திலும், 17ஆம் திகதி புதன் கிழமை வடமராட்சி வலய மாணவர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், 18 ஆம் திகதி வியாழக்கிழமை தென்மராட்சி வலய மாணவர்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீவக வலய மாணவர்களுக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத் திலும் போட்டிகள் நடைபெறும். (ற-121)


## Pharmacy உதவியாளர்கள் தேவை

மானிப்பாயில் Pharmacy இல் வேலை செய்ய அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு: Dr.சுரேஸ்குமார்
0771275264.
(105896)

## வாகனப் பெயின்ற்

30 வருட தொழில் அனுபவமுடையவரால் தங்கள் வாகனங்களுக்குத் தரமான முறையில் பெயின்ரிங் செய்து கொடுக்கப்படும்.

இல.05, சென்.செபஸ்ரியன் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

T.P: 0776136527, 0774577050



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 698 திகதி 11-11-2010

வெற்றி எண்கள்

03 08 27 53 B (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 12,643,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 12,643,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 362 | 1,000/= | 362,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 541 | 1,000/= | 541,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 13936 | 60/= | 836,160/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6583 | 40/= | 263,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 164292 | 20/= | 3,285,840/= |
| | | மொத்தம் ரூ. 6,114,320/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 700526612-9-09 |
| கண்டி | 700522[illegible]3-9-09 |
| காலி | 700532800-5-35 |
| கொழும்பு | 700537188-5-25 |
| பொலன்னறுவை | 700526783-4-14 |
| கம்பஹா | 700537883-5-35 |
| வவுனியா | 700523407-9-29 |
| அநுராதபுரம் | 700525666-5-45 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,514,320/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 13,086,640/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## ஜனஜய லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வாரம் 176 சீட்டிழுப்புத் திகதி 11.11.2010

வெற்றி இலக்கங்கள்: 26 35 44 45 சுப்பர் இலக்கம்: 05

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 8,237,960/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 55764 | ரூ. 20/= | ரூ. 1,115,280/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 5063 | ரூ. 40/= | ரூ. 202,520/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 4414 | ரூ. 100/= | ரூ. 441,400/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 417 | ரூ. 200/= | ரூ. 83,400/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 110 | ரூ. 1,500/= | ரூ. 165,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 6 | ரூ. 3,000/= | ரூ. 18,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 8,237,960/= | |
| மொத்த எண்ணிக்கை | 65774 | | ரூ. 2,025,600/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 8,407,730/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk



## கண்ணீர் அஞ்சலி

### திருமதி அன்னலட்சுமி பேரம்பலம்



யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு வருடா வருடம் உதவித்தொகை வழங்கிப்பங்களிப்புச் செய்து கொண்டிருப்பதற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம், சுழிபுரம்.

[105893]



## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 843 திகதி: 11.11.2010

ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 06 17 57 65
போனஸ் இல: 55

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 22,256,766.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 02 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 262 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 13261 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 184994 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 27577 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
8,501,520.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
22,281,425.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
தொலைபேசி: 2470662, 2470663
இணையம்: www.nlb.lk



## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையுள்ளது)

### கேள்வி கோரல்

### இடிபாடுகளினையும் பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது) கட்டடத்தின் இடிபாடுகளையும், பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் இயந்திரத் தளபாட வசதிகளைக் கொண்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் 420, ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மகாத்மாகாந்தி வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலான நேரத்தில் கூறல் ஆவணங்களினை ரூபா 200/=இனை மீளப் பெற முடியாத பணமாகச் செலுத்தி 15.11.2010ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளவும்.

கேள்வி கோரல் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதி: 19.11.2010 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னர்.

மேலதிக விபரங்களுக்கு எமது மதியுரைஞருடன் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரை அகம்,
08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

முகாமைத்துவப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது).

[105894]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய தலைநகரில் ஜி-20 மாநாடு; பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விவாதம்

சியோல், நவ. 13

ஜி-20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு தென்கொரிய தலைநகர் சியோலில் வியாழக்கிழமை தொடங்கியது.

இந்த மாநாட்டில் சர்வதேச பொருளாதாரத்தை மேம்படுத்துவது குறிப்பாக உலக வங்கி, சர்வதேச செலாவணி நிதியம் உள்ளிட்டவற்றில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வது, பாதுகாப்பான வர்த்தக நடைமுறை உள்ளிட்ட பிரச்சினைகள் விவாதிக் கப்படும்.

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மட்டுமின்றி சர்வதேச பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் இந்த மாநாட்டில் விவாதித்து தீர்வு காணப்படவுள்ளன.



ஜி-20 நாடுகளில் உச்சி மாநாடு தென்கொரியா தலைநகர் சீயோலில் நடைபெறுகிறது. இதில் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ரஷ்யா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி விவாதிக்கின்றனர்

முக்கியமாக அமெரிக்கா - சீனா இடையே எழுந்துள்ள கரன்சி விவகாரம் இந்த மாநாட்டில் பெரும் பிரச்சினையாக விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. மேலும் நடப்புக் கணக்கில் பற்றாக்குறைக்கான (சிஏடி) உச்சவரம்பு நிர்ணயித்தல் உள்ளிட்ட பிரச்சினையும் பூதாகரமாகத் தலைதூக்கும் என்றே பேசப்படுகிறது.

இருப்பினும் இந்த மாநாட்டில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கான முயற்சிகளில் முக்கியமான தலைவர்கள் ஈடுபட் டுள்ளனர்.

பரஸ்பரம் மதிப்பீடு செய்யும் கொள்கைக்கு (எம்ஏபி -'மேப்') அனைத்து நாடுகளும் சம்மதம் தெரிவிக்குமா என்பது முக்கிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

இருப்பினும் ஒருங்கிணைந்த கொள்கை மூலம், ஒவ் வொரு நாடும் மேற்கொள்ளும் வரிச்சலுகை குறித்து மதிப்பீடு செய்ய அனுமதிப்பது குறித்து ஒருமித்த கருத்து எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஷி, ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மார்கெல் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்கின் றனர்.

மாநாட்டுக்கு தென் கொரிய ஜனாதிபதி லீ மியுங்-பாக் தலைமை தாங்குகிறார். ஜி-8 உறுப்பு நாடுகள் அல்லாத வேறொரு நாட்டில் இம் மாநாடு நடைபெறுவது இதுவே முதல் தடவை. அதேபோல ஆசியாவில் முதல் முறையாக இம் மாநாடு நடைபெறுகிறது.

2008ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் இந்த மாநாட்டின் 5ஆவது மாநாடு முதல் முறையாக தென்கொரிய தலைநகரான சியோலில் நடைபெறுகிறது. 'நெருக்கடிக்கு இடையிலும் பரவலான வளர்ச்சி' என்பதே இம்மாநாட்டின் மையக் கருத்தாகும்.

## ஜி.20 மாநாட்டுக்கு எதிராக சியோல் நகரில் ஆர்ப்பாட்டம்

### பெண் தீக்குளிக்க முயற்சி

சியோல், நவ. 13

தென்கொரியாவில் சியோல் நகரில் ஜி.20 நாடுகளின் மாநாடு நடக்கிறது. இந்த மாநாட்டுக்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்கள் பங்குகொண்ட ஆர்ப்பாட்டம் சியோல் நகரில் நடந்தது. பலத்த பாதுகாப்பையும் மீறி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாநாடு நடக்கும் இடத்துக்குச் செல்லும் பிரதான நுழைவு வாயிலுக்கு வெளியே நடுத்தர வயது பெண் ஒருவர் தன் உடலில் பெயிண்டை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றார்.

அவர் தீயை கொளுத்த முயன்றபோது பொலிஸார் அதைத் தடுத்து அவரை காப்பாற்றினார்கள். அதன்பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த மாநாடு தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும் எதிரானது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட கொரிய தொழிற் சங்கத் தலைவர் ஜோங்க் எய் ஹூன் தெரிவித்தார்.

## 6 தீவிரவாதிகள் உயிரிழப்பு


பெஷாவர், நவ. 13

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே வியாழக்கிழமை நடந்த துப்பாக்கிச் சண்டையில் 6 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். இந்தச் சண்டையில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

பழங்குடியினர் அதிகமுள்ள ஓரக்ஸாய் பகுதியில் ஆப்கன் எல்லைக்கு அருகே பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை நோக்கி 10இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டனர்.

படையினரும் திருப்பிச் சுட்டனர். இந்த துப்பாக்கிச் சண்டை சில நிமிடங்கள் நீடித்தது. இதில் 6 தீவிரவாதிகளும் ஒரு பாதுகாப்புப் படை வீரரும் உயிரிழந்தனர். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அனைவரும் தலிபான் ஆதரவு தீவிரவாதிகள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உலக அரங்கில்



பொலிவியாவிலுள்ள புயுயா ராய் மொன்டி என்னும் இம்மலர்ச்செடி அந்திஸின் இராணி என அழைக்கப்படுகிறது. இது 80 ஆண்டுகளுக்கும் 100 ஆண்டுகளுக்கும் இடையில் ஒரு தடவைதான் பூத்துக் குலுங்குகிறது. தற்போது பூத்துப் பொலியும் இப்பூஞ் செடியை உல்லாசப் பயணிகள் திரளாக வந்து பார்த்து இரசிக்கின்றனர். இரு தேன் சிட்டுகள் மது வருந்தி களிக்கின்றன.

## அமெ.ராணுவத்தில் தலைப்பாகையுடன் பணியாற்றும் முதல் சீக்கிய இளைஞன்

வாஷிங்டன், நவ. 13



அமெரிக்க இராணுவத்தில் பணிபுரியும் சிப்பாய்கள் தங்களின் மத அடையாளங்களைப் பயன்படுத்தகூடாது என்ற சட்டம் உள்ளது. ஆனால், அதில் சீக்கியர்களுக்கு மட்டும் தற்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மட்டும் தங்களின் மத அடையாளமான தலைப்பாகை அணியவும், தாடி வளர்த்து கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட மத அடையாளங்களுடன் சீக்கிய வாலிபர் ஒருவர் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது பெயர் சிம்ரன் பிரீத் சிங் லம்பா (வயது - 26). இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரான இவர் கடந்த 2009ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தார்.

பயிற்சியின்போது இவர் தனது மத அடையாளங்களுடன் பங்கேற்றார். இதற்கு கடந்த மார்ச் மாதம் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவர் சீக்கிய மத அடை யாளமான தலைப்பாகை அணியவும், தாடி வைத்துக் கொள்ளவும் அனுமதி அளித்தது. இதைத் தொடர்ந்து, அவர் தனது பயிற்சியை முழுமையாக முடித்து அமெரிக்க இராணுவத்தில் பணிபுரிகிறார்.

கடந்த 20 ஆண்டுகளில் மத அடையாளத்துடன் அமெரிக்க இராணுவத்தில் பணிபுரியும் முதல் சீக்கியர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

சீக்கியர்கள் மீதுள்ள உண்மை, நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது என லம்பா தெரிவித்துள்ளார்.

## சவூதி மீது ஹஜ் பயணத்தின் போது தாக்குதல் நடத்த அல் குவைதா திட்டம்

ரியாத், நவ. 13

சவூதி அரேபியாவிலுள்ள புனித நகரங்களான மக்கா, மதீனா ஆகியவற்றுக்கு இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் உலகம் முழுவதும் இருந்து ஹஜ் புனிதப்பயணமாக ஆண்டு தோறும் செல்வது உண்டு.

இந்த புனிதப்பயணம் எதிர் வரும் 15ஆம் திகதி தொடங்குகிறது. அடுத்த வாரம் இந்தப் பயணத்துக்காக உலக நாடுகளிலிருந்து முஸ்லிம்கள் இந்த நாட்டுக்கு வரும்போது அல்-குவைதா தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது என அந்த நாட்டுக்கு தகவல் கிடைத்து உள்ளது.

இதைத்தொடர்ந்து அந்த நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.இது தொடர்பாக இளவரசர் நயெப் குறிப்பிடுகையில், எந்த தாக்குதலையும் முறியடிக்கும் வல்லமை சவூதி அரேபியாவுக்கு இருக்கிறது'' என்றார்.

அவர் மேலும் கூறுகையில், ''ஹஜ் புனிதப்பயணம் வருபவர்களின் பாதுகாப்புக்கு எந்த குந்தகமும் ஏற்படாமல் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள். மோசமான விளைவு எதுவும் நடக்க இறைவன் விடமாட்டார்'' என்றும் குறிப்பிட்டார்.

## பாகிஸ்தான் உளவுத்துறை அலுவலகம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்; 18 பேர் மரணம்

கராச்சி, நவ. 13

பாகிஸ்தானின் கராச்சியில் தெற்கு துறைமுகப் பகுதியிலுள்ள உளவுத்துறை அலுவலகம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 18 பேர் உயிரிழந்தனர். 115 பேர் காயமடைந்தனர்.

பலத்த பாதுகாப்பு மிக்க பகுதியான இங்கு வெடி பொருள்கள் நிரப்பிய வாகனத்தில் இரவு 8 மணிக்கு வந்த தீவிரவாதிகள் உளவுத்துறை அலுவலகத்தின் வெளிப்பகுதியில் இருந்த பாதுகாவலர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர்.

பின்னர் விரைவாக முன்னேறிய பயங்கரவாதிகள் வெடி பொருள் நிரப்பிய வாகனத்தைக் கட்டடத்தில் மோதி வெடிக்கச் செய்தனர். இதில் அந்தக் கட்டடத்தின் முகப்புப் பகுதி முற்றிலும் சேதமடைந்தது. அருகிலிருந்த கட்டடங்களில் இருந்த ஜன்னல்கள் உடைந்து சிதறின.

இதில் பொலிஸார் உட்பட 18 பேர் உயிரிழந்தனர். குழந்தைகள், பெண்கள் என 115 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டுவெடிப்பு நடந்த பகுதிக்கு அருகில் தான் மாநில முதல்வரின் வீடும், பிரபல ஹோட்டல்களும் உள்ளன. 50இற்கும் மேற்பட்ட கார்கள், ஏராளமான கட்டடங்கள் இந்தத் தாக்குதலில் சேதமடைந்துள்ளன. கராச்சி நகர் முழுவதும் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்குத் தடை செய்யப்பட்ட அமைப்பான தெஹ்ரிக் - இ- தலிபான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் இதுபோன்று பல தாக்குதல்களை நடத்துவோம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகள் எவரும் உயிரிழந்துள்ளார்களா என்பது குறித்து உடனடியாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.பற்றிக்ஸ் அணி சம்பியன்



யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.கோட்டமட்டப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று கோட்ட மட்டச் சம்பியனானது. நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோ.க. பாடசாலை அணி மோதியது.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன.

இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் முதல் பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது.

இரு அணிகளும் கோல்களைப் பெறவேண்டும் என்ற உத்வேகத்துடன் தமது ஆட்டத்தை வேகப்படுத்திக் கொண்டன.

இதன் பயனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஒரு கோலைப் பெற்றது. நாவாந்துறை றோ.க.பாடசாலை அணியினர் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர்.

ஆட்ட முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல்கணக்கில் நாவாந்துறை றோ.க. பாடசாலை அணியை வெற்றிகொண்டு கோட்ட மட்டச் சம்பியனானது. (த-23)

# மானிப்பாய் இந்து வெற்றி

வலி.வடக்கு,நவ.13

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அரையிறுதி ஆட்டமொன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில்இளவாலைபுனிதஹென்றிஸ் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் மோதிக் கொண்ட போதிலும் வெற்றி மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு சாதகமானதாகவே காணப்பட்டது.

முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டு கோல்களைப் பெற்று கொண்டது. அத்துடன் சென். ஹென்றிஸ் கல்லூரியும் ஒரு கோலைப் பெற ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புகளின் மத்தியில் வீரர்கள் உத்வேகத்துடன் களமிறங்கி மோதிக் கொண்டனர்.

மீண்டும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரியை வெற்றி பெற்றது. (த-86)

# கஜித்தாவின் சாதனை பதிவு

வலி.வடக்கு,நவ.13

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் உயரம் பாய்தலில் வடமாகாணத்தின் சாதனையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி.கஜித்தாவின் பெறுபேறு சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பட்டியலை பதிவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.தயுசிகா 1.33 மீற்றர் உயரமும் 2009 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி.கவிதா 1.48 மீற்றர் உயரமும் 2010 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி.கஜிதா 1.55 மீற்றர் உயரமும் பாய்ந்த பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் சாதனையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி.கஜிதாவின் 1.55 மீற்றர் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

# சென்.ஜோன்ஸை வென்றது கொழும்புத்துறை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இறுதியாட்டத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுக் கோட்டச் சம்பியனானது.

நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணி தன்னை எதிர்த்து விளையாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு கோட்ட மட்டச் சம்பியனானது. (த-23)




# சென்.சாள்ஸ் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.கோட்டமட்டப் பாடசாலை களுக்கு இடையேயான 18 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டச்சுற்றுப் போட்டியின் மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் சென்.சாள்ஸ் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். சாள்ஸ் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் சென்.சாள்ஸ் மகா வித்தியாலய அணி தன்னை எதிர்த்து விளையாடிய கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

# போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம்,நவ.13

513 ஆவது படைப்பிரிவினர் நடத்தும் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுத்திடலில் இடம்பெறவுள்ளன.

இதற்கான அனுசரணையை சிமிக், மஞ்சி நிறுவனங்கள் வழங்கியுள்ளன. (த-23)

# போட்டி நிரல் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டி அணி ஒழுங்கு தயாரித்தல் தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக்கெட் அக்கடமியில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள கழகங்கள் தலா ஒரு பிரதிநிதியை கூட்டத்திற்கு அனுப்பி வைக்குமாறும், இந்தக் கூட்டத்தில் பங்கு கொள்ளும் கழகங்களே சுற்றுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும் எனவும் செயலாளர் என்.நிசாந்தன் தெரிவித்துள்ளார். (த-231)

# வென்றது மெய்கண்டான்

வலி.வடக்கு,நவ.13

காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற பாடசாலை அணிகளுக்கான கரப்பந்தாட்ட ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் வெற்றிபெற்றது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் சுமாரான அணிகளாக இருந்த போதிலும் மெய்கண்டான் மகா வித்தியாலயம் உற்சாகமாக விளையாடி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை மெய்கண்டான் மகா வித்தியாலயம் 25:12, 25:16 புள்ளிகள் என்ற அடிப்படையில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தை வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)

# முப்பாய்ச்சல் போட்டியில் கஜேந்திரனுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே அண்மையில் தியகமவில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத் தில் இடம்பெற்ற இவ்வாண்டிற்கான தடகளப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

ஆண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் நா.கஜேந்திரன் முப்பாய்ச்சல் நிகழ்வில் மூன்றாமிடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார். (ஐ-23)

# மத்தியஸ்தர் பரீட்சை பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் ''சி'' தரம் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாகவும், பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைவரையும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவி திருமதி ஜே. எப்.ஏ. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (த-23)

## வெல்பவர் யார் ?





காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவு பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே இன்று சனிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ள கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மோதவுள்ள இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெய்கண்டான் மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணிகள் [illegible] மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்

# இன்ரோஸ் நிதான சதம்; நியூஸிலாந்து 258/4

ஹைதராபாத், நவ. 13

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரெஸ்ட் போட்டியின் ஆரம்ப நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது, நியூஸிலாந்து அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்று ஓரளவு வலுவான நிலையில் உள்ளது.

விக்டோரி தலைமையிலான நியூஸிலாந்து அணி, இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகளைக் கொண்ட ரெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இத் தொடரின் முதலாவது போட்டி அஹமதாபாத்தில் நடந்தது. அந்தப் போட்டி வெற்றி-தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரண்டாவது ரெஸ்ட் போட்டி நேற்று ஹை தராபாத்தில் ஆரம்பமாகியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூ ஸிலாந்து அணிக்கு மைக்கலம் அதிர்ச்சியளித்தார். அவர் 4 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து சென்றார். பின்னர், மறு முனையில் நின்று நிலைத்துக் ஆடிக்கொண்டிருந்த இன்னொரு ஆரம்ப வீரரான மைக் இன்ரோஸுடன் குப்தில் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அவர் 85 ஓட்டங்களைத் தமது பங்குக்காகச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து ரெய்லர் களம் புகுந்தார். நிதான மாக ஆட ஆரம்பித்த அவர் 24 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டமிழந்துசென்றார்.

ஒரு முனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நின்று நிதானமாக ஆடிக்கொண்டிருந்தார் இன்ரோஸ். அவருடன் பின்னர் இணைந்த ரெய்டர் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

மறுமுனையில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய இன்ரோஸ் சதமடித்த (102) கையோடு ஆட்டமிழந்து வெறியேறினார்.

பின்னர், நேற்றைய நாள் ஆட்ட நேர முடிவின்போது நியூஸிலாந்து அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றது.

ரெய்டர் (22), ஹோப்கிங்ஸ் (0) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சஹிர்கக் 2 விக்கெட்டுகளையும், ஸ்ரீசாந்த், ஓயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

# யுவராஜ்சிங் தரம் இறக்கப்பட்டார்; அந்த இடத்தைப் பிடித்தார் ரெய்னா!

புதுடில்லி, நவ.13

இந்தியக் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தப் பட்டியலில் 'ஏ' தரத்திலிருந்து யுவராஜ்சிங் தரம் இறக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக ரெய்னா அந்த இடத்தைப் பிடித்தார்.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், திறமை அடிப்படையில் அவர்கள் 'ஏ', 'பி', 'சி' என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதனடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டுவருகிறது.

இதுவரை 'ஏ' பிரிவில் இருந்த யுவராஜ்சிங், மோசமான ஆட்டம் காரணமாக அவர், 'பி' பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். யுவராஜ் சிங்குக்குப் பதிலாக இளம் வீரரான சுரேஷ்ரெய்னா 'ஏ' பிரிவுக்கு முன்னேறினார்.



அணித்தலைவர் டோனி, டெண்டுல்கர் உட்பட 9 பேர் 'ஏ' பிரிவில் உள்ளனர். இந்தப் பிரிவில் உள்ள வீரர்களுக்கு, முன்னர் ஆண்டுதோறும் சுமார் ஒரு கோடி 40 லட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்பட்டது. தற்போது சுமார் ஒரு கோடி ரூபா சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. இனி அவர்களுக்கு ஆண்டுதோறும் சுமார் இரண்டு கோடி 40 லட்சம் ரூபா வரை வழங்கப்படும்.

இதேபோல 'பி' பிரிவு வீரர்களின் ஊதியமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்பு சுமார் ஒரு கோடி ரூபாவைப் பெற்றனர். இனி அவர்கள், சுமார் ஒரு கோடி 25 லட்சம் ரூபாவரை பெறுவார்கள்.

இதேவேளை, 'சி' பிரிவிலிருந்த விஜய், கோஹ்லி, ஓஜா ஆகியோர் 'பி' பிரிவுக்கு முன்னேறியுள்ளனர்.

'சி' பிரிவு வீரர்களின் சம்பளத்தில் மாற்றம் இல்லை. அவர்கள் ஆண்டுதோறும் சுமார் 60 லட்சம் ரூபா வரை பெறுவார்கள்.

கடந்த பருவகாலத்தில் இருந்த ஒப்பந்த வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 41இலிருந்து 24ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தில் இல்லாத வீரர்கள் எவரேனும் அடுத்த ஆண்டு தேசிய அணியில் ஆடினால் அவர்கள் 'சி' பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழக வீரரான தினேஷ் கார்த்திக் ஒப்பந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். ரோகித் ஷர்மா 'பி' பிரிவிலிருந்து 'சி' பிரிவுக்கு இறங்கியுள்ளார்.

ஆண்டுச் சம்பளம் தவிர வீரர்களுக்கு போட்டிக் கட்டணமும் தனியாக உண்டு. ரெஸ்டில் ஆடும் அணியில் இடம்பெறுவோர் ஒவ்வொரு ரெஸ்டுக்கும் சுமார் 16 லட்சம் ரூபாவும், ஒரு நாள் போட்டிக்கு சுமார் 10 லட்சம் ரூபாவும், 'இருபது-20' போட்டிக்கு சுமார் 5 லட்சம் ரூபாவும் கட்டணமாகப் பெற்றுவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வீரர்களும், அவர்கள் பிடித்துள்ள பிரிவுகளும் வருமாறு:-

'ஏ' - டெண்டுல்கர், டோனி, கம்பீர், ஷேவாக், டிராவிட், லக்ஷ்மன்,ரெய்னா,ஹர்பஜன்சிங்,சஹீர்கான்.

'பி' - யுவராஜ் சிங், இஷாந்த் ஷர்மா, நெஹ்ரா, பிரவீன்குமார், விராத் கோஹ்லி, விஜய், பிரக்யான் ஓஜா.

'சி' - ஸ்ரீசாந்த், அமித்மிஸ்ரா, அஷ்வின், ரோஹித்ஷர்மா, புஜாரா, ரவீந்திர ஜடேஜா, அபிமன்யுமிதுன், வினய்குமார்.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சச்சினுக்குக் கௌரவம்; விளம்பரத் தூதராக நியமித்தது சர்வதேச கிரிக்கெட் சபை!

துபாய், நவ. 13

உலகக் கிண்ணக் (50 ஓவர்கள்) கிரிக்கெட் தொடரின் விளம் பரத் தூதராக, இந்திய அணியின் நட்சத்திர வீரரான சச்சினை, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நியமித்துள்ளது.

இந்தியா - இலங்கை - பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து, அடுத்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 2ஆம் திகதிவரை உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்தவுள்ளன.

அதற்கு இன்னும் சுமார் மூன்று மாதங்கள் உள்ள நிலையில், இத்தொடருக்கான விளம் பரத் தூதராக இந்திய அணியின் நட் சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சினை, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்றுமுன்தினம் நியமனம் செய்தது.

இதுகுறித்து ஐ.சி.சி., தலைமை அதிகாரியான ஹரூன் லார்கட் கூறியவை வருமாறு:-

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தூதராக சச்சினை நியமித்தமை மகிழ்ச்சியளிக்கிறது. இதற்கு, இவரைத் தவிர வேறு எவரும் பொருத்தமானவர்களாக இருப்பார்கள் எனத்



தோன்றவில்லை. இவர் கிரிக்கெட் வீரர்களுக்கு மட்டுமின்றி, அனைத்து விளையாட்டு நட்சத்திரங்களுக்கும் முன்மாதிரியாக விளங்குகிறார். இது இவரது சிறப்பம்சம்'' - என்றார்.

இதுகுறித்து சச்சின் கூறியவை வருமாறு:-

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன். ஏனெனில், இதில் பங்கேற்பதன் மூலம், அதிக தடவைகள் உலகக் கிண்ணத் தொடரில் (6 தடவைகள்) விளையாடிய பெருமையை, பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான மியான்தத்துடன் பகிர்ந்துகொள்வேன்.

இதுதவிர, இம்முறை உலகக் கிண்ணத் தொடர் இந்தியத் துணைக் கண்டங்களில் நடக்கவுள்ளது. சொந்த ம்ண்ணில் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தி, இந்திய அணிக்குக் கிண்ணத்தை வென்று கொடுக்க ஆவலோடு உள்ளேன். சொந்த மண்ணில் நடக்கும் இந்தத் தொடருக்குத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளமை பெருமிதமளிக்கிறது.

ஒருநாள் கிரிக்கெட் அரங்கில், உலகக் கிண்ணத் தொடர் மிகவும் உயர்ந்தது. இதில் பங்கேற்க ஒவ்வொரு வீரரும் விரும்புவார்கள். - என்றார்.

## உலகக் கிண்ணத் தொடரை முன்னிட்டு

# பல்லேகல கிரிக்கெட் மைதான புனரமைப்புப் பணிகள் மும்முரம்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ள பல்லேகல கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணப் பணிகள் இரவு பகலாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆசியக் கண்டத்தில் அடுத்தவருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் போட்டிகள் பல்லேகல மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த மைதானத்தில் வானொலி ஒலிபரப்பு வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன தற்போது தயார் செய்யப்படுகின்றன.


# 'பிபா' செயற்குழு உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்கிறார் பெக்கன் பாவர்

ஜேர்மன் உதைபந்தாட்ட அணியின் முன்னாள் அணித்தலைவரான பெக்கன்பாவர் (வயது-65), 'பிபா' செயற்குழு உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளார்.

உலக உதைபந்தாட்ட சம்மேளனமான 'பிபா'வில் 24 செயற்குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் கூட்டமைப்பு (யூபா) சார்பில் ஜேர்மன் ஜாம்பவான் பெக்கன்பாவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

அவரது பதவிக் காலம் 2011ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் 'பிபா'செயற்குழு உறுப்பினர் பதவியைத் தாம் ராஜினாமாச் செய்யப் போகிறார் என அவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து பெக்கன்



பாவர் கூறியவை வருமாறு:-

''எனது குடும்பத்தினருடன் அதிக நேரத்தைச் செலவழிக்கவே நான் இந்த முடிவுக்கு வந்துள்ளேன். எனக்கு 'பிபா' தலைவர் செப் பிளேட்டர், 'யூபா' தலைவர் மைக்கல் பிளாட் ஆகியோருடன் நல்ல உறவு இருந்து வருகிறது.'' - என்றார்.

கடந்த ஆண்டு பேயர்ன் மியூனிச் அணித் தலைவர் பதவியை பெக்கன்பாவர் ராஜினாமாச் செய்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவ முதல்வன் பொன் விபுலானந்தா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான இருபாலபருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் ஆரம்பமாகின்றது.

(ஐ-23)

## யா/மாதகல் சென். யோசவ் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் - வருடாந்த பொதுக் கூட்டம்

- ★ தலைவர் - வி. நடராசா (அதிபர்)
- ★ காலம் - 21.11.2010. ஞாயிற்றுக்கிழமை
- ★ நேரம் - முற்பகல் 10.00
- ★ இடம் - பாடசாலை மண்டபம்
- ★ விடயம் - புதிய உத்தியோகத்தர் தெரிவு

அனைத்து பழைய மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

அதிபர்
யா/ மாதகல் சென். யோசவ். ம.வி., மாதகல்

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் தை மாதத்தில் நடைபெறவுள்ள தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கமண்டபத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணைச் செயலாளர்கள்

## 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



அமரர்
**நா.பாஸ்கரன்**

மண்ணில்
16.05.1932

விண்ணில்
14.10.2010

மாதமொன்று ஆனபோதும் மாறவில்லை எம் துயரம் நீங்காத நினைவுகள் மாறாது எம் மனதை விட்டு அகலாது அன்புடன் சகோதரர்களைப் பார்த்த அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
பெரியஅண்ணா, அண்ணியின் 23ஆம் வருட நினைவு நாளுடன் உங்களையும் தன்னுடன் அழைத்து விட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கை (ராணி).

உ
சிவமயம்

## 41ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்: 03 ★ 11 ★ 1931



மறைவு: 04 ★ 10 ★ 2010

கடந்த 04.10.2010 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி **பூபாலசிங்கம் சிவமணி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.11.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சோனெழு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (சி-1572814) குடும்பத்தினர்.

## கொழும்பில் சில பகுதிகளில் விடுமுறை

கொழும்பு, நவ.13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்பு 1,2,3 மற்றும் 4 பகுதிகளிலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன் தனியார் ஊழியர்களுக்கு சம்பளத்துடனான விடு முறை வழங்கப்படவேண்டும் என்று தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சர் காமினி லொக்குகே கோரிக்கை விடுத்துள்ளார்.

(சி)

## மிருகவதைச் சட்டம் முழுதாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, நவ.13

மிருக வதைக்கு எதிரான சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மிருகவதைக்கு எதிரான அமைப்பின் பிரதிநிதிகள், ஹெலஉறுமயவைச் சேர்ந்த அத்துரலிய ரத்னதேரர் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியைச் சந்தித்து மிருகவதை தொடர்பாகப் பேச்சு நடத்தினர். அப்போதே ஜனாதிபதி மேற்படி உத்தரவை விடுத்தார்.

(சி)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக Elephant House Ice Cream விற்பனை செய்வதற்கு முச்சக்கரவண்டி சாரதி அனுமதிப் பத்திரத்துடன் சாரதிகள் தேவை. வாகனம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை 14, 15ஆம் திகதிகளில் நேரில் வரவும்.

மேலதிக விவரங்களுக்கு
இல.56, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம், 0771093300 Pirasanna

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது
1 Kg 450/= மட்டும்.
விஜயகுமார், குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

## The 59th Annual Festival of Carols

by The Youth of The North

will be held at

The Peto Memorial Hall

**St.John's College, Jaffna**

on Saturday 13th Nov., 2010 at 4.00 p.m.

Admission by programme Rs. 20/=

# மரண அறிவித்தல்கள்

## குட்டிஐயா யோகீஸ்வரன்



[ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், தொழிலாளர் திணை.]

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டிஐயா யோகீஸ்வரன் (11.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிஐயா - பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் - சண்முகசுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவியின் அன் புக் கணவரும் அமரேசன், குகனேசன், கௌரி, தாரணி, பவானி, கணேசன், கேதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயா, லிங்கநாதர், ஜெகதீஸ்வரன், ரவீந்திரன், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு மாமனும் நம்பியாரூரனின் மைத்துனரும் அபிராம், ஆதீஸ், சஞ்சீவன், தரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (105906)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நடராசா செல்லம்மா

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் அன்டர்சன் தொடர்மாடி, E 3/3 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா செல்லம்மா நேற்று (12.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா நடராசாவின் அன்பு மனைவியும், ராஜமோகன், சத்தியமோகனா, சந்திரா ஆகியோரின் அன்புத் தாயும், பத்மநாதன், பூரணசகாயம், சுகிர்தம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ண மலர்ச்சாலையில் (13.11.2010) சனிக்கிழமை மு.ப. 8 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப் பட்டு, தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு பொறளை கனத்தை மயா னத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்டர்சன் தொடர்மாடி E 3/3
நாரஹேன்பிட்டி,
கொழும்பு - 08. (105909)

தகவல்:
சீ. பத்மநாதன்
(மருமகன்)

## சின்னப்பிள்ளை பொன்னுத்துரை

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை பொன்னுத்துரை அவர்கள் நேற்று (12.11.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், குமாரமங்களதேவன், குமாரதேவி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்.), அனந்தவல்லி (ஆசிரியர், யாழ்/ அச்செழு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை), காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் குமாரலிங்கம் (சுவிஸ்), சந்திரசேகரம் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் யோகேஸ்வரன் (ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி), ஜெயக்குமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன், சங்கீதா, கிஷாணி, கிருஷன், கஜதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.11.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (105907)

தகவல்:
பொ. சந்திரசேகரம்
(மகன்)


## STUDENT VISA AND WORK PERMIT

இதோ யாழ். மண்ணில் உங்களுக்கோர் வரப்பிரசாதம்
13ஆம் 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்
உங்களை நேரில் சந்திக்க வருகிறோம்.

WORK PERMIT& STUDENT VISA
WORK PERMIT FOR UK& SINGAPORE
HOTEL FIELD
Engineers, Electricians, Plumbers, Welders, Mechanics, General Workers.

TWO YEARS EXPERIENCE IN THE RELEVANT FIELD.

கல்வியுடன் வேலைவாய்ப்பு
UK/ Cyprus& Zealand
Course Period One Year (6 Month Study 6 Month
Work After1 Year (Permanent Residence)
Students Who Have UK Degree Of Master Level
Qualification will have an Opportunity

NOVEMBER, DECEMBER, JANUARY INTAKE



FUTURE EDUCATION CONSULTANTS
Chandraleka Mawatha
Borella, Colombo - 08
Contact - 011 7631505/06
Mobile - 072 7955911, 072 2222610, 072 2222611

யாழ்ப்பாணத்தில் உதயன் கெஸ்ட் கவுஸ்,
இல. 392/6, கைலாச பிள்ளையார்
கோவில் அருகில், நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 8265456


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
# பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை வடக்கு - கிழக்கு (வடமாகாணம்)

### "வடக்கின் வசந்தம்" அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீதி நிர்மாணப் பணிகள்

வரலாற்றில் முதற்தடவையாக வடமாகாணத்தின் தேசிய வீதி அபிவிருத்தி வேலைகள் மேன்மைதங்கிய ஜனாதிபதியும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலின் கீழ் செயலாளர் அட்மிரல் வசந்த கரன்னாகொட நெடுஞ்சாலைகள் அமைச்சு, பணிப்பாளர் நாயகம் ஆர். டபிள்யூ. ஆர். பேமசிறி, மேலதிக பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. ஏ. எஸ். வீரசிங்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் பாரிய வீதி அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளன.

வடமாகாணத்தில் உள்ள பின்வரும் வீதிகள் சீன அரசாங்கத்தின் நிதி வழங்கலின் கீழ் சீன ரெயில்வே நம்பர் 5 எஞ்சினியறிங் குறூப் கம்பெனி லிமிட்டெட், சீன நஷனல் ஏரோ ரெக்னோலஜி இன்ரநஷனல் எஞ்சினியறிங் கோப்பரேசன் மற்றும் சினோ ஹைட்ரோ கோப்பரேசன் ஆகிய மூன்று கம்பெனிகளால் பின்வரும் பாரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வீதி புனரமைப்பு (Asphalt முறை மூலம்)

1. புனர்நிர்மாண மற்றும் முன்னேற்ற வேலை கண்டி - யாழ் வீதி (AA 009) - 153 km.
2. புனர்நிர்மாண மற்றும் முன்னேற்ற வேலை யாழ் - பலாலி வீதி (AB 018), யாழ் - பருத்தித்துறை வீதி (AB 020), புத்தூர் - மீசாலை வீதி (AB 032), யாழ் - காங்கேசன்துறை வீதி (AB 016) - 83.63 km.

வீதி புனரமைப்பு (DBST முறை மூலம்)

1. புனர்நிர்மாண மற்றும் முன்னேற்ற வேலை முல்லைத்தீவு - கொக்கிளாய் - புல்மோட்டை வீதி (B 297) - 42.4 km.
2. புனர்நிர்மாண மற்றும் முன்னேற்ற வேலை ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி (B 334), முல்லைத்தீவு - புளியங்குளம் வீதி (B 296) - 52.6 km.

மேற்படி வீதி புனரமைப்பு வேலைகள் அனைத்தும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று திட்டப் பணிப்பாளர்களின் கீழ் நடைபெறவுள்ளன. இவ் வேலைகளிற்கான கொன்சல்ரன் ஆன சென்றல் எஞ்சினியறிங் கொன்சல்ரன்சி பியூறோ (CECB) நியமிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எந்திரி வி.சுதாகர் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாணம் அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சு நிதியின் மூலம் யாழ்ப்பாண நகர பின்வரும் வீதிகள் Asphalt Surfacing முறை மூலம் செப்பனிடப்படவுள்ளன.

யாழ்ப்பாண நகர வீதிகள் புனரமைப்பு (Asphalt முறை மூலம்)

| | |
|---|---|
| யாழ் - மானிப்பாய் - காரைநகர் வீதி (AB 017) | - 0.0 - 3.00 km |
| கண்டிக்குளி - கொழும்புத்துறை வீதி (B 080) | - 0.0 - 2.56 km |
| கச்சேரி கடற்கரை துறைமுக வீதி (B 165) | - 0.0 - 3.62 km |
| நல்லூர் - ஓட்டுமடம் வீதி (B 305) | - 0.0 - 2.41 km |
| யாழ் - பொன்னாலை - பருத்தித்துறை வீதி (AB 21) | - 0.0 - 1.00 km |
| யாழ் - பண்ணை - ஊர்காவற்றுறை வீதி (AB 19) | - 0.0 - 1.00 km |
| சங்கிலித்தோப்பு - செம்மணி வீதி (B 399) | - 0.0 - 3.43 km |
| நாவாந்துறை - ஓட்டுமடம் வீதி (B 315) | - 0.0 - 1.21 km |
| மொத்தம் | - 18.23 km |

இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வேலைத்திட்டங்களிற்கான அடிக்கல் நாட்டும் விழாவும் வேலைகளை ஆரம்பிக்கும் வைபவமும் 13.11.2010 மற்றும் 14.11.2010 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு நகரம், முள்ளியவளைச் சந்தி, ஒட்டுசுட்டான் சந்தி, கிளிநொச்சி நகரம், யாழ்ப்பாண நகரம், புத்தூர் சந்தி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

வடக்கில் இத்திட்டங்களை முன்னெடுப்பதில் அர்ப்பணிப்புடன் பங்களிப்பு நல்கிவரும்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ பசில் ராஜபக்ஷ

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி
அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ டக்ளஸ் தேவானந்தா

நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ நிர்மல கொத்தலாவல

நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ கலாநிதி மேர்வின் சில்வா

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ நாமல் ராஜபக்ஷ

ஆகியோர் இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந்த வீதிப் புனரமைப்பு வேலைகள் யாவும் எதிர்வரும் முப்பது மாத காலப் பகுதிக்குள் நிறைவு செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

தகவல்: எந்திரி மோசஸ் மரியதாசன்
மாகாணப் பணிப்பாளர்/ வ-கி (வடக்கு)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

## விபத்துக்களில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.13

நேற்று மாலை 5 மணியளவில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு விலகி மின்சாரக்கம்பத்துடன் மோதியது.

இந்த விபத்தில் கல்வியங்காடு புலவனார் வீதியைச் சேர்ந்த எஸ். படிகைநாதன் (வயது 43), என். ஜெயக்குமார் (வயது 31) ஆகிய இயருவருமே படுகாயமடைந்தனர்.

இதேவேளை மண்கும்பான் சந்தியில் காலை 8 மணியளவில் ஹன்ரர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹன்ரரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த அளவெட்டி தெற்கு அலுக்கைச் சந்தியைச் சேர்ந்த க. பரராஜசேகரம் என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

(ஒ-319-78)

## திறந்த பல்கலை ஆங்கில கற்கை நெறி

யாழ்ப்பாணம், நவ.13

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தின் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கு புதிதாக பதிவுசெய்த மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாக உள்ளதாக இணைப்பாளர் [illegible]

## மரண அறிவித்தல்

### டெனி றாஜேந்திரா



நாரந்தனை வடக்கு, பெரியபுலம் வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட டெனி றாஜேந்திரா நேற்றுமுன்தினம் (11.11.2010) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் யோசெப் அன்ரன் தேவதாசன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்) - சிசிலியா (ஓய்வுபெற்ற வைத்திய தாதி) தம்பதியரின் ஏகபுத்திரனும் ஜெயதர்சினி, சத்தியராஜ் (லண்டன்), அருட்சகோதரி அமிர்தா (திருக்குடும்ப கன்னியர்மடம், ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யேசுதாசன், ஜெயபாலன், காலஞ்சென்ற மரியதாஸ் ஆகியோரின் அன்பு மருமகனும், திரு. திருமதி பிரான்ஸிஸ் ஸ்ரெலா செல்வநாயகம் - கெலன்மேரி (பிரான்ஸ்), திரு. திருமதி மரியநாயகம், ஜெயநாயகம், திரு. திருமதி சிவநாதன் றாஜினி, திரு. திருமதி மரியதாஸ், ஜசிந்தா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.11.2010) சனிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பி. ப. 3 மணியளவில் நாரந்தனை சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியபுலம், வீதி,*
*நாரந்தனை வடக்கு,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்
சிசிலியா தேவதாசன்
(105903) (குடும்பத்தினர்)

## கட்டைவேலி- நெல்லியடி ப. நோ.கூ. சங்கம்

## அறிவித்தல்

### கணக்காய்விற்கான மீதிகளை உறுதிப்படுத்தல்

(கிராமிய வங்கி நிலையான வைப்பு, ஏனைய வைப்பு சங்க வருமதி, செல்மதி)

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் 31.05.2010 காலப்பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சங்க கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் எதிர்வரும் 15.11.2010, 16.11.2010, 18.11.2010, 19.11.2010 ஆகிய நாள்களில் சமூகமளித்து தங்கள் புத்தகப்படியான மீதிகளை கிராமிய வங்கிப் புத்தகங்களுடன் ஒப்பிட்டு உறுதி செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் மேற்படி கணக்காய்விற்காக 19.11.2010ந் திகதிக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் கடமை நாள்களில் சமூகமளித்து 31.05.2010ல் தங்கள் மீதிகளை உறுதிப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

- பொதுமுகாமையாளர்.

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்

அமரர்
மதியாபரணம் புஸ்பராணி



தோற்றம்
1960.01.01

மறைவு
2008.11.06

எம் அன்புத் தாயே
ஆண்டுகள் இரண்டு சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்
தினம் தினம் உம் நினைவுகள்
எம் மனதினிலே
எங்கே சென்றீர்கள்
உங்கள் ஏழு செல்வங்களும் தவிக்கின்றோமம்மா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் அன்னை எங்களை விட்டுச் சென்ற துயரம்
எம் அன்னையே நீங்கள் மரணிக்கவில்லை
எம்மனங்களில் தெய்வமாய் வாழ்கின்றீர்கள்..

இன்று (13.11.2010) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவரது 2ஆவது ஆண்டு நினைவுப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

மதியாபரணம் (கணவர்),
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்கள் மட்டுமே அனுபவித்த னர். ஆனால் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் தமது அபிலாஷை களை எட்டாத நிலையில் தொடர்ந் தும் ஏமாற் றப்பட்டனர்.

1926ஆம் ஆண்டு கண்டியர் ஆட்சியில் தமிழர்கள் சமஷ்டி கேட்டனர். கண்டியர் வடக்கு - கிழக்கை தனிமாநிலமாக அங்கீகரித்தனர்.

1944ஆம் ஆண்டு கம் யூனிஸ்டுக்கள், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்றும் சுயநிர்ணய உரிமைக்கு தமி ழர்களுக்கு அருகதை யுடை யவர்கள் என்றும் பிரிந்து செல்லும் உரிமை அவர்க ளுக்கு உண்டு என்றும் வாதிட்டனர்.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா, இலங்கை - இந்திய போன்ற ஒப்பந்தங்களும் தமிழர் தாயகக் கொள்கையை அங்கீகரித்துள்ளன.

1987இல் செய்துகொள் ளப்பட்ட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான முக்கிய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பது உறுதி செய்யப் பட்டிருந்தது.

அவ்வாறு வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை அரசமைப்பில் உறுதி செய்து கொண்டுவரப்படும் தீர்வு மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியும் - என்றார் அவர்.

(உ-ஐ)

கார் விற்பனைக்கு
(NISSAN SUNNY CB12)
கார் விற்பனைக்குண்டு.
16-xxxx
Tel : 0774826832

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS - 2011 A/L
Electricity
ஆரம்பம்:- 15/11/2010 (Mon)
Mon, Wed:- (5.00- 6.00)Pm
By- A.Anapayan BSc (Hons)

## நாவற்குழி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் காணிகளில் அத்துமீறி குடிசைகளை அமைத்துக் குடியேறி உள்ளனர். இதைத் தடுப்பதற்கு யாழ். அரச அதிபரோ, யாழ்ப்பாண தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளரோ உரிய நடவடிக் கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

இராணுவத்தினரின் ஆதரவுடன்தான் இந்தக் குடியேற்றங்கள் நிறைவேறி உள்ளன. எமது பாரம்பரிய பூமியில் எம்மைச் சிறுபான்மையினராக ஆக்குவதற்கான அரசின் அப்பட்டமான இனவாதமே இது என்று நாங்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றோம்.

பலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் நாட்டினால் மேற்கொள்ளப்படும் யூத குடியேற்றங்களுக்கு இது ஒப்பானது. அண்மையில் திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் கண்டல்காடு என்ற இடத்தில் மீள் குடியேறுவதற்காக முஸ்லிம்கள் குடிசைகளை அமைக்க முற்பட்டபோது அரச அதிபரின் உத்தரவின்படி பொலிஸாரினால் அம் முஸ்லிம் மக்களின் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

### பகிரங்க அழைப்பு

உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாகவும், படை முகாம்கள் அமைக்கப் பட்டமையாலும் அகதிகளாக்கப்பட்ட எமது மக்கள் அரச காணிகளில் அத்துமீறி குடியேறுவதுதான் ஒரே வழி என்பதை அரசின் நடவடிக்கைகள் காட்டுகின்றன என நாங்கள் கருதுகிறோம். எனவே, இவ்வாறான அகதிகளை அரச காணிகளில் குடியேற முன்வருமாறு நாங்கள் பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம்.

நாவற்குழி சிங்கள குடியேற்றம் தொடர்பாகத் தமிழர் தரப்பில் எடுக்கவேண்டிய சட்ட நடவடிக்கைகள் பற்றியும் நாம் ஆராய்ந்து வருகிறோம். இப்பிரச்சினைக்கு அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

-இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசாரணையின் முடிவில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது செல்லும் - என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பை அளித்த நீதிபதி விக்ரம்ஜித் சென், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் எஞ்சியுள்ளவர்கள், இந்திய மண்ணை சட்ட விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன.

எனவே, அந்த இயக்கத்தின் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடித்து, கடந்த மே மாதம் 14 ஆம் தேதி மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பு உறுதி செய்யப் படுகிறது - என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட நீங்கள் இதே நிலையைக் காணலாம். 1949ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை தமது அடையாளத்தைத் தக்க வைப்பதற்காகத் தமிழர்கள் கடுமையாகப் போராடி வருகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் தமக்கான பொது வரலாறு, பண்பாடு மற்றும் மொழியைப் பகிர்ந்துகொண்டு ஒரே தேசமாக வாழ்கிறார்கள். எனவே அங்கு அவர்கள் தமது விவகாரங்களைத் தாமே நிர்வகிக்கக் கூடிய சட்டபூர்வ நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று இந்த நாட்டுக்குள்ளே ஏற்படுத்தப்பட வேண்டும்.

காலம் காலமாக தமிழ் இனத் தலைவர்கள் சிங்கள அரசுகளுடன் பேச்சுக்களை நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், அவையெல்லாம் தோல்வியிலேயே முடிந் துள்ளன. அரனைத்துக் கட்சிக் குழு கூட இது வரைக்கும் ஒரு விளைவையும் கொண்டு வரவில்லை.

அகிம்சை வழியிலான போராட்டங்கள் எல்லாம் தோல்வி அடைந்த நிலையில் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். போர் முடிந்ததைத் தொடர்ந்து அந்த ஆயுத வழியிலும் கூட இப்போது முடிவுக்கு வந்துவிட்டது. ஜனநாயக வழியிலான பாதையில் நடக்க வேண்டியவர்களாக தமிழர்கள் இப்போது நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள்.

இன்று அர்த்தங்கள் வேறுபடலாம். ஆனால் தமிழர்களின் அபிலாஷைகள் இன்னும் மாறவில்லை. போரின் முடிவு என்பது எமது மக்களின் அபிலாஷைகளின் முடிவு அல்ல. தமிழர்களின் மனங்களில் உண்மையான சமாதானம் குடிகொள்ள வில்லை.

தமிழ் மக்களுக்கு வேறு வழிகள் இல்லை. எனவே உலகில் உள்ள அனைத்து ஜனநாயக வழிகளிலும் மக்கள் தமது அபிலாஷைகளை அடைய முயற்சிப்பார்கள்.

இந்த நாட்டில் உண்மையில் சமாதான மும் ஒருமைப் பாடும் ஏற்பட வேண் டும் எனில் இனப் பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வு காணப்பட வேண்டும். தன்னிறைவுள்ள சட்டபூர்வ கட்டமைப்பு ஒன்று தமிழ் பேசும் மக்களுக்காக வடக்கு - கிழக்கில் ஏற் படுத்தப்படுவதன் மூலம் அது காணப் பட வேண் டும்.

அதனை சமஷ்டி என்றோ எந்தப் பெயர் கொண்டும் அழைக்கலாம். அது ஒரு பொருட் டல்ல, ஆனால் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதுதான் தேவை; பெயரல்ல,

அது நடைபெறாத வரையில் இந்த நாட்டில் உண்மையான அமைதியும்வே ஒருமைப்பாடும் ஏற்படாது. தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகள் தொடரும். இது நாட்டுக்கு நல்லதல்ல - என்றார். (உ)

## சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் வடக்கை சொந்த இடமாகக் கொண்ட தங்கராசா என்பவர் சாட்சியம் அளிக்கையில், ''எமது சொந்த இடங்களில் இருந்து நாம் இடம்பெயர்ந்து முப்பது வருடங்களாகின்றன. ஆனால், நாம் இதுவரை மீள்குடியேற்றப்படவில்லை. ஆனால், ஒரு மாதத்துக்கு முன்னர் யாழ். ரயில் நிலையத்தில் வந்திறங்கிய சிங்களவர்கள் நாவற்குழியில் உள்ள அரச காணிகளில் குடியேறி வருகின்றனர். இது எந்த விதத்தில் நியாயம்?'' - என்று கேள்வி எழுப்பினார்.

சி.கிருஷ்ணசாமி என்பவரும் வலிகாமம் வடக்கில் மீளக் குடியேற முடியாத நிலைமை குறித்து தமது சாட்சியத்தில் தெரிவித்தார். சுமார் 35 பேர் வரை இங்கு சாட்சியம் அளித்தனர்.

இதன் பின்பு முற்பகல் 11 மணி அளவில் காரைநகர், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக மக்களுக்காக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தில் விசாரணைகள் நடைபெற்றன.

தொடர்ந்து நேற்று மாலை யாழ். செயலத்தில் விசாரணைகள் நடைபெற்றன.

தொடர்ந்து பிற்பகலுக்குப் பின்னர் யாழ். செயலகத்திலும் பின்னர் குருநகர் பொது நோக்கு மண்டபத்திலும் ஆணைக் குழுவின் விசாரணைகள் நடைபெற்றன.

ஆணைக்குழுவால் சாட்சியம் அளிப்பதற்காக அழைக்கப்பட்டிருந்த முக்கியமான சிவில் சமூகப்பிரதிநிதிகள் அங்கு வந்திருந்தனர். அவர்களில் பேராசிரியர்களான ரட்ணஜீவன் கூல், சி.க. சிற்றம்பலம், பொன். பாலசுந்தரம்பிள்ளை மற்றும் சீ.வீ. கே. சிவஞானம், சு. பரமநாதன், 'உதயன் பிரதம ஆசிரியர் ம. வ. கானமயில்நாதன் அடுத்தடுத்து சாட்சியம் அளித்தனர்.

யாழ். செயலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். குருநகரிலும் சாட்சியம் அளிக்க பலர் திரண்டிருந்தனர். (ஒ-சி-15-14)


யாழ். நகரில்
முதல் முறையாக நம்பமுடியாத கட்டணக் கழிவில்
சர்வதேச கற்கை நெறிகள்
நீங்கள் காலவிரயமின்றிப் பட்டதாரியாக வேண்டுமா? சர்வதேச அங்கீகாரம் கொண்ட பட்டப்படிப்பையும், அதற்கு நிகரான தொழிலையும் எதிர்பார்க்கிறீர்களா? காலத்தை வீணடிக்காது நன்கு உழைத்துச் சமூகத்திலே முன்னேற வேண்டுமா?
கவலையை விடுங்கள் இன்றே எம்மிடம் விரையுங்கள்....
நீங்கள் குறுகிய காலத்தில் பின்வரும் கற்கை நெறிகளைப் பெற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நாடி வந்திருக்கின்றது.
100% விசா உத்தரவாதம்
Pre. MBA (Master of Business Administration)
To whom : Degree holders, non business degree holders HNDA, HNDM
(Advanced Technical Institute)
Final Degree (Top Up) MBA in UK
Course Duration: 9 Months
After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree @ London (UK), USA, Canada, Australia, Newzealand
இவ்வாறான பயிற்சி நெறிகளுக்கு 100% நல்ல வேலைவாய்ப்பு வெளிநாடுகளில் உண்டு
Foundation Diploma in Hospitality Management
Foundation Diploma in Nursing (Health & Social Care)
6 Months — Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia
Foundation Diploma in Management
Foundation Diploma in Human Rights & Principles of laws
3 Months — Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia
இவ் அடிப்படை நெறிகளைக் கற்பதினால் வெளிநாடுகளில் கற்கை நெறிகளை இலகுவாகக் கற்க முடியும்
IELTS (International English Language Testing System)
We guarantee minimum band 6.0 Upwards
பிரபல விரிவுரையாளர்கள் மூலம் புதிய நவீன முறைக்கமையவும் Audio, Video Visuals ஊடாகக் கற்பிக்கப்படுகிறது.
Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது
Spoken English - 6 Months
Diploma in English - 6 Months
Advanced Diploma in English - 4 Months
விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பயிற்சிகள், இலகு விளக்கங்களுடன் மாணவர்கள் எளிதாகக் கற்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.
உங்களின் பட்டப்படிப்புச் சம்பந்தமான கற்கைநெறி வழிகாட்டுதல்களுக்கு இத்துறையிலே மிக அனுபவம் வாய்ந்த எமது சட்டத் தரணிகள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றார்கள்.
Courses' Commence on: 14,16 /11/2010
காலை: 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு:
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
(BCHS)
Tel : 021 222 4550,
Hot lines : 077 7222422, 071 4299935 E-mail : info@bchs.lk
No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்
நன்றிகள் தினம்


வரதீட்சை மாலை விரதாரம்பம்
வித்யா மாலை விரதாரம்பம்
காலம்: நாளை (14.11.2010) ஞாயிறு மு.ப. 10 மணி
இடம்: யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி, யாழ்ப்பாணம்
* ஐஸ்வரியம், ஆரோக்கியம், குடும்பஷேமம் பெற்று சிறப்புறவும்
* மாணவ, மாணவிகள் கல்வியில் உன்னத நிலை அடையவும்
21 தினங்கள் விரதமிருந்து சம்பூர்ண அவதாரமாகிய ஸ்ரீ அம்மா பகவானின் பூரண அருளைப்பெற அன்புடன் அழைக்கின்றோம்.
ஏகத்துவ நிலையம்,
யாழ். மாவட்டம்.
(105912)

தொழிற் பயிற்சிகள்
★ றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்
★ Mobile Phone Repairing
★ ஏயர் கொண்டிசனிங்
சகல பயிற்சிகளுக்கும் முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப் பட்டு சான்றிதழ் வழங்கப்படும். தொழில் வாய்ப்பும் வழங்கப்படும்.
ஆரம்பம்: 13.11.2010, 15.11.2010
Jaffna Technical Institute
விபரங்களுக்கு:
45, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயில் முன்வீதி,
தொ.பே: 0718561654
கிளை:
New Asian Center
56/15, ஸ்ரான்லி வீதி,
(சம்பத் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.0779254078
(சி/572769)

ACA கோயில் வாசல்
கே.கே.எஸ். வீதி, இணுவில்
பௌதிகவியல்
A/L 2011
சடப்பொருளியல் (மேற்பரப்பு விசை)
திரு. குமரன்
ஆரம்பம்: 17.11.2010 (புதன்) பி.ப. 4.30 மணி
(சி/572808)

சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சிநெறி
அதிபர், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள்
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள்
50% கட்டணத்துடன் பயிற்சியில் சேர
இன்றும் நாளையும் கடைசிநாள்
MyWay English 182, Stanley Rd Jaffna 0773363456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமி[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org